## நான்காம் பகுதி

இலங்கை மத்திய வங்கியினதும் வங்கி நிறுவனங்களினதும் கடமைகளையும் தொழிற்பாடுகளையும் பற்றிய 1982 ஆம் ஆண்டின் முதன்மைச் சட்டவாக்கங்கள்.


1. 1982 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, தேசிய சேமிப்பு வங்கி (திருத்தச்) சட்டம் i

2. 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டம் ii

3. 1982 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, செல்வவரி மீதான மிகைவரிச் சட்டம் xi

4. 1982 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, வருமானவரி மீதான மிகைவரிச் சட்டம் xii

5. 1982 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம் xvii

6. 1982 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, கடன்கள் (சிறப்பேற்பாடுகள்) சட்டம் xxxix

7. 1982 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன (திருத்தச்) சட்டம் xL

8. 1982 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, முத்திரைத் தீர்வைச் சட்டம் xLiii

# 1982ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க, தேசிய சேமிப்பு வங்கி (திருத்தச்) சட்டம்

(1982, பெப்ரவரி மாதம் 23ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

1971 ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க, தேசிய சேமிப்பு வங்கி சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

1. இச்சட்டம், 1982ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க, தேசிய சேமிப்பு வங்கி (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. ஆயிரத்துத்தொளாயிரத்து எழுபத்தோராம் ஆண்டின் 30ஆம் இலக்க, தேசிய சேமிப்பு வங்கிச் சட்டத்தின் 47ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(அ) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின் வரும் புதிய உட்பிரிவை, இடுவதன்மூலம்;—

"(2) பத்து ரூபாவாகவோ அல்லது அதற்கு அதிகமானதாகவோ திரண்டவையாய் கணக்கொன்றிலுள்ள எவையேனும் பணங்கள், (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்கக் கைமாற்றப்படுவதன் முன்னர் வங்கியானது எந்த ஆளுடைய கணக்கு உறங்குநிலையிலிருக் கின்றதோ அந்த ஆளின் கடைசியாக அறியப்பட்ட முகவரிக்கு, கோரப்படாத வைப்புக்கள் நிதியத்துக்கு அத்தகைய பணங்களைக் கைமாற்றுவதற்கான அதனது முன்னத்தைத் தெரிவித்து எழுத்தி லான கடிதத் தொடர்பொன்றினை அனுப்பிவைத்தல் வேண்டுமென் பதுடன், எழுத்திலான அத்தகைய கடிதத்தொடர்பு அனுப்பப்பட்ட தேதிக்குப் பின்னர் மூன்று மாதங்களுக்குள் மறுமொழி எதுவும் கிடைக்கப் பெறுவிடின் எந்த ஆளின் பெயரில் அந்தக் கணக்கானது இருக்கின்றதோ அந்த ஆளின் பெயரையும், அந்தக் கணக்கானது ஏழு ஆண்டுகள் கொண்ட ஒரு காலப்பகுதிக்கு உறங்குநிலையிலிருந் திருக்கின்றதென்ற நிகழ்வையும், அந்த கணக்கிலிருக்கின்ற பணங்கள் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் கோரப்படாத வைப்புகள் நிதியத்திற்கு குறித்துரைக்கப்பட்ட தேதியொன்றில் கைமாற்றப்படு வதற்கு முன்னப்பட்டுள்ளன என்பதையும் குறிப்பிடுகின்ற அறிவிப் பொன்றை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் கசெற் றில் வெளியிடுதலும் வேண்டும்.":

(ஆ) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப்பதிலாக பின் வரும் புதிய உட்பிரிவை இடுவதன்மூலம்:—

"(3) கணக்கானது தமது பெயரில் இருந்ததென அல்லது எந்த ஆளிடமிருந்து தான் உரித்தைப் பெறுகின்றாரோ அந்த ஆளின் பெய

ரில் இருந்ததென சபை திருப்திப்படுமளவுக்கு எண்பிப்பைக் கொடுத்துதவும் எவரேனும் ஆளின் விருப்பத்தின் பேரில் கோரப்படாத வைப்புகள் நிதியத்திற்கு கைமாற்றப்பட்ட எவையேனும் பணங்கள் அல்லது (1)ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் ஒரு விசேட ஒதுக்கு நிதியத்திற்குக் கைமாற்றப்பட்ட எவையேனும் பணங்கள், அப்பணங்கள் தொடக்கத்தில் எந்தக் கணக்கில் இருந்தனவோ அந்த கணக்குக்கு மீளக் கைமாற்றப்படலாம்,''; அத்துடன்

(இ) அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக, பின்வரும் புதிய பிரிவை இடுவதன் மூலம்:—

"(5) கணக்கானது தமது பெயரில் இருந்ததென அல்லது எந்த ஆளிடமிருந்து தான் உரித்தைப் பெறுகின்றாரோ அந்த ஆளின் பெயரில் இருந்ததென சபை திருப்திப்படுமளவுக்கு எண்பிப்பைக் கொடுத்துதவும் எவரேனும் ஆளின் விருப்பத்தின் பேரில் (4) ஆம் உட்பிரிவின் கீழ் ஒரு விசேட ஒதுக்கு நிதியத்திற்குக் கைமாற்றப்பட்ட எவையேனும் பணங்கள், அப்பணங்கள் எந்தக் கணக்கில் இருந்தனவோ அந்தக் கணக்குக்கு மீளக் கைமாற்றப்படலாம்.''.

## 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டம்

*[1982, மே மாதம் 20 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

கம்பெனிகள் தொடர்பான சட்டத்தைத் திருத்துவதற்கும் திரட்டுவதற்குமானதொரு சட்டம்.

1. (1) இச்சட்டம், 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

(2) (அ) V ஆம் பாகம் தவிர்ந்த இச்சட்டத்தின் ஏற்பாடுகள் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அமைச்சர் நியமிக்கும் அத்தகைய தேதியன்று (இது, இதனகத்துப் பின்னர் ''நியமித்த தேதி'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(ஆ) இச்சட்டத்தின் V ஆம் பாகத்தின் ஏற்பாடுகள் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அமைச்சர் குறித்துரைக்கும் அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

### பாகம் XIV

### வங்கிகள் தொடர்பான ஏற்பாடுகள்

411. ஒரு ''வங்கித் தொழில் கம்பெனி'' என்பது பின்வரும் தொழில்வகைகளுள் ஏதேனும் ஒன்றில், அல்லது ஒன்றிற்கு மேற்பட்டவற்றில் அது ஈடுபட்

டிருக்கின்ற போதிலும், காசோலை மூலமான, வரைவு மூலமான அல்லது கட்டளை மூலமான கேட்கும் போதான மீளப் பெறுகைக்கு அமைவாக, எந்தக் கம்பெனி நடப்புக் கணக்கில் அல்லது வேறுவகையில் பண வைப்புக்களை ஏற்றுக் கொள்வதைத் தமது பிரதான தொழிலாகக் கொண்டு நடாத்துகின்றதோ அந்தக் கம்பெனி என்று பொருள்படும். அந்தத் தொழில் வகைகளாவன:—

(அ) பணத்தைக் கடன் வாங்குதல், திரட்டுதல், அல்லது எடுத்தல்; பிணைப் பொறுப்பின் மீதோ அல்லது பிணைப் பொறுப்பின்றியோ கடன் கொடுத்தல், அல்லது முற்பணமாகக் கொடுத்தல், கைமாற்றத்தக்கதாக அல்லது இணங்கத்தக்கதாக இருந்தாலும் அல்லாவிட்டாலும் நாணய உண்டியல்கள், உண்டியல்கள், வாக்குறுதிப் பத்திரங்கள், கூப்பன்கள், வரைவுகள், ஏற்று பொருட் பொறுப்புப் பட்டியல்கள், புகை வண்டிப் பற்றுச் சீட்டுகள், கட்டாணைகள், தொகுதிக் கடன் பத்திரங்கள், சான்றிதழ்கள், கட்டுப் பணப் பத்திரங்கள் என்பனவும் வேறு சாதனங்கள் அத்துடன் பிணைப் பொறுப்புக்கள் என்பவற்றைத் தயாரித்தல் ஏற்றுக் கொள்ளுதல், கழிவு வைத்தல், வாங்குதல், விற்றல், சேகரித்தல் அத்துடன் அவற்றைக் கையாளுதலும், நாணயக் கடிதங்கள், பயணிகள் காசோலைகள் என்பவற்றையும் சுற்றறிக்கைத் தாள்களையும் கொடுத்தலும் வழங்குதலும், ஈருலோகக் கட்டி, உலோக நாணயம் என்பவற்றை வாங்குதலும் விற்றலும் கையாளுதலும், பிற நாட்டு வங்கித் தாள்கள் உட்படப் பிறநாட்டு நாணயமாற்றினை வாங்குதலும் விற்றலும், கையாளுதலும், கொள்ளுதலும், வைத்திருத்தலும், தரகின்மீது வழங்குதலும், கையிருப்பு, நிதியங்கள், பங்குகள், தொகுதிக் கடன்கள், தொகுதிக் கடன் கையிருப்பு, பிணை முறிகள், கடப்பாடுகள், பிணைப் பொறுப்புக்கள், என்பனவற்றையும் எல்லாவகையான முதலீடுகளையும் கையாளுதல்; பிணைகள், கட்டுப் பணப்பத்திரங்கள் என்பனவற்றை அல்லது, ஆக்கக் கூறுகளின் சார்பிலான வேறுவகைப் பிணைப்பொறுப்புக்கள், அல்லது பிறவற்றைக் கொள்வனவு செய்தலும்விற்றலும் கடன்களையும் முற்பணங்களையும் இணங்கிக்கொள்ளுதல், எல்லாவகையான பிணைப் பொறுப்புக்கள், கட்டுப் பணப் பத்திரங்கள் அல்லது பணவைப்பின் மீதான பெறுமதியான பொருட்கள் என்பவற்றைப் பெற்றுக் கொள்ளல், அல்லது பாதுகாப்பான கட்டுக் காவலுக்காகவும் வேறுவகையிலும் அத்துடன், பாதுகாப்பான பண வைப்பின் தொழிலைக் கொண்டு நடாத்துவதற்காகவும், பணத்தையும் பிணைப் பொறுப்புக்களையும் சேகரித்தலும் அனுப்பி வைத்தலும்;

(ஆ) அரசாங்கத்திற்காக அல்லது உள்ளூர் அதிகாரசபைகளுக்காக அல்லது வேறெவரேனும் ஆளுக்காக, அல்லது ஆட்களுக்காக முகவராகப் பதிற் கடமையாற்றுதல்; வங்கித் தொழில் கம்பெனியொன்ருகவில்லாத ஏதேனும் கம்பெனியின் முகாமை செய்யும் முகவரின் தொழில் தவிர்ந்த ஏதேனும் விவரணத்தினதான முகவராண்மைத் தொழிலைக் கொண்டு

நடாத்துதல், இதனுள் அற்றேணித் தத்துவகாரராகச் செயலாற்று தலும், பொறுப்பு விடுவிப்புகளையும் பற்றுச் சீட்டுகளையும் கொடுத் தலும் அடங்கும்;

(இ) பொதுக் கடன்களுக்காகவும் தனியார் கடன்களுக்காகவும் ஒப்பந்தம் செய்தலும், அவற்றிற்காகப் பேரம் பேசுதலும் அவற்றை வழங்குதலும்;

(ஈ) அரச, உள்ளூர் அல்லது வேறு கடன்களை அல்லது ஏதேனும் கம்பெனி யின், கூட்டுத்தாபனத்தின் அல்லது கழகத்தின் பங்குகளை, பங்குத் தொகுதியை, தொகுதிக் கடன்களை, அல்லது தொகுதிக் கடன் தொகு தியைப் பகிரங்கமாக அல்லது தனிப்பட்ட வழங்குதலை ஊக்குதலும், பயனுறுத்தலும், காப்பீடு செய்தலும், உத்தரவாதமளித்தலும், கீழ் வரைதலும், முகாமையில் பங்கு பற்றுதலும், அதனைக் கொண்டு நடாத்துதலும் அத்துடன் ஏதேனும் அத்தகைய வழங்குதலின் நோக் கத்துக்காகப் பணம் கடன் கொடுத்தலும்;

(உ) ஒவ்வொருவகையான உத்தரவாதத்தையும், நட்டோத்தரவாதத் தொழிலையும் கொண்டு நடாத்துதலும்;

(ஊ) முன்பு இருக்கின்ற அல்லது புதிய தொழிற் பொறுப்பு முயற்சி எதனை யும் அல்லது கைத்தொழிலை மேம்படுத்துதல் அல்லது அதற்கு நிதியுதவி அளித்தல் அல்லது ஊக்குவிப்பதில் அல்லது நிதியளித்தலில் உதவி யளித்தல், அத்துடன் செழுமத்தின் துணை கொண்டு அல்லது வேறு வகையில் அதனை அபிவிருத்தி செய்தல் அல்லது உருவாக்குதல்;

(எ) ஏதேனும் அசைவற்ற ஆதனத்தை அல்லது அசைவுள்ள ஆதனத்தை, கொள்வனவு மூலம், குத்தகைமூலம், கொடுத்து மாறல்மூலம், வாடகை மூலம் அல்லது வேறுவகையில் கொள்ளுதல், அத்துடன் எந்த உரிமை கள் அல்லது சிறப்புரிமைகள் கொள்ளுவதற்கு அவசியமானவையென அல்லது வசதியானவையெனக் கம்பெனி கருதக் கூடுமோ அந்த உரி மைகள் அல்லது சிறப்புரிமைகள் எவற்றையும் கொள்ளுதல், அல்லது கம்பெனியின் அபிப்பிராயத்தில் கம்பெனியால் கொண்டிருக்கப்பட்ட எவையேனும் பிணைப் பொறுப்புக்களைப் பெற்றுக் கொள்வதை வசதிப் படுத்தக் கூடியனவாகவுள்ள, அல்லது அஞ்சப்பட்ட நடத்தை அல்லது பொறுப்பைத் தடைசெய்யக் கூடியவான அல்லது குறைக்கக் கூடியன வான எவையேனும் உரிமைகளையும் சிறப்புரிமைகளையும் கொள்ளுதல்;

(ஏ) கம்பெனியின் உடைமையாக வரக்கூடியனவான அசைவற்ற ஆதனம் அசைவுள்ள ஆதனம் யாவற்றையும், அதன் உரிமைக் கோரிக்கைகள் எவற்றினதும் திருத்திக் கிணங்க அல்லது ஓரளவு திருத்திக்கிணங்க முகாமை செய்தல், விற்றல் அத்துடன் பெற்றுக் கொள்ளல்;

(ஐ) எவையேனும் கடன்களுக்கான அல்லது முற்பணங்களுக்கான பிணைப் பொறுப்பின் ஒரு பாகமாக அமையக் கூடிய அல்லது ஏதேனும் அத்

தகைய பிணைப் பொறுப்புடன் தொடர்புபடக்கூடிய அசைவற்ற அல்லது அசைவுள்ள ஏதேனும் ஆதனத்தினையும் அல்லது ஏதேனும் ஆதனத்தின் மீதான உரிமை, உரித்து, அல்லது அக்கறை என்பவற்றையும் கொள்ளுதலும், கொண்டிருத்தலும் கையாளுதலும்;

(ஒ) நம்பிக்கைப் பொறுப்புக்களைப் பொறுப்பேற்றலும் நிறைவேற்றலும்;

(ஓ) நிறைவேற்றுநராக நம்பிக்கைப் பொறுப்பாளராக அல்லது வேறுவகையில் மரணச் சொத்துக்களின் நிருவாகத்தைப் பொறுப்பேற்றல்;

(ஔ) அந்தக் கம்பெனியின் குறிக்கோள்களின் இயல்பொத்த குறிக்கோள்களைக் கொண்ட வேறு கம்பெனி எதிலும் பங்குகளை எடுத்தல், அல்லது வேறுவகையில் கொள்ளலும் கொண்டிருத்தலும்;

(க) கம்பெனியின் ஊழியர்களுக்கு, அல்லது முன்னைய ஊழியர்களுக்கு, அல்லது அத்தகைய ஆட்களைச் சார்ந்தோருக்கு அல்லது அவர்களுடன் தொடர்பானவர்களுக்கு நன்மை பயப்பதாகக் கணிக்கப்பட்ட கழகங்கள், நிறுவனங்கள், நிதியங்கள், நம்பிக்கைப் பொறுப்புக்கள் அத்துடன் வசதிகள் என்பவற்றைத் தாபித்தல், அவற்றிற்கு ஆதரவளித்தல் அல்லது தாபிக்கவும் ஆதரவளிக்கவும் உதவி செய்தல்; ஓய்வூதியங்களையும் படிகளையும் கொடுத்தலும், காப்புறுதிக்காகக் கொடுப்பனவுகளைச் செய்தலும், தருமம் சார்ந்த அல்லது நலன்புரி குறிக்கோளுக்காக அல்லது ஏதேனும் பொருட்காட்சிக்காக அல்லது ஏதேனும் பகிரங்கமான, பொதுவான அல்லது பயன்பாடுள்ள குறிக்கோளுக்காக ஒப்பப் பணம் அளித்தல் அல்லது பணத்திற்கு உத்தரவாதமளித்தல்;

(ங) கம்பெனியின் நோக்கங்களுக்கு அவசியமானவையான அல்லது வசதியானவையான ஏதேனும் கட்டிடத்தை அல்லது எவையேனும் வேலைகளைக் கொள்ளுதல், நிருமானித்தல், பேணல் அத்துடன் திருத்துதல்;

(ச) கம்பெனியின் ஆதனங்கள், உரிமைகள் எல்லாவற்றையும் அல்லது ஏதேனும் பகுதியை விற்றல், சீராக்கல், முகாமை செய்தல், விருத்தி செய்தல், கைமாறல், குத்தகைக்குவிடல், ஈடுவைத்தல், கையுதிர்த்தல், அல்லது கணக்காக மாற்றல் அல்லது வேறுவகையில் கையாளுதல்;

(ஞ) எவரேனும் ஆளின் அல்லது ஏதேனும் கம்பெனியின் தொழில் முழுவதையும் அல்லது அதன் ஏதேனும் பகுதியை, அத்தகைய தொழிலானது இப்பிரிவில் எடுத்துக் கூறப்பட்ட அல்லது விவரிக்கப்பட்ட இயல்பினதாக இருக்கும்போது கொள்ளுதல் அல்லது பொறுப்பேற்றல்;

(ட) கம்பெனியின் தொழில் மேம்பாட்டுக்கு அல்லது முன்னேற்றத்திற்கு இடைநேர் விளைவானவையான அல்லது உகந்தவையான அத்தகைய வேறு எல்லாவற்றையும் செய்தல்;

(ண) முகாமை உசாத்துணைச் சேவைகளில் ஈடுபடுதல்;

(த) வங்கித்தொழில், கணக்கீடு, பெறுமான மதிப்பீடு செயற்றிட்டம் மற்றும் நாணய மதிப்பீடு, மற்றும் இவற்றையொத்த விடயங்கள் என்பவனவற்றில் பயிற்சிக்கு ஏற்பாடு செய்தல்;

(ந) வாடகைக் கொள்வனச் சேவைகள், தொழிற்சாலை வசதிகள். குத்தகை மற்றும் குதப்படுத்தல் ஆகிய தொழில்களில் ஈடுபடுதல்;

(ப) அபிவிருத்திக்கென நடுத்தர மற்றும் நெடுங்காலக் கடன்வசதிகளை ஏற்பாடு செய்தல்.

*412.* (1) கம்பெனி, சழகம் அல்லது பங்காண்மை எதுவும் இச்சட்டத்தின் கீழ் ஒரு பகிரங்கக் கம்பெனியாகப் பதிவு செய்யப்பட்டிருந்தாலன்றி, வங்கித் தொழிலைக் கொண்டு நடாத்துதலாகாது.

(2) இலங்கைக்கு வெளியே உருவாக்கப்பட்ட கம்பெனி, கழகம் அல்லது பங்காண்மை எதுவும் —

(அ) வெளிநாட்டு அரசாங்கத்தின் ஏதேனும் எழுத்திலான சட்டத்தை, அரச பட்டயத்தை அல்லது உரிமைப்போலையைப் பின்பற்றி அக்கம் பெனி உருவாக்கப்பட்டிருந்தாலன்றி, அல்லது இலங்கைக்கு வெளியே உள்ள வங்கித்தொழிற் கம்பெனியொன்றுக முறையே கூட்டிணைக்கப் பட்டிருந்தாலன்றியும், அத்துடன்

(ஆ) இலங்கையில் தாபிக்கப்பட்ட தொழிலிடம் ஒன்றைக் கொண்டிருந் தாலன்றியும், இச்சட்டத்தின் XIII ஆம் பாகத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகியிருந்தாலன்றியும்,

இலங்கையில் வங்கித்தொழிலைக் கொண்டு நடாத்துதலாகாது.

(3) ஏதேனும் கம்பெனி, கழகம் அல்லது பங்காண்மையானது, (1) ஆம் அல்லது (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின் மீறுகையாக வங்கித்தொழிலைக் கொண்டு நடாத்துகின்றவிடத்து, அத்தகைய ஆட்கள் ஒவ்வொருவரும்—

(அ) தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், ஐந்நூறு ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணத்திற்கும் அல்லது மூன்று மாதங் களுக்கு மேற்படாத இருவகையிலலொருவகை மறியற்றண்டனைக்கும் அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண் டிற்கும் ஆளாதலும் வேண்டும்; அத்துடன்

(ஆ) பந்தி (அ) என்பதன் ஏற்பாடுகளுக்குப் பங்கமின்றி, எந்தக் கம்பெனி யின், கழகத்தின் அல்லது பங்காண்மையின் உறுப்பினராகவுள்ளாரோ, அந்தக் கம்பெனியின், கழகத்தின் அல்லது பங்காண்மையின் முழுத் தனிசுகளையும் கொடுப்பதற்கு தனித் தனியே ஆளாதல் வேண்டும் என்பதுடன் கம்பெனியின், கழகத்தின் அல்லது பங்காண்மையின் வேறெவரேனும் உறுப்பினரின் துடர்ச்சியில் இணைக்கப்படாமல், முறையே வழக்குத் தொடரவும் படலாம்.

*413. (1)* ஒரு வங்கித்தொழிற் கம்பெனியாகத் தொழிலைக் கொண்டு நடாத்தும் நோக்கத்துக்கென நியமிக்கப்பட்ட தேதிக்குப் பின்னர் உருவாக்கப் பட்ட கம்பெனி எதுவும், அல்லது எந்தப் பெயரின்கீழ் கம்பெனியானது தொழிலைக் கொண்டு நடாத்த உத்தேசிக்கின்றதோ அந்தப் பெயரின் பாகமாக ''வங்கி'', ''வங்கித்தொழிலர்'', அல்லது ''வங்கித் தொழில்'' என்னும் சொல்லமைப்பைப் பயன்படுத்துகின்ற கம்பெனி எதுவும், 411 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தொழில்முறைகள் ஒருசிலவற்றுடன் அல்லது எல்லாவற்றுடனும், காசோலை யால், உண்டியலால் அல்லது வேறு விதமாக கைவாங்குதலுக்கமைய நடை முறைக் கணக்கின் மீது அல்லது வேறுவிதமாக பணவைப்புகளை ஏற்றுக்கொள்ளும் தொழிலைக் கொண்டு நடாத்துதலுக்குக் கம்பெனியின் குறிக்கோள்கள் புறவிதி யால் வரையறுக்கப்பட்டாலன்றி, இச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படுதல் ஆகாது.

(2) வங்கித்தொழிற் கம்பெனியொன்றல்லாத கம்பெனி எதுவும் ''வங்கி'', ''வங்கித் தொழிலர்'' அல்லது ''வங்கித் தொழில்'' என்னும் சொற்களையோ அல்லது வேறு ஏதேனும் வழிவரு பதத்தையோ அல்லது வேறோர் மொழியில் அவற்றையொத்த பதத்தையோ அதனுடைய பெயரின் ஒரு பாகமாக அல்லது அதன் விவரணமாகப் பயன்படுத்துதல் ஆகாது என்பதுடன், கம்பெனி எதுவும், அத்தகைய சொற்களுள், குறைந்தது ஒன்றையாவது அதனுடைய பெயரின் பாகமாக அது பயன்படுத்தினாலன்றி இலங்கையில் வங்கித் தொழிலைக்கொண்டு நடாத்துதலும் ஆகாது;

ஆயின், இலங்கைக்கு வெளியே அமைத்துருவாக்கப்பட்டுள்ளதும், வங்கித் தொழிலைக் கொண்டு நடாத்துகின்றதும் அதனது பெயரில் ஏதேனும் மொழியில் ''வங்கி'' ''வங்கித் தொழிலர்'' அல்லது ''வங்கித் தொழில்'' என்னும் சொற்களை உள்ளடக்கியிராததுமான வங்கித் தொழிற் கம்பெனியொன்று அதனு டைய பெயரில் அச்சொற்கள் இல்லாதிருந்தபோதிலும், இலங்கையில் அத் தொழிலைக்கொண்டு நடாத்தலாம்.

*(3)* குழுமம் எதுவும், தனியாள் எவரும் அல்லது தனியாட்களின் குழு எதுவும், ஏதேனும் தொழிலைக் கொண்டு நடாத்தும் நோக்கத்திற்கென அதனு டைய பெயரின் அல்லது அவரது பெயரின் பாகமாகவோ அல்லது விவரண மாகவோ ''வங்கி'', ''வங்கித்தொழிலர்'' அல்லது ''வங்கித் தொழில்'' என்னும் சொற்களுள் எதனையும் அல்லது அவற்றின் எவையேனும் வழிவரு பதங்களை அல்லது வேறோர் மொழியில் அவற்றையொத்த பதங்களைப் பயன்படுத்துதல் ஆகாது.

(4) இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட வங்கித்தொழிற் கம்பெனி எதுவும், அத்துடன் இலங்கைக்கு வெளியில் கூட்டிணைக்கப்பட்டதும் இலங்கையினுள் தொழிலிடமொன்றைத் தாபித்திருப்பதுமான வங்கித்தொழிற் கம்பெனி எதுவும் நியமித்த தேதியிலிருந்து இரண்டு ஆண்டுகள் முடிவுற்றதன் பின்னர் 411 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட இந்தத் தொழில்களைத் தவிர, வேறு எதுவித மான தொழிலையும் கொண்டு நடாத்துதல் ஆகாது;

ஆயின், அமைச்சரானவர், தேசிய நலனைக் கருத்தில் கொண்டும் தேசிய பொருளாதாரத்தின் நலனைக் கருத்திற் கொண்டும் 411 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தொழில்களுக்கு மேலதிகமாக வங்கித்தொழிற் கம்பெனியொன்று இப்பாகத்தின் கீழ் எந்தத் தொழிலில் ஈடுபடுவது சட்ட முறையானதாயிருக்கக் கூடுமோ அந்தத் தொழிலின் வேறுவகைகளையும் கசெற்றிலான அறிவிப்பின் மூலம் குறித்துரைக்கலாம்.

*414.* வங்கித்தொழிற் கம்பெனி எதுவும், நியமித்த தேதியிலிருந்து இரண்டு ஆண்டுகள் முடிவுற்றபின்னர், ஒரு வங்கித்தொழிற் கம்பெனியைத் தவிர்ந்த ஒரு முகாமை முகவரைத் தொழிலுக்கமர்த்துதலோ அல்லது ஒரு முகாமை முகவரால் முகாமை செய்யப்படுதலோ ஆகாது.

*415.* நூற்றேழாம் பிரிவில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், வங்கித் தொழிற் கம்பெனி எதுவும், தேசிய பொருளாதாரத்தின் நலனைக் கருத்திற் கொண்டு இலங்கை மத்திய வங்கியினால் காலத்துக்குக்காலம் தீர்மானிக்கப்படக் கூடியவாறுன அத்தகைய மூலதனத் தேவைப்பாடுகளை அது திருப்திப்படுத்தினாலன்றி, தொழிலைத் தொடங்குதல் ஆகாது.

*416.* வங்கித்தொழிற் கம்பெனி எதுவும் கம்பெனியின் ஏதேனும் செலுத்தப் படாத மூலதனத்தின்மீது ஏதேனும் தாக்கீட்டை ஏற்படுத்துதல் ஆகாது என்பதுடன், அத்தகைய ஏதேனும் தாக்கீடு வலுவற்றதாதலும் வேண்டும்.

*417.* *(1)* வங்கித்தொழிற் கம்பெனி ஒவ்வொன்றும், நியமித்த தேதியின் பின்னர் ஒதுக்கீட்டு நிதியமொன்றைப் பேணுதல் வேண்டும்.

*(2)* வங்கித்தொழிற் கம்பெனி ஒவ்வொன்றும், ஏதேனும் பங்கிலாபம் வெளிப்படுத்தப்படுமுன்னர். ஒவ்வோராண்டிற்குமுரிய வெளிப்படுத்தப்பட்ட இலாபங்களிலிருந்து—

(அ) சொல்லப்பட்ட ஒதுக்கீட்டு நிதியத்தின் தொகையானது செலுத்தப் பட்ட மூலதனத்தின் ஐம்பது நூற்று வீதத்திற்குச் சமமானதாகும் வரை, அத்தகைய இலாபங்களின் இருபதுக்குக் குறையாத நூற்று வீதத்திற்குச் சமமானதொரு தொகையையும்; அத்துடன்

(ஆ) அதன்பின்னர், பொறுப்புக்கள், எந்த ஆண்டில் செலுத்தப்பட்ட மூலதனத்தை விஞ்சுகின்றனவோ அந்த ஆண்டொவ்வொன்றிலும், சொல்லப்பட்ட ஒதுக்கீட்டு நிதியத்தின் அளவானது செலுத்தப்பட்ட மூலதனத்துக்குச் சமமானதாகும்வரை, அத்தகைய இலாபங்களின் பத்துக்குக் குறையாத நூற்று வீதத்திற்குச் சமமானதொரு தொகையையும்,

ஒதுக்கீட்டு நிதியத்திற்குக் கைமாற்றுதல் வேண்டும்.

*(3)* ஒரு வங்கித்தொழிற் கம்பெனியானது, அதன் ஒதுக்கீட்டு நிதியத்தின் வரவிலிருக்கும் தொகையை நம்பிக்கைப்பொறுப்புக் கட்டளைச் சட்டத்தின் 20ஆம்

பிரிவில் கூறப்படும் பிணைப்பணங்களில் அல்லது ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட பிணைப்பணத்தில் முதலீடு செய்தல் வேண்டும். அல்லது அத்தகைய தொகையை விதித்துரைக்கப்பட்ட ஏதேனும் வங்கித் தொழிற் கம்பெனியில் வைப்பிலிடும் நோக்கத்துக்கென கம்பெனியால் ஆரம்பிக்கப்பட்ட சிறப்புக் கணக்கொன்றில் வைப்பிலிட்டு வைத்தல் வேண்டும்;

ஆயினும் இவ்வுட்பிரிவின் ஏற்பாடு, நியமித்த தேதிக்கு முன்னர் அத்தகைய தேதியிலிருந்து இரண்டு ஆண்டுகளின் முடிவின் பின்னர் வரை கூட்டிணைக்கப் பட்டதொரு வங்கித்தொழிற் கம்பெனிக்கு ஏற்புடையதாதல் ஆகாது.

(4) இப்பிரிவில், ''அங்கீகரிக்கப்பட்ட பிணைப்பணம்'' என்பது கசெற்றில் வெளியிடப்படும் அறிவிப்பின் மூலம் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் பிணைப்பணம் எனப் பொருளாகும்.

(5) இதனகத்துப்பின்னர் ஏற்பாடு செய்யப்படுதற்கமைவாக, இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகள் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட ஒவ்வொரு வங்கித் தொழிற் கம்பெனிக்கும் அத்துடன் இலங்கையினுள் தாபிக்கப்பட்டவொரு தொழிலிடத்தையுடையதான, இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட ஒவ்வொரு வங்கித்தொழிற் கம்பெனிக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்;

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய ஏற்பாடுகள் விதித்துரைக்கப்பட்ட ஏதேனும் வங்கித்தொழிற் கம்பெனிக்கு ஏற்புடையதாதல் ஆகாது.

418. (1) ஒரு வங்கித்தொழிற் கம்பெனியானது, வங்கித்தொழிற் கம்பெனி அல்லாத ஏதேனும் துணைநிலைக் கம்பெனியை உருவாக்குதல் ஆகாது.

(2) ஓராம் உட்பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு தவிர, வங்கித் தொழிற் கம்பெனியொன்றுனது, அடகு கொளீயாகவாயினுஞ்சரி, ஈடு கொளீயாக வாயினுஞ்சரி, அல்லது அந்தக் கம்பெனியின் செலுத்தப்பட்ட மூலதனத்தின் நாற்பது நூற்றுவீதத்தை விஞ்சுகின்ற ஒரு தொகையின் பூரணச் சொந்தக் காரராகவாயினுஞ்சரி, எவையேனும் கம்பெனிகளில் பங்குகளைக் கொண்டிருத்தல் ஆகாது;

ஆயின், இவ்வுட்பிரிவிலுள்ள எதுவும், நியமித்த தேதிக்கு முன்னர் ஒரு வங்கித்தொழிற் கம்பெனியால் கொண்டிருக்கப்பட்ட பங்குகளுக்கு ஏற்புடைய தாதல் ஆகாது.

419. நானூற்றுப்பதின்மூன்றும், 414 ஆம், 415 ஆம், 416 ஆம், 417ஆம் அல்லது 418ஆம் பிரிவுகளில் உள்ள எவையேனும் தேவைப்பாடுகளுடன் இணங்கி யொழுகுவதில் தவறுகை புரியப்படுமாயின், தெரிந்து கொண்டும் வேண்டு மென்றும் தவறுகைக்குக் கட்சிக்காரராகின்ற கம்பெனிப் பணிப்பாளர் ஒவ்வொரு வரும் அல்லது வேறு அலுவலர் ஒவ்வொருவரும் அல்லது வேறு அலுவலர் ஒவ் வொருவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், தவறுகை தொடர்ந்தும் புரியப்படுகின்ற ஒவ்வொரு நாளின்போதும் அந்த ஒவ்வொரு நாளைக்கும் ஐந்நூறு ரூபாவுக்கு மேற்படாதவொரு குற்றப்பணத்திற்கு ஆளாத லும் வேண்டும்.

420. (1) வங்கித்தொழிற் கம்பெனியின் கடப்பாடுகளைத் தற்காலிகமாக மேவமுடியாத ஒரு வங்கித்தொழிற் கம்பெனியினது விண்ணப்பத்தின்மீது, நீதி மன்றமானது, அது பொருத்தமானதும் முறையானதுமென எண்ணும் அத்தகைய நியதி. நிபந்தனைகளின்மீது நிர்ணயிக்கப்பட்ட அத்தகைய காலப்பகுதிக்கு எல்லா வழக்குகளையும் நடவடிக்கைகளையும் தொடங்குவதை அல்லது தொடர்ந்து நடாத்து வதை நிறுத்திவைக்கும் கட்டளையொன்றை ஆக்கலாமென்பதுடன், காலத்துக்குக் காலம் அக்காலப்பகுதியை நீடிக்கலாம்.

(2) விண்ணப்பம் எதுவும், இலங்கை மத்திய வங்கியின் வங்கி மேற்பார் வைப் பணிப்பாளரது அறிக்கையொன்றுடன் சேர்த்தனுப்பப்பட்டாலொழிய, (1) ஆம் உட்பிரிவினது ஏற்பாடுகளின்கீழ் ஆக்கப்படுதலாகாது;

ஆயின், எவ்வாருயினும், நீதிமன்றமானது, போதுமான காரணங்களுக்காக, அத்தகைய விண்ணப்பமானதுஅத்தகைய அறிக்கையுடன் சேர்த்தனுப்பப்படாத போதும் இடைக்கால நிவாரணத்தை வழங்கலாம்.

(3) இப்பிரிவின் ஏற்பாடுகள், இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட ஒவ்வொரு வங்கித்தொழிற் கம்பெனிக்கும் இலங்கைக்குள்ளாகத் தாபிக்கப்பட்ட தொழி லிடத்தைக் கொண்டுள்ள இலங்கைக்கு வெளியே உருவாக்கப்பட்ட ஒவ்வொரு வங்கித்தொழிற் கம்பெனிக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

421. இப்பாகத்தின் நோக்கங்களுக்காக ''வங்கித்தொழில்'' என்பது அத் தொழில், 411ஆம் பிரிவிற் குறித்துரைக்கப்படும் வேறொருவகையான தொழி லுடன் அல்லது தொழில்களுடன் கொண்டு நடாத்தப்படினுஞ்சரி அல்லா விடினுஞ்சரி, காசோலைமூலம், வரைவுண்டியல்மூலம், கட்டளைமூலம் அல்லது வேறுவகையாகக் கோரப்படும்போது பணம் பெறுவதற்கமைவாக பணவைப்புக் களை ஏற்றுக்கொள்ளும் தொழில் என்று பொருளாகும்:

## 1982ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க,
## செல்வ வரி மீதான மிகைவரிச் சட்டம்

*(1982, ஓகத்து மாதம் 10ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)*

1981 ஏப்பிறில் 1ஆம் தேதியன்று தொடங்குகின்ற வரி மதிப்பீட்டு ஆண்டிற்கான செல்வவரி விதிக்கப்படற்குரிய ஒவ்வோர் ஆள்மீதும், அத்தகைய ஆளினுல் அவ்வரி மதிப்பீட்டாண்டிற்காகச் செலுத்தப்படற்பாலதான செல்வவரியைத் தொடர்புறுத்திப் பார்ப்பதன்மூலம் மிகைவரியொன்றை விதிப்பதற்கும்; அத்துடன் அதனேடு தொடர் புடையவையும் அதன் இடைநேர்விளைவானவையுமான கருமங்களுக்கு ஏற்பாடு செய் வதற்குமானதொரு சட்டம்.

1. இச்சட்டம், 1982ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க, செல்வவரி மீதான மிகைவரிச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தோராம் ஆண்டு ஏப்பிறில் 1ஆம் தேதியன்று தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டிற்கென செல்வவரி விதிக்கப் படற்குரியவராக உள்ளவரான ஆள் ஒவ்வொருவரும். எழுத்திலான ஏதேனும் சட்டத்தில் அல்லது ஏதேனும் சமவாயத்தில், மானியப்பட்டயத்தில் அல்லது உடன்படிக்கையில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், அந்த வரிமதிப்பீட்டு ஆண்டிற்கென அவரால் செலுத்தப்படற்பாலதான செல்வவரியின் பத்துச் சத வீதத்துக்குச் சமமான மிகைவரியொன்றைச் செலுத்துதற்கு ஆளாதல் வேண்டும்.

3. இரண்டாம் பிரிவின்கீழ் மிகைவரியொன்றைச் செலுத்துவதற்கு ஆளாகும் ஒவ்வோராளும், மதிப்பீடொன்று அவருக்கு வழங்கப்படவில்லையென்ற நிகழ்வு எவ்வாறிருப்பினும், அவரால் செலுத்தப்படற்பாலதான மிகைவரித்தொகையின் ஐம்பது சதவீதத்துக்குக் குறையாத தொகையை 1982ஆம் ஆண்டு யூலை மாதம் 15ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னரும் மிகுதியை 1982ஆம் ஆண்டு நவம்பர் 30ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னரும் ஆணையாளர் தலைமை யதிபதிக்குச் செலுத்துதல் வேண்டும்.

4. விவரத்திரட்டுக்களைக் கொடுத்துதவுதல், செல்வவரியின் மதிப்பீடு, மதிப் பீட்டிற்கெதிரான மேன்முறையீடுகள், கொடுப்பனவு, அறவீடு, மீளக் கொடுப் பனவு என்பன தொடர்பில் உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் XIII ஆம் அத்தி யாயத்தினதும் XVII முதல் XXVI வரையிலான அத்தியாயங்களினதும் ஏற் பாடுகள், 2ஆம் பிரிவின்கீழ் செலுத்தப்படற்பாலதான மிகைவரியின் விவரத் திரட்டுகளைக் கொடுத்துதவுதல், மதிப்பீடு, மதிப்பீட்டுக்கு எதிரான மேன்முறை யீடுகள், கொடுப்பனவு அறவீடு, மீளக்கொடுப்பனவு என்பவற்றிற்கு ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

5. இச்சட்டத்தில் சந்தருப்பம் வேறு வகையாகத் தேவைப்படுத்தினு லன்றி—

''ஆணையாளர் தலைமையதிபதி'' என்பது உண்ணாட்டரசிறைச் சட்டத்தில் உள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருக்கும்;

''உண்ணாட்டரசிறைச் சட்டம்'' என்பது 1979ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டம் எனப் பொருளாகும்;

''செல்வவரி'' என்பது உண்ணாட்டரசிறைச் சட்டத்தின்கீழ் விதிக்கப்பட்டு அறவிடப்படும் செல்வவரி எனப் பொருளாகும்; அத்துடன்

''மதிப்பீட்டு ஆண்டு'' என்பது உண்ணாட்டரசிறைச் சட்டத்தில் உள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருக்கும்.

## 1982ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, வருமானவரி மீதான மிகைவரிச் சட்டம்

*(1982, ஓகத்து மாதம் 10 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

1981 ஏப்பிறில் ! ஆம் தேதியன்று தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டிற்கான வருமானவரி விதிக்கப்படற்குரிய ஒவ்வோர் ஆள் மீதும், அத்தகைய ஆளால் அவ் வரி மதிப்பீட்டாண்டிற்காகச் செலுத்தப்படற்பாலதான வருமான வரியைத் தொடர் புறுத்திப் பார்ப்பதன்மூலம் மிகை வரியொன்றை விதிப்பதற்கும்; அத்துடன் அத னோடு தொடர்புடையனவையும் அதன் இடைநேர் விளைவானவையுமான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.

*1. இச்சட்டம், 1982 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க வருமானவரி மீதான மிகைவரிச்சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.*

*2. ''இயைபான ஆண்டு'' என இச்சட்டத்தில் குறிப்பீடு செய்யப்படும் 1981 ஏப்பிறில் 1ஆம் தேதியன்று தொடங்குகின்ற வரிமதிப்பீட்டாண்டுக்கென வருமானவரி விதிக்கப்படற்குரியவராக உள்ளவரான ஆள் ஒவ்வொருவரும், எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தில் அல்லது ஏதேனும் சமவாயத்தில், மானியப்பட்டயத்தில் அல்லது உடன்படிக்கையில் அடங்கியுள்ள எது எவ்வா றிருப்பினும். இயைபான ஆண்டுக்கென அவரால் செலுத்தப்படற்பாலதான வருமான வரியின்மீது, இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையில் குறித் துரைக்கப்பட்ட வீதங்களின்படி கணக்கிடப்படும் மிகைவரியொன்றைச் செலுத்து வதற்கு ஆளாதல் வேண்டும்.*

*3. இச்சட்டத்துக்கான இரண்டாம் அட்டவணையின் I ஆம் நிரையில் குறித் துரைக்கப்பட்டவரும் இயைபான ஆண்டுக்கென வரிவிதிக்கப்படற்பாலதான எவருடைய வருமானம் அந்த அட்டவணையின் IIஆம் நிரையிலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்ட தொகையை விஞ்சாதிருக்கின்றதோ அத்தகைய வருமாகிய எவரேனும் ஆளினுல் —*

(அ) இயைபான ஆண்டுக்கென செலுத்தப்படற்பாலதான வருமானவரியின தும்; அத்துடன்

(ஆ) இச்சட்டத்தின்கீழ் செலுத்தப்படற்பாலதான வருமானவரியின் மீதான மிகைவரியினதும்,

கூட்டு மொத்தமானது—

(i) இயைபான ஆண்டுக்காக அத்தகைய ஆளின் வரிவிதிக்கப்படற்பால தான வருமானத்துக்கும்; அத்துடன்

(ii) அந்த அட்டவணையின் III ஆம் நிரையிலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்ட தொகைக்கும்,

இடையிலான வேற்றுமையை விஞ்சுமிடத்து, அத்தகைய விஞ்சுகின்ற தொகை யானது, இச்சட்டத்தின் கீழ் அவரால் செலுத்தப்படற்பாலதான மிகைவரியின் தொகையிலிருந்து கழிக்கப்படுதல் வேண்டும்.

இப்பிரிவின் நோக்கங்களுக்கென இயைபான ஆண்டுக்காக ஆளொருவரின் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானம் பற்றிய குறிப்பீடு ஒவ்வொன்றும், கம்பெனியொன்றின் ஒழிப்போன் ஒருவரின் விடயத்தில், அவர் எந்தக் கம்பெனி யின் ஒழிப்போனுக இருக்கின்ருரோ அந்தக் கம்பெனியின் இயைபான ஆண்டுக் காக வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்திற்கான குறிப்பீடொன்று என வாசித்துப் பொருள்கொள்ளப்படுதல் வேண்டும்.

4. இச்சட்டத்தின் கீழ் மிகைவரி செலுத்துவதற்கு ஆளாகும் ஒவ்வோராளும் மதிப்பீடொன்று அவருக்கு வழங்கப்படவில்லையென்ற நிகழ்வு எவ்வாறு இருப் பினும், அவரால் செலுத்தப்படற்பாலதான மிகைவரித்தொகையின் ஐம்பது சத வீதத்துக்குக் குறையாத தொகையை 1982ஆம் ஆண்டு யூலை மாதம் 15ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னரும், மிகுதியை 1982ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 30ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னரும், ஆணையாளர் தலைமை யதிபதிக்குச் செலுத்துதல் வேண்டும்.

5. உண்ணுட்டரசிறைச் சட்டத்தின் XV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடு களுக்கிணங்க, [அச்சட்டத்தின் 67ஆம் பிரிவின் (7) ஆம் உட்பிரிவினுல் வதிவற்ற வராகக் கருதப்படுகின்றவரான ஊழியர் ஒருவராக அல்லாத] எந்த ஊழியரின் ஊதியத்திலிருந்து இயைபான ஆண்டுக்கென வருமானவரி கழிக்கப்படற்பாலதாக இருக்கின்றதோ அந்த ஊழியர் எவரையும் தொழிலுக்கமர்த்துகின்ற தொழில் தருநர் ஒவ்வொருவரும் இச்சட்டத்தின்கீழ் செலுத்தப்படற்பாலதான வருமான வரியின்மீதான மிகைவரியாக, அத்தகைய ஊழியருக்குச் செலுத்தப்படற்பால தான ஊதியத்திலிருந்து பின்வரும் தொகைகளையும் 1982ஆம் ஆண்டு யூன் மாதம் தொடங்கி ஆறு மாதத் தவணைகளில் கழித்தல் வேண்டும்:—

(அ) உண்ணுட்டரசிறைச் சட்டத்தின் 4ஆம் பிரிவினது (இ) என்னும் பந்தி யில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஊழியத்தினின்று கிடைக்கும் எவை யேனும் இலாபங்களின்மீது செலுத்தப்படற்பாலதான வருமானவரி அல்லாது, இயைபான ஆண்டுக்கென அத்தகைய ஊழியரின் ஊதியத் திலிருந்து கழிக்கப்படற்பாலதான வருமானவரியானது, நாலாயிரத்து இருபது ரூபாவை விஞ்சுகின்றதாய், ஆனல் பதினலாயிரத்து இரு நூறு ரூபாவை விஞ்சாததாய் இருக்குமிடத்து, அத்தகைய வருமான வரியின் ஐந்து சதவீதத்துக்குச் சமமான ஒரு தொகை;

(ஆ) உண்ணுட்டரசிறைச் சட்டத்தின் 4ஆம் பிரிவின் (இ) என்னும் பந்தி யில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஊதியத்தினின்று கிடைக்கும் எவை யேனும் இலாபங்களின்மீது செலுத்தப்படற்பாலதான வருமானவரி அல்லாது, இயைபான ஆண்டுக்கு அத்தகைய ஊழியரின் ஊதியத்தி லிருந்து கழிக்கப்படற்பாலதான வருமானவரி, பதினுயிரத்து இரு

நூறு ரூபாவை விஞ்சுகின்றதாய், ஆனால் தொண்ணூற்றாயிரத்து ஐந்நூற்றி அறுபது ரூபாவை விஞ்சாததாய் இருக்குமிடத்து, அத்தகைய வருமானவரியின் பத்துச் சதவீதத்துக்குச் சமமான ஒரு தொகை;

(இ) உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 4ஆம் பிரிவின் (இ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஊழியத்தினின்று கிடைக்கும் எவையேனும் இலாபங்களின்மீது செலுத்தப்படற்பாலதான வருமானவரியல்லாது, இயைபான ஆண்டுக்கு அத்தகைய ஊழியரின் ஊதியத்திலிருந்து கழிக்கப்படற்பாலதான வருமானவரி, தொண்ணூற்றாயிரத்து ஐந்நூற்றி அறுபது ரூபாவை விஞ்சுகின்றவிடத்து அத்தகைய வருமானவரியின் பதினைந்து சதவீதத்துக்குச் சமமான ஒரு தொகை.

6. எவரேனும் ஆளினால்,—

(அ) இயைபான ஆண்டுக்கென செலுத்தப்படற்பாலதான வருமான வரி;

(ஆ) இயைபான ஆண்டுக்கென செலுத்தப்படற்பாலதான செல்வவரி;

(இ) இச்சட்டத்தின்கீழ் செலுத்தப்படற்பாலதான வருமானவரியின் மீதான மிகைவரி; அத்துடன்

(ஈ) 1982ஆம் ஆண்டின் செல்வவரி மீதான மிகைவரிச் சட்டத்தின் கீழ் செலுத்தப்படற்பாலதான செல்வவரி மீதான மிகைவரி,

என்பனவற்றின் கூட்டுமொத்தமானது, அவ்வாண்டிற்கு அந்த ஆளின் மதிப்பிடப் படற்பாலதான வருமானத்தினதும், உண்ணாட்டரசிறைச் சட்டத்தின்கீழ் அல்லது வேறு ஏதேனும் சட்டவாக்கத்தின்கீழ் வருமானவரியினின்று விலக்களிக்கப்பட்ட வையும் அந்த விலக்களிப்பு இல்லாவிடில், இயைபான ஆண்டுக்காக அந்த ஆளின் வரிமதிப்பிடற்குரிய வருமானத்தைக் கணிப்பதில் கணக்கிடப்பட்டிருக்கக் கூடிய வையுமான, அந்த இலாபங்களாயும் வருமானமுமாயும் இருக்கின்ற (வதிவிட மொன்றின் தேறிய ஆண்டுப் பெறுமானமும் உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் கீழ் வருமானவரியினின்று விலக்களிக்கப்பட்ட ஏதேனும் மானியமும் அல்லாத) எவையேனும் இலாபங்கள் மற்றும் வருமானம் என்பவற்றினதும் கூட்டுமொத்தத் தின் எண்பது சதவீதத்தை விஞ்சுகின்றவிடத்து, அத்தகைய விஞ்சுகின்ற தொகை யானது வருமானவரியின் மீதான அத்தகைய மிகைவரிக்கு அல்லது செல்வவரி மீதான அத்தகைய மிகைவரிக்கு அல்லது வருமான வரி மீதான அத்தகைய மிகைவரியினதும் செல்வவரி மீதான அத்தகைய மிகைவரியினதும் கூட்டுமொத் தத்துக்கு எதிராக ஈடுசெய்யப்படுதல் வேண்டும்.

7. உண்ணாட்டரசிறைச் சட்டத்தின்கீழ் செலுத்தப்படற்பாலதான வருமான வரி தொடர்பிலான விவரத்திரட்டுக்களைக் கொடுத்துதவுதல், வருமானவரியைக்

கழித்தல், அத்தகைய வரியின் மதிப்பீடு, மதிப்பீடுகளுக்கெதிரான மேன்முறையீடுகள், கொடுப்பனவு. அறவீடுகள், மீளளிப்பு என்பன தொடர்பில் அச்சட்டத்தின் XIII ஆம் அத்தியாயத்தினதும், XV முதல் XXVI வரையிலான அத்தியாயங்களினதும் ஏற்பாடுகள், இச்சட்டத்தின்கீழ் செலுத்தப்படற்பாலதான மிகைவரி தொடர்பில் விவரத்திரட்டுக்களைக் கொடுத்துதவுதல், அத்துடன் அத்தகைய மிகைவரியின் கழிப்பனவு, மதிப்பீடு, மதிப்பீட்டிற்கெதிரான மேன்முறையீடுகள், கொடுப்பனவு, அறவீடு, மீளளிப்பு என்பனவற்றிற்கு ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

8 இச்சட்டத்தின் சந்தருப்பம் வேறு வகையாகத் தேவைப்படுத்தினாலன்றி—

''வரி மதிப்பிடற்குரிய வருமானம்'', ''தரும நிறுவனம்'', ''ஆணையாளர் தலைமையதிபதி'', ''நிறைவேற்றுநர்'', ''மக்கள் கம்பெனி'', ''ஆள்'', ''இலாபங்களும் வருமானமும்'', ''விலைகோரிப் பெறப்படும் பங்குடைப் பகிரங்கக் கம்பெனி'', ''பெறுநர்'', ''சிறிய கம்பெனி'', ''நம்பிக்கைப் பொறுப்பாளர்'', ''வரி மதிப்பீட்டு ஆண்டு'' என்பன அவற்றிற்கு உண்ணாட்டரசிறைச் சட்டத்தில் குறித்தொதுக்கப்பட்ட அந்தந்தப் பொருள்களைக் கொண்டிருக்கும்;

''கூட்டுறவுச் சங்கம்'' என்பது 1972 ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க, கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட அல்லது பதிவுசெய்யப்பட்டதாகக் கருதப்படும் ஒரு கூட்டுறவுச் சங்கம் என்று பொருளாகும்;

''தொழில்தருநர்'', ''ஊழியர்'', ''ஊதியம்'' என்பன, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் XVஆம் அத்தியாயத்தில் அவற்றிற்குக் குறித்தொதுக்கப்பட்டுள்ள அந்தந்தப் பொருள்களைக் கொண்டிருக்கும்;

எவரேனும் ஆளினதும் இயைபான ஆண்டினதும் தொடர்பில் ''வருமான வரி'' என்பது—

(அ) இச்சட்டத்தின் 2ஆம் பிரிவிலும், இச்சட்டத்துக்கான முதலாம் அட்டவணையிலும், அத்துடன்—

(i) வதிவுள்ள கம்பனியொன்றின் தொடர்பாக, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 33ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் கீழ் இயைபான ஆண்டுக்காக அக்கம்பெனியால் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் வருமான வரியைக் கழித்து அவ்வாண்டிற்காக அச்சட்டத்தின்கீழ் அக்கம்பெனியால் செலுத்தப்படற்பாலதான வருமானவரி என்று பொருளாகும்;

(ii) வதிவற்ற கம்பெனியொன்றின் தொடர்பாகவும், உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 34ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரி

வினது (ஆ) என்னும் பந்தியின் (i) ஆம் உட்பந்தியின்கீழ் அல்லது (ii) ஆம் உட்பந்தியின்கீழ் இயைபான ஆண்டுக்காக அக்கம்பெனியால் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் வருமான வரியைக் கழித்து அச்சட்டத்தின்கீழ் அந்த ஆண்டுக்காக அக்கம்பெனியால் செலுத்தப்படற்பாலதான வருமான வரி என்று பொருளாகும் ;

(iii) இயைபான ஆண்டுக்காக எந்த வதிவுள்ள தனியாளின் இலாபங்களும் வருமானமும், உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (இ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஊழியத்தினின்று கிடைத்த எவையேனும் இலாபங்களை உள்ளடக்குகின்றனவோ அந்த வதிவுள்ள தனியாள் தொடர்பாகவும், ஊழியத்தினின்று கிடைத்த அத்தகைய இலாபங்கள் இயைபான ஆண்டுக்கு அவரது இலாபங்களினதும் வருமானத்தினதும் பாகமாய் அமையவில்லையாயின் உண்ணாட்டரசிறைச் சட்டத்தின்கீழ் அத்தகைய தனியாளினல் செலுத்தப்படற்பாலதாக இருந்திருக்கக்கூடியவாறான அத்தகைய வருமானவரி என்று பொருளாகும் ;

(iv) உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 67 ஆம் பிரிவின் (7) ஆம் உட்பிரிவினால் வதிவற்ற ஒருவராகக் கருதப்படுகின்றவரான தனியாளொருவர் தொடர்பாகவும், இயைபான ஆண்டுக்காக இலங்கையில் ஊழியத்தினின்று கிடைத்த அவரது இலாபங்கள் அந்த ஆண்டுக்கான அவரது இலாபங்களினதும் வருமானத்தினதும் பாகமாக அமையாதிருந்திருப்பின் உண்ணாட்டரசிறைச் சட்டத்தின்கீழ் அத்தகைய தனியாளினல் செலுத்தப்படற்பாலதாக இருந்திருக்கக்கூடியவாறான அத்தகைய வருமான வரி என்று பொருளாகும்; அத்துடன்

(v) வேறு எவரேனும் ஆள் தொடர்பாகவும், இயைபான ஆண்டுக்காக அந்த ஆளினல் உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் கீழ் செலுத்தப்படற்பாலதான வருமானவரி என்று பொருளாகும்; அத்துடன்

(ஆ) மூன்றும், 6 ஆம் பிரிவுகளில், அந்த ஆளினல் அந்த ஆண்டுக்காக உண்ணாட்டரசிறைச் சட்டத்தின்கீழ் செலுத்தப்படற்பாலதான வருமானவரி என்று பொருளாகும் ;

''உண்ணாட்டரசிறைச் சட்டம்'' என்பது 1979ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டம் என்று பொருளாகும் ;

எவரேனும் ஆளினதும் இயைபான ஆண்டினதும் தொடர்பில், ''வரிவிதிக்கப்படற்பாலதான வருமானம்'' என்பது அவ்வாண்டிற்கென உண்ணாட்

டசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க கணிக்கப்பட்ட, அவ்வாளின் வரி விதிக்கப்படற்பாலதான வருமானம் எனப் பொருளாகும்; அத்துடன்

(அ) இயைபான ஆண்டுக்கு எந்தத் தனியாளின் இலாபங்களும் வருமானமும் உண்ணாட்டரசிறைச் சட்டத்தினது 4ஆம் பிரிவின் (இ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஊழியத்தினின்று கிடைத்த இலாபங்களை உள்ளடக்குகின்றதோ அந்த வதிவுள்ள தனியாளின் விடயத்தில் அந்த ஆண்டிற்காக ஊழியத்தினின்று கிடைத்த அத்தகைய இலாபங்கள், அந்த ஆண்டிற்காக அத்தகைய தனியாளின் இலாபங்களினதும் வருமானத்தினதும் ஒரு பாகமாக அமைந்திராவிடில் அந்த ஆண்டிற்கு அத்தகைய தனியாளின் (உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க கணக்கிடப்பட்ட) வரி விதிக்கப்படற்பாலதான வருமானமாக இருந்திருக்கக்கூடியவாறுன அத்தகைய தொகை எனப் பொருளாவதாகக் கருதப்படும்;

(ஆ) உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 67ஆம் பிரிவினது (7)ஆம் உட்பிரிவினுல் வதிவற்ற ஒருவராகக் கருதப்படும் தனியாளொருவரின் விடயத்தில், அந்த ஆண்டிற்காக இலங்கையில் ஊழியத்தினின்று கிடைத்த அவரது இலாபங்கள் அந்த ஆண்டிற்காக அவரது இலாபங்களினதும் வருமானத்தினதும் ஒரு பாகமாக அமைந்திராவிடில் இயைபான ஆண்டிற்காக அத்தகைய தனியாளின் (உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க கணக்கிடப்பட்ட) வரி விதிக்கப்படற்பாலதான வருமானமாக இருந்திருக்கக்கூடியவாறுன அத்தகைய தொகை எனப் பொருளாவதாகக் கருதப்படும்,

''செல்வ வரி'' என்பது உண்ணாட்டரசிறைச் சட்டத்தின்கீழ் விதிக்கப்பட்டு அறவிடப்படும் செல்வ வரி என்று பொருளாகும்.

## 1982ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம்

*[1982, ஒகத்து மாதம் 11ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

### 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

1. இச்சட்டம், 1982ஆம் ஆண்டின் 27ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

2. இதனகத்துப்பின்னர் முதன்மைச் சட்டவாக்கம் எனக் குறிப்பீடு செய்யப்படும் 1979ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின்

8 ஆம் பிரிவானது. அப்பிரிவின் (அ) என்னும் பந்தியில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பந்தியின் இறுதியில் (xxii) ஆம் உட்பந்தியில் ''அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்திற்கு'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்திற்கு'' என்னும் சொற்களையிடுவதன் மூலம்; அத்துடன்

(2) அப்பந்தியின் இறுதியில், பின்வரும் உட்பந்திகளைச் சேர்ப்பதன் மூலம்:-

"(xxxv) 1978 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனச் சட்டத்தினால் தாபிக்கப் பட்ட இலங்கை ஏற்றுமதிக் கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்;

(xxxvi) 1979ஆம் ஆண்டின் 40ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபி விருத்திச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை;

(xxxvii) 1976ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க, இலங்கை முன்னாட் படை யாட்கள் கழகச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட, இலங்கை முன் னாட் படையாட்கள் கழகம்;

(xxxviii) (i) சருவதேசத் தொழிற்பாட்டில் ஈடுபட்டுள்ளதாய்;

(ii) அத்தகைய கம்பனியால் சொந்தமாக வைத்திருக்கப்படுவ தாய் அல்லது கப்பற் குத்தகைக்கு எடுக்கப்படுவதாய்; அத் துடன்

(iii) 1971ஆம் ஆண்டின் 52ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் 30 ஆம் பிரிவின் (இ) என்னும் பந்தியின்கீழ்ச் செய்யப்பட்ட தீர்மானமொன்றின் காரணத்தால், இலங் கைக் கப்பலொன்றாகக் கருதப்படுவதாய்,

உள்ளதான கப்பலொன்றிலிருந்து (அத்தகைய கம்பெனிக்கு, அக்கப்பலினால் பிரயாணிகளையும் தபால்களையும் கால்நடை களையும் பொருட்களையும் இலங்கையிலுள்ள துறைமுகமொன் றுக்கு அல்லது துறைமுகத்திலிருந்து எடுத்துச் செல்வதன் மூலம் எழுகின்ற இலாபங்களும் வருமானமும் தவிர்ந்த) இலாபங்களும் வருமானமும் கொண்டதான, 1982ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் VIIIஆம் பாகத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட கம்பெனியொன்று;

(xxxix) 1981ஆம் ஆண்டின் 55 ஆம் இலக்க, இலங்கை அடிப்படைக் கற்கைகளுக்கான நிறுவகச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கை அடிப்படைக் கற்கைகளுக்கான நிறுவகம்;

(xL) 1982 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, சர்வதேச சிறகு அவரை நிறுவகச் சட்டத்தினுல் தாபிக்கப்பட்ட சருவதேச சிறகு அவரை நிறுவகம்;''

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது.

(1) அவ்வுட்பிரிவின் (ஓ) என்னும் பந்தியை உடனடுத்து, பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன் மூலம்:-

''(ஓஓ) (i) 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் VIII ஆம் பாகத்தின் கீழ் பதிவு செய்யட்ட கம்பெனியொன்றினுல் சொந்தமாக வைத்திருக்கப்படும் அல்லது கப்பற் குத்தகைக்கு எடுக்கப்படும்; அத்துடன்

(ii) 1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழிற் சட்டத்தின் 30 ஆம் பிரிவின் (இ) என்னும் பந்தியின் கீழ் செய்யப்பட்ட தீர்மானமொன்றின் காரணத்தால் இலங்கைக் கப்பலொன்ருகக் கருதப்படும்.

கப்பலொன்றில் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள எவரேனும் தனியாளினுல் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டில் உழைக்கப்பட்ட வேதனுதிகள்,''; அத்துடன்

(2) அவ்வுட்பிரிவின், (ஔ) என்னும் பந்தியின் (ii) என்னும் உட்பந்தியை நீக்கிவிட்டு அதற்குப்பதிலாகப் பின்வரும் உட்பந்தியை இடுவதன் மூலம்:-

"(ii) ஊழியம் தவிர்ந்த மற்றெல்லா மூலங்களிலிருந்தும் கிடைக்கும் இலாபங்களினதும் வருமானத்தினதும், ஆயிரத்து இரு நூறு ரூபாவுக்கு மேற்படாத இலாபங்களும் வருமானமும், அத்துடன் இதற்கிணங்க, அத்தகைய தனியாளினுல் ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டில், இப்பந்தியின் கீழ் விலக்களிக்கப்பட்டுள்ள எவையேனும் இலாபங்கள், வருமானம் தொடர்பில் கழிவினுல் அல்லது வேறு வகையில் ஏதேனும் வருமானவரி செலுத்தப்பட்டிருக்கும்போது, அத்தகைய வரியானது. அந்த வரிமதிப்பீட்டாண்டு முடிவடைந்ததிலிருந்து மூன்று ஆண்டுகளுக்குள் அத்தகைய தனியாளினுல் எழுத்துமூலம் செய்யப்படும் விண்ணப்பமொன்றின் மீது, அவருக்கு மீள அளிக்கப்படுதல் வேண்டும்.''

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம்பிரிவானது, அப்பிரிவின் (உ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு, அதற்குப்பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

"(உ) இலங்கை மத்திய வங்கியின் அங்கீகாரத்துடன் ஏதேனும் வர்த்தக வங்கியில் எவரேனும் ஆளினுல் அல்லது அவரின் சார்பில் திறக்கப்பட்ட ஏதேனும் கணக்கில் வெளிநாட்டு நாணயத்தில் அவரின் வரவிலுள்ள பணங்கள் மீது, அவர் இலங்கையில் வதிவற்றவராக இருந்த காலத்தின் போதும் இலங்கையில் அவர் வதிய ஆரம்பித்த தேதிக்கு உடன் பிந்திய மூன்ருண்டுகளுக்கெனவும் அவருக்குச் சேர்ந்த வட்டியும்;''

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவு, அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் "இச்சட்டத்தின் 15, 16'' என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, ''இச்சட்டத்தின் 8 (xxxviii), 15, 16'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 13ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது.

(அ) அப்பிரிவின் (உ) என்னும் பந்தியில் "மீன்பிடி அமைச்சினுல் வழங்கப் பட்ட'' என்னும் சொற்களுக்குப் பதிலாக "மீன்பிடி அமைச்சினுல் வழங்கப்பட்ட;'' என்னும் சொற்களை இடுவதன்மூலம்; அத்துடன்

(ஆ) அப்பந்தியின் முடிவில் பின்வரும் பந்தியைச் சேர்ப்பதன் மூலம்:-

"(ஊ) 1979ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தினுல் தாபிக்கப்பட்ட ஏற்றுமதி அபிவிருத்தி நிதியத்திலிருந்து வழங்கப்பட்ட''

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (இ) என்னும் பந்தியை உடனடுத்து, பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

2 "(இஇ) உயர் தொழிலொன்றை அல்லது வாழ்க்கைத்தொழிலொன்றைப் பிரயோகிக்கின்ற அல்லது கொண்டுநடாத்துகின்ற வதிவுக் கம்பெனியொன்றினுல் அல்லது பங்குடைமையொன்றினுல், ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டில் இலங்கைக்கு வெளியே, உயர்தொழிலொன்றை அல்லது வாழ்க்கைத் தொழிலொன்றை அல்லது நிருமாணத் திட்டத்தைக் கொண்டு நடாத்தும் வேளையில், பிரயோகிக்கும் வேளையில் அல்லது நிறைவேற்றும் வேளையில் அளிக்கப்பட்ட சேவைகள் தொடர்பில், அத்தகைய கம்பெனியால் அல்லது பங்குடைமையால் அந்த வரிமதிப்பீட்டாண்டில் வெளிநாட்டு நாணயத்தில் உழைக்கப்பட்ட இலாபங்களும் வருமானமும்,[(ஆணையாளர் தலைமையதிபதி, நியாயமான செலவுகளெனத் தீர்மானிக்கக் கூடியவையான அத்தகைய தொகை கழிந்த) அத்தகைய இலாபங்களும் வருமானமும் அத்தகைய கம்பெனியால் அல்லது பங்குடைமையால்இலங்கைக்கு அனுப்பப்பட்டிருந்தால்''.]

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (அ) என்னும் பந்தியில், ''கசெற்றில் வெளியிடப்பட்ட கட்டளையின் மூலம்'' என்னும் சொற்களுக்குப்பதிலாக ''கசெற்றில் வெளியிடப்பட்ட கட்டளையின்மூலம் 1983ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆந் தேதிக்கு முன்னர்'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 16அ என்னும் பிரிவானது, ''அமைச்சரால் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலமாக அங்கீகரிக்கப்பட்டதும்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''அமைச்சரால் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலமாக 1983 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31 ஆந் தேதிக்கு முன்னர் அங்கீகரிக்கப் பட்டதும்'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

10. முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆ என்னும் பிரிவானது. ''கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சரினுல் அங்கீகரிக்கப்பட்டிருந்தால்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம், 1983 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31 ஆந் தேதிக்கு முன்னர் அமைச்சரினுல் அங்கீகரிக்கப்பட்டிருந்தால்'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுன்றது.

11. முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவானது. அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், ''அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டதும், அத்தேதியன்று அல்லது அதற்குப் பின்னர்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''அமைச்சரால் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் 1983ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31 ஆந் தேதிக்கு முன்னர் அங்கீகரிக்கப்பட்டதும், 1977ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 15 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர்'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

12. முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், ''அமைச்சரினுல் அங்கீகரிக்கப்பட்டதும்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சரினுல் அங்கீகரிக்கப்பட்டதும்'' என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

13. முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவானது, ''அமைச்சரினுல் அங்கீகப்பட்டதுமான'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சரினுல் அங்கீகரிக்கப்பட்டதுமான'' என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

14. முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், '1978 நவம்பர் 15 ஆம் தேதியின் பின்னர் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டதுமான'' என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும்

பதிலாக, "1978ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 15 ஆந்தேதியின் பின்னர், ஆனல் 1983 ஆம் ஆண்டு மார்ச்சு 31 ஆம் தேதிக்கு முன்னர் அமைச்சரால் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அங்கீகரிக்கப்பட்டதுமான" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

15. முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (அ) என்னும் பந்தியில், "ஐந்நூறு சதுர அடிக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஆயிரம் சதுர அடிக்கு" என்னும் சொற்களை இடுவதன்மூலம்;

(2) அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் "ஐந்நூறு சதுர அடிக்கு மேற்பட்டதாக ஆனல் ஆயிரத்து இருநூற்று ஐம்பது சதுர அடிக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஆயிரம் சதுர அடிக்கு மேற்பட்டதாக ஆனல் ஆயிரத்து எழுநூற்றி ஐம்பது சதுர அடிக்கு" என்னும் சொற்களை இடுவதன் மூலம்; அத்துடன்

(3) அப்பிரிவின் (இ) என்னும், பந்தியில், "ஆயிரத்து இருநூற்று ஐம்பது சதுர அடிக்கு மேற்பட்டதாக, ஆனல் இரண்டாயிரம் சதுர அடிக்கு' என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஆயிரத்து எழு நூற்றி ஐம்பது சதுர அடிக்கு மேற்பட்டதாக ஆனல் மூவாயிரம் சதுர அடிக்கு" என்னும் சொற்களை இடுவதன்மூலம்.

16. முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவானது, "செய்துகொள்ளப்பட்ட ஏதேனும் ஒப்பந்தத்தை" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "1981 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 12 ஆந் தேதிக்கு முன்னர் செய்து கொள்ளப்பட்ட ஏதேனும் ஒப்பந்தத்தை" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

17. முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 அ என்னும் பிரிவானது, அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், "அமைச்சரினல் அங்கீகரிக்கப்பட்ட" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அமைச்சரினல் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் 1983 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31 ஆந் தேதிக்கு முன்னர் அங்கீகரிக்கப்பட்ட" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

18. முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆ என்னும் பிரிவானது, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியில், "அமைச்சரினல் அங்கீகரிக்கப்பட்ட" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அமைச்சரினல் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் 1983 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31 ஆந் தேதிக்கு முன்னர் அங்கீகரிக்கப்பட்ட" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*19.* முதன்மைச் சட்டவாக்கத்தின் 22இ என்னும் பிரிவானது, அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், ''அமைச்சரினல் அங்கீகரிக்கப்பட்டதும்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''அமைச்சரினல் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் 1983ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31ஆந் தேதிக்கு முன்னர் அங்கீகரிக்கப்பட்டதும்'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*20.* முதன்மைச் சட்டவாக்கத்தின் 22ஈ என்னும் பிரிவானது, அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (iii)ஆம் உட்பந்தியில், ''அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டுள்ள'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''அமைச்சரால் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் 1983ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31ஆந் தேதிக்கு முன்னர் அங்கீகரிக்கப்பட்டுள்ள'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*21.* பின்வரும் புதிய பிரிவானது 22ஈ என்னும் பிரிவை உடனடுத்து உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன், அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 22உ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

''16, 16அ, 16ஆ, 20, 22அ, 22ஆ, 22இ அல்லது 22ஈ என்னும் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அங்கீகாரங்களை இல்லாதொழிப்பதனை விதந்துரைப்பதற்கு ஆணையாளர் தலைமையதிபதிக்குள்ள தத்துவம்.

22உ. ஆணையாளர் தலைமையதிபதி—

(அ) 16ஆம் பிரிவின்கீழ் அல்லது 16அ என்னும் பிரிவின்கீழ் அல்லது 16ஆ என்னும் பிரிவின்கீழ் அல்லது 20-ஆம் பிரிவின்கீழ் அல்லது 22இ என்னும் பிரிவின்கீழ் அல்லது 22ஈ என்னும் பிரிவின்கீழ் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் கம்பெனி அல்லது பொறுப்புமுயற்சியானது, எந்தத்தேதியில், விடயத்திற்கேற்றாற் போன்று, அத்தகைய கம்பெனியை அல்லது பொறுப்பு முயற்சியை அமைச்சர் அங்கீகரித்துள்ளாரோ அந்தத் தேதியிலிருந்து ஓர் ஆண்டுக் காலப்பகுதிக்குள் அலுவலைத் தொடங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லையென; அல்லது

(ஆ) 16ஆ என்னும் பிரிவின்கீழ் அல்லது 22அ என்னும் பிரிவின் கீழ் அல்லது 22ஆ என்னும் பிரிவின் கீழ், கம்பெனியொன்று அல்லது பொறுப்பு முயற்சியொன்று தொடர்பில் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் நிருமாணம், ஒப்பந்தம் அல்லது கருத்திட்டமானது, எத்தேதியில், விடயத்திற்கேற்றாற்போன்று, அத்தகைய நிருமாணத்தை, ஒப்பந்தத்தை அல்லது கருத்திட்டத்தை அமைச்சர் அங்கீகரித்துள்ளாரோ அத்தேதியிலிருந்து ஓர் ஆண்டுக் காலப்பகுதிக்குள் அத்தகைய கம்பெனியால் அல்லது பொறுப்பு முயற்சியால் தொடங்கப்பட்டிருக்கவில்லையென,

திருப்திப்படுகின்றவிடத்து, அத்தகைய அங்கீகாரம் இல்லாதொழிக்கப்படவேண்டுமென அவர் அமைச்சருக்கு விதந்துரைத்தல் வேண்டும். அத்தகைய விதந்துரையின் மீது அமைச்சரானவர், பொருளாதார நலன்களைக் கருத்திற்கொண்டு, கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அத்தகைய அங்கீகாரத்தை இல்லாதொழிக்கலாம்.''

22. முதன்மைச் சட்டவாக்கத்தின் 23ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது.

(அ) அவ்வுட்பிரிவின் (உ) என்னும் பந்தியை உடனடுத்து, பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன்மூலம்:-

"(உஉ) ஆள் ஒருவரினல், 1981 ஆண்டு ஏப்பிறில் மாதம் 1 ஆந் தேதி அன்று அல்லது அதன் பின்னர் கொள்ளப்பட்டதும் அத்தகைய ஆளினல் கொண்டு நடாத்தப்பட்ட அல்லது பிரயோகிக்கப்பட்ட ஏதேனும் வியாபாரத்தில், தொழிலில், உயர் தொழிலில் அல்லது வாழ்க்கைத் தொழிலில் பயன்படுத்தப்பட்டதுமான, 1973 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க இருப்பிடக் கூறுகள் சட்டத்தின் கருத்தெல்லேக்குள்ளான பதிவு செய்யப்பட்சி கூட்டாடட் ஆதனமொன்றில் உள்ளடங்கியுள்ள ஏதேனும் வதிவிடமல்லாத இடவசதிக் கூறினது அழிவு, தேய்வு என்பனவற்ருலான தேய்மானத்துக்கென, ஆணையாளர் தலைமையதிபதி நியாயமெனக் கருதுகின்றவாருன (கொள்ளப்பட்ட விலையின்மீது ஆண்டொன்றுக்கு நிர்ணயிக்கப்பட்ட வீத சதவீதமொன்றில் கணிக்கப்பட்ட) அத்தகைய விடுதொகை;

ஆயினும், முந்திய வரி மதிப்பீட்டாண்டுகளிலுள்ள தேமானத்துக்கான மொத்த விடுதொகையானது அத்தகைய கூறின் கொள்வனே விலைக்குச் சமமானதாகவிருப்பின், அத்தகைய கூறு தொடர்பில், இந்தப் பந்தியின் ஏற்பாடுகளின் கீழ் ஆளொருவருக்கு கழிப்பனவு எதுவும் அனுமதிக்கப்படுதலாகாது;";

(ஆ) அவ்வுட்பிரிவின் (ஓ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலம்;-

"(ஓ) ஆள் ஒருவரினல் கொண்டு நடாத்தப்படும் அல்லது பிரயோகிக்கப்படும் ஏதேனும் வியாபாரம், தொழில், உயர் தொழில் அல்லது வாழ்க்கைத்தொழில் தொடர்பில் எக்காலப் பகுதிக்கு இலாபங்களும் வருமானமும் நிச்சயிக்கப்படுகின்றனவோ அக்காலப் பகுதிக்கு அவர் செலுத்துவதற்கு ஆளாகின்ற ஏதேனும்:-

(i) 1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் கீழான தொழில் மொத்த விற்பனவு வரி; அல்லது

(ii) 1981 ஆம் ஆண்டின் 69 ஆம் இலக்க, மொத்த விற்பனவு வரவு வரிச் சட்டத்தின் 47 ஆம் பிரிவின்கீழ் அனுமதிக்கக்கூடியனவான எவையேனும் கழிவுகள் நீங்கலாக, அச்சட்டத்தின் கீழ் செலுத்தப்படற்பாலதான மொத்த விற்பனவு வரவு வரி;" அத்துடன்

(இ) அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவில், ''அத்தகைய ஆளுக்கு (1) (அ), (1) (ஆ), (1) (இ), (1) (ஈ), (1) (உ), அல்லது (1) (ஊ) என்னும் உட்பிரிவின்கீழ்'' என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, ''அத்தகைய ஆளுக்கு, (1) (அ), (1) (ஆ), (1) (இ), (1) (ஈ), (1) (உ), (1) (உஉ) அல்லது (1) (ஊ) என்னும் உட்பிரிவின்கீழ்'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலம்: அத்துடன்

(ஈ) அப்பிரிவின் (7) ஆம் உட்பிரிவினது (அ) என்னும் பந்தியின் (i) ஆம் உட்பந்திக்குப் பதிலாகப் பின்வரும் உட்பந்தியை இடுவதன்மூலம்:-

''(i) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ், அல்லது (ஆ) என்னும் பந்தியின் கீழ், அல்லது (இ) என்னும் பந்தியின் கீழ், அல்லது (ஈ) என்னும் பந்தியின் கீழ், அல்லது (உ) என்னும் பந்தியின்கீழ், அல்லது (உஉ) என்னும் பந்தியின் கீழ் அல்லது 162ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ்,''.

23. முதன்மைச் சட்டவாக்கத்தின் 31ஆம் பிரிவானது, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(அ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், ''உள்ளூர் அதிகாரசபை ஒன்றிற்கு, இலங்கை அரசாங்கத்தால் தாபிக்கப்பட்ட நிதியம் ஒன்றுக்கு'' என்னும் சொற்களுக்குப்பதிலாக, ''உள்ளூர் அதிகாரசபை ஒன்றிற்கு, 1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்டதாகக் கருதப்படும் ஏதேனும் உயர் கல்வி நிறுவனத்துக்கு இலங்கை அரசாங்கத்தால் தாபிக்கப்பட்ட நிதியம் ஒன்றுக்கு'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம், அத்துடன்

(ஆ) அவ்வுட்பிரிவின் (ஓ) என்னும் பந்தியின் (v) ஆம் உட்பந்தியின் இறுதியில், பின்வரும் உட்பந்திகளைச் சேர்ப்பதன் மூலம்:-

''(vi) 1981ஆம் ஆண்டின் 55ஆம் இலக்க, இலங்கை அடிப்படைக் கற்கைகளுக்கான நிறுவகச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட இலங்கை அடிப்படைக் கற்கைகளுக்கான நிறுவகம்;

(vii) 1982ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க, சருவதேச சிறகு அவரை நிறுவகச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட சருவதேச சிறகு அவரை நிறுவகம்;'';

(இ) அவ்வுட்பிரிவின் (ஔ) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் புதிய பந்தியை இடுவதன் மூலம்:-

''(ஔ) ஆளொருவர்—

(i) ஏதேனும் வீடு, தொடர்மாடி அல்லது கூறு, அத்தகைய ஆளினால் தொழிலுக்கமர்த்தப்பட்ட பணியாட்தொகுதியின்

எவரேனும் உறுப்பினரால் குடியிருப்பு வீடொன்ருகக் குடி யிருக்கப்படுவதற்காகவிருப்பின்,

(ii) அத்தகைய வீட்டின், தொடர்மாடியின், அல்லது கூறின் தள இடப்பரப்பு இரண்டாயிரம் சதுர அடியை விஞ்சாததாக விருப்பின், அத்துடன்

(iii) அத்தகைய வீடு அல்லது தொடர்மாடி அல்லது கூறு தொடர் பாக, 23 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (1) ஆம் உட்பந்தியின் கீழ் அல்லது 23 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஊ) என்னும் பந்தியின் கீழ் விடுதொகை எதுவும் கழிக்கப்படற்பாலதற்றதாக விருப்பின்.

அவரால் அத்தகைய வீட்டை அல்லது தொடர்மாடியைக் கட்டு வதில் செலவிடப்பட்ட அல்லது (1978ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட) நகர அபிவிருத்தி அதிகாரசபையின் அதிகாரத்துடன் நிருமாணிக்கப் பட்டதும், 1973ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க இருப்பிடக் கூறுகள் சொத்தாண்மைச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் பதிவுசெய்யப்பட்ட ஒரு கூட்டாட்சியாதனத்தினுள் அடங்கியுள்ளதும் ஆன வதிவிட இடவசதிக் கூறெதனையும் கொள்வனவு செய்யப்படுகையில் செல வான ஏதேனும் தொகை அத்துடன்

(ஈ) அவ்வுட்பிரிவின் முடிவில் பின்வருவதனைச் சேர்ப்பதன்மூலம்:-

இவ்வுட்பிரிவின் (உ), (எ) என்னும் பந்திகளிலும், (3) ஆம் உட்பிரிவிலும் ''கொள்வனவு'' என்னும் சொல்லமைப்பு—

(i) ஏதேனும் குத்தகை ஐம்பது ஆண்டுகளை விஞ்சியவொரு காலப் பகுதிக்காக இருந்தால்; அத்துடன்

(ii) அத்தகைய குத்தகைக்கான பிரதிபயன், அத்தகைய குத்தகைக் கான உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்ட நேரத்தில்முற்ருகச் செலுத்தப்பட்டிருந்தால்,

(1978 ஆம் ஆண்டின் 41ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தினல் தாபிக்கப்பட்ட) நகர அபிவிருத்தி அதிகாரசபையின் அங்கீகாரத்துடன் நிருமாணிக்கப்பட்டதும், 1973ஆம் ஆண்டின்11ஆம் இலக்க, இருப்பிடக் கூறுகள் சொத்தாண்மைச் சட்டத்தின் கருத் தெல்லைக்குள் பதிவுசெய்யப்பட்டஒரு கூட்டாட்சியாதனத்தில்அடங்கி யுள்ளதுமான ஏதேனும் வதிவிட இடவசதிக்கூறின் குத்தகையொன் றினை உள்ளடக்குவதாகக் கருதப்படுதல் வேண்டும்.

UNIVERSITY OF MORATUWA LIBRARY SRI LANKA

24. பின்வரும் புதிய பிரிவுகள், 32ஆம் பிரிவை உடனடுத்து உட்புகுத்தப்படுகின்றனவென்பதுடன், அவை முறையே முதன்மைச் சட்டவாக்கத்தின் 32அ, 32ஆ, 32இ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும்:—

'அரசாங்கத்திடம், காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவிடம், பகிரங்கக் கூட்டுத்தாபனத்திடம் அல்லது உள்ளூரதிகாரசபையிடம் உரித்தாக்கப்பட்ட ஆதனம் தொடர்பில் செலுத்தப்படற்பாலதான நட்டஈட்டின் மீதான வட்டிக்கு வரிவிதித்தல் தொடர்பிலான சிறப்பேற்பாடுகள்.

32. (1) இப்பிரிவின் ஏற்பாடுகள், அரசாங்கத்திடம் அல்லது காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவிடம் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனமொன்றிடம் அல்லது உள்ளூரதிகாரசபையொன்றிடம் உரித்தாக்கப்பட்ட ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் தொடர்பில் செலுத்தப்படற்பாலதான நட்டஈட்டின் மீது செலுத்தப்படற்பாலதான (இப்பிரிவில் ''இயைபான வட்டி'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) வட்டிக்கு, அத்தகைய வட்டியானது, எத்தேதியன்று அத்தகைய நட்டஈடு வருமதியாகச் சேருகின்றதோ அத்தேதியன்று தொடங்குகின்றதும், அத்தகைய நட்டஈடு செலுத்தப்படும் தேதியன்று முடிவடைகின்றதுமான காலப்பகுதிக்கான அத்தகைய நட்ட ஈட்டின்மீது செலுத்தப்படற்பாலதான திரண்ட வட்டியொன்றுற்போன்று, ஏற்புடையனவாதல் வேண்டும்.

(2) ஏதேனும் சட்டத்தில் முரணுகை எது எப்படியிருப்பினும்—

(அ) எவரேனும் ஆளினல் பெறப்படும் இயைபான வட்டியானது, எந்த வரிமதிப்பீட்டாண்டுடன் அத்தகைய வட்டி தொடர்புடையதாயுள்ளதோ அந்த வரிமதிப்பீட்டாண்டில் அல்லாது, எந்த வரிமதிப்பீட்டாண்டில் அத்தகைய வட்டியை அவர் பெறுகின்றாரோ அந்த வரிமதிப்பீட்டாண்டில் கிடைக்கும் வருமானமாகக் கருதப்படல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வட்டியானது, பத்து சதவீதம் என்னும் வீதத்தில் வருமானவரிக்குரியதாதலும் வேண்டும்;

(ஆ) இயைபான வட்டியை எவரேனும் ஆளுக்குச் செலுத்துகின்ற அரசாங்கம், காணிச் சீர்திருத்த ஆணைக்குழு, பகிரங்கக் கூட்டுத்தாபனம் அல்லது உள்ளூரதிகாரசபையானது, அத்தகைய வட்டியிலிருந்து, அத்தகைய வட்டியின் பத்து சதவீதத்துக்குச் சமமான தொகையொன்றைக் கழித்தல் வேண்டுமென்பதுடன், அவ்வாறு கழித்ததொகையினை, செலுத்தப்படற்பாலதான இயைபான வட்டியின் மொத்தத் தொகை, கழிப்பனவு செய்யப்பட்ட வரி, செலுத்தப்பட்ட தேறிய தொகை, அது செலுத்தப்பட்ட ஆளினதும் பெயரும் முகவரியும் என்னும் விபரங்களை காட்டும் எழுத்திலான கூற்றொன்றுடன் ஆணையாளர் தலைமையதிபதிக்கு அனுப்புதல் வேண்டும் என்பதுடன், அவ்வாறு கழிக்கப்பட்ட தொகையானது, (அ) என்னும் பந்தியின்கீழ் அத்தகைய ஆளினல் செலுத்தப்படற்பாலதான வரிக்கு எதிரீடு செய்யப்படுதலும் வேண்டும்.

(3) இந்தப் பிரிவில்:—

''காணிச் சீர்திருத்த ஆணைக்குழு'' என்பது, 1972ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, காணிச் சீர்திருத்த ஆணைக்குழுச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட காணிச் சீர்திருத்த ஆணைக்குழு எனப் பொருளாகும்;

''பகிரங்கக் கூட்டுத்தாபனம்'' என்பது, வழங்கல், கடன் அல்லது வேறு வகையில் அரசாங்கத்தால் முழுமையாக அல்லது பகுதியளவில் ஏற்பாடு செய்யப்பட்ட மூலதனத்துடன் கூடிய, கம்பெனிகள் கட்டளைச்சட்டம் தவிர்ந்த ஏதேனும் எழுத்திலானசட்டத்தினால் அல்லது ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட அல்லது தாபிக்கப்படும் ஏதேனும் கூட்டுத்தாபனம், சபை அல்லது வேறு குழு எனப் பொருளாகும்.

32ஆ, (1) இப்பிரிவின் ஏற்பாடுகள்—

(அ) எவரேனும் தனியாளினால்; அல்லது

(ஆ) (i) வங்கித்தொழில் நிறுவனமொன்றினால் தொழிற்படுத்தப்படும்; அத்துடன்

(ii) ஆணையாளர் தலைமையதிபதியினால் காலத்துக்குக் காலம் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுடன் இசைந்தொழுகும்.

ஆணையாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்ட திட்டமொன்றின்கீழ், எவரேனும் தனியாளின்சார்பில் வேறு ஆளினால்,

அத்தகைய வங்கித்தொழில் நிறுவனத்தில், இப்பிரிவின் நோக்கங்களுக்கென, ஆணையாளர் தலைமையதிபதியினால் குறித்துரைக்கப்படும் காலப்பகுதிக்குக் குறையாதவொரு காலப்பகுதிக்கென வைப்பிலிடப்பட்ட பணத்தொகையொன்றின்மீது, (இப்பிரிவில் ''இயைபான வட்டி'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) திரண்டவட்டிக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

ஆணையாளர் தலைமையதிபதி, அவரால் குறித்துரைக்கப்பட வேண்டியதென இப்பிரிவினால் தேவைப்படுத்தப்படும் ஏதேனும் கருமத்தைக் குறித்துரைக்கையில், சேமிப்புகளுக்கு ஊக்கம் கொடுப்பதற்கும் வசதி அளிப்பதற்குமான தேவைப்பாட்டைக் கருத்தில் எடுத்தல் வேண்டும்.

(2) இச்சட்டத்தினால் முரணாக எது எப்படியிருப்பினும்—

(அ) எவரேனும் தனியாளுக்குச் செலுத்தப்படும் இயைபான வட்டியானது, எந்த வரிமதிப்பீட்டாண்டுடன் அத்தகைய வட்டி தொடர்புடையதாயுள்ளதோ அந்த வரிமதிப்பீட்

டாண்டில் அல்லது எந்த வரிமதிப்பீட்டாண்டில் அத்தகைய வட்டி அவருக்குச் செலுத்தப்படுகின்றதோ அந்த வரிமதிப்பீட்டாண்டில் அவருக்குக் கிடைக்கும் வருமானமாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வட்டியானது, பதினைந்து சதவீதம் என்னும் வீதத்தில் அல்லது அந்த வரிமதிப்பீட்டாண்டிற்கான (இயைபான வட்டி உள்ளடங்காத) அவரின் இலாபங்களினதும் வருமானத்தினதும் மீது, எந்த வீதத்தில் வருமானவரி செலுத்துவதற்கு ஆளாகிறாரோ அந்த வீதத்தில், இவற்றில் எது குறைவானதோ அந்த வீதத்தில் வருமான வரிக்கு ஆளாதலும் வேண்டும்;

(ஆ) அத்தகைய தனியாளுக்கு, இயைபான வட்டியினைச் செலுத்தும் வங்கித்தொழில் நிறுவனமானது. (அ) என்னும் பந்தியில் எது எப்படியிருப்பினும், அத்தகைய வட்டியிலிருந்து, அத்தகைய வட்டியின் பதினைந்து சதவீதத்துக்குச் சமமான தொகையொன்றினைக் கழிப்பனவு செய்தல் வேண்டுமென்பதுடன், அவ்வாறு கழிப்பனவு செய்யப்பட்ட பணத்தொகையினை உடனடியாக ஆணையாளர் தலைமையதிபதிக்கு அனுப்புதலும் வேண்டும்;

(இ) எவரேனும் தனியாளுக்குச் செலுத்தப்பட்ட இயைபான வட்டியிலிருந்து, (ஆ) என்னும் பந்திக்கிணங்க வருமான வரியினை வங்கித்தொழில் நிறுவனமொன்று கழிப்பனவு செய்கின்றவிடத்து, அது அத்தகைய தனியாளுக்கு, செலுத்தப்படற்பாலதான இயைபான வட்டியின் மொத்தத் தொகையும் கழிப்பனவு செய்யப்பட்ட வட்டியின் வீதத்தையும் தொகையையும், அத்துடன் உண்மையாகச் செலுத்தப்பட்ட தேறிய தொகையையும் காட்டுகின்ற எழுத்திலான கூற்றொன்றை வழங்குதல் வேண்டும்;

(ஈ) (i) எவரேனும் தனியாளுக்குச் செலுத்தப்பட்ட இயைபான வட்டியிலிருந்து (ஆ) என்னும் பந்திக்கிணங்க ஏதேனும் தொகையானது கழிக்கப்படுகின்றவிடத்தும், அத்துடன்

(ii) (இயைபான வட்டி நீங்கலாக) அவரது இலாபங்கள், வருமானங்கள் தொடர்பில், எந்த வரி மதிப்பீட்டாண்டில் அத்தகைய கழிப்பனவு செய்யப்பட்டதோ அந்த வரிமதிப்பீட்டாண்டுக்கென அத்தகைய தனியாள் ஆகக் கூடிய எந்த வீதத்தில் வருமானவரி செலுத்தற்காளாகியுள்ளரோ அந்த வீதம் பதினைந்து சதவீதத்திற்குக்குறைவாக உள்ளவிடத்தும்

அப்பொழுது, அத்தகைய ஆள் (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட சான்றிதழை சமர்ப்பித்தலின்மீதும் XXIII ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கு அமையவும், பதினைந்து சத வீதத்துக்கும் அத்தகைய ஆகக்கூடிய வரி வீதத்துக்கும் இடையே யுள்ள வித்தியாசத்துக்கு சமமானதாக இருக்கக்கூடிய இயைபான வட்டியின் அத்தகைய சதவீதத்தை மீளப்பெற உரித்துடையவரா தல் வேண்டும்.

(3) எவரேனும் தனியாளுக்கு வங்கித்தொழில் நிறுவனமொன்றி னால் செலுத்தப்பட்ட இயைபான வட்டியிலிருந்து ஏதேனும் வருமான வரியைக் கழிப்பனவு செய்வதற்கு (2) ஆம் உட்பிரிவினால் தேவைப்படுத் தப்பட்ட அவ்வங்கித்தொழில் நிறுவனம் அத்தகைய வருமான வரியைக் கழிப்பதற்குத் தவறுகின்றவிடத்து அவ்வேளை, அத்தகைய வங்கித் தொழில் நிறுவனத்தின் பணிப்பாளர், பொது முகாமையாளர் அல்லது வேறு பிரதான அலுவலர், இப்பிரிவின்கீழ் எந்த வட்டியைக் கழிப்பனவு செய்வதற்கு அத்தகைய நிறுவனம் தேவைப்படுத்தப்பட்டதோ அந்த வட்டிக்கு தாமே பொறுப்புடையவராதல் வேண்டுமென்பதுடன், அத் தகைய வட்டி, இச்சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட எல்லா வழிவகை களாலும் அத்தகைய பணிப்பாளரிடமிருந்து, முகாமையாளரிடமிருந்து அல்லது பிரதான அலுவலரிடமிருந்து அறவிடவும் படலாம்.

(4) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆணையாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்ட திட்டமொன்றின்கீழ் தனியாளொருவரினால் வங்கித் தொழில் நிறுவனமொன்றில் ஏதேனும் பணம் வைப்பிலிடப்பட்டுள்ள விடத்தும் அத்தகைய திட்டம் தொடர்பில் ஆணையாளர் தலைமையதி பதியினால் விதிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு முரணாக, அத்தகைய பணத் தின்மீதான வட்டியை அத்தகைய தனியாள் மீளப்பெறுமிடத்தும், இச் சட்டத்தில் உள்ளது எது எப்படியிருப்பினும், அவ்வாறு மீளப்பெறப் பட்ட வட்டி தொடர்புடையதாயுள்ள ஒவ்வொரு வரி மதிப்பீட்டாண்டு தொடர்பிலும் மேலதிக வரிமதிப்பீடுகள் செய்யப்படலாம்.

இலங்கைக்கு வெளியே கம்பெனிகளாலும் பங்காண்மைகளாலும் ஆட்கள் குழுக்களினாலும் அளிக்கப்பட்ட கடன்கள் மீதான மொத்த வட்டியின்மீது வருமானவரிவீதம்.

32இ. இலங்கைக்கு வெளியேயான ஏதேனும் கம்பெனியால், பங்காண்மையால் அல்லது வேறு ஆட்கள் குழுவால் இலங்கையில் எவரேனும் ஆளுக்கு அளிக்கப்பட்ட ஒரு கடன் மீது செலுத்தப் படற்பாலதான, அத்தகைய கம்பெனிக்கு அல்லது பங்காண்மைக்கு அல்லது வேறு ஆட்கள் குழுவுக்கு வந்து சேர்வதான அல்லது 80 அ என்னும் பிரிவினால் வந்து சேர்வதாகக் கருதப்படுவதான வட்டியாகவுள்ள (இச்சட்டத்தின் வேறேதேனும் ஏற்பாட்டின்கீழ் தவிர்ப்பளிக்கப்பட்ட வட்டியல்லாது) மொத்த வட்டி, இச்சட்டத் தில், எது எவ்வாறிருப்பினும் பதினைந்து சதவீதம் என்னும் வீதத் தில் வருமானவரி விதிக்கப்படற்பாலதாதல் வேண்டும்.

25. முதன்மைச் சட்டவாக்கத்தின் 33ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அப்பிரிவின் (1), (1அ) என்னும் உட்பிரிவுகளை நீக்கஞ்செய்து அவற்றிற்கு பதிலாகப் பின்வரும் உட்பிரிவுகளை இடுவதன்மூலம்:—

"(i) ஏதேனும் வரிமதிப்பீட்டு ஆண்டில் இலங்கையில் வதிவுள்ள ஏதேனும் கம்பெனி அந்த வரிமதிப்பீட்டு ஆண்டிற்குச்செலுத்துவதற்குப் பொறுப்புடையதாகும் வருமான வரியானது:—

(அ) அந்த வகுப்பைச் சேர்ந்த கம்பெனிகளுக்கு ஏற்புடையதான வரி வீதம் என இச்சட்டத்துக்கான இரண்டாவது அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டதோதான வரிவீதத்தில், அந்த வரிமதிப்பீட்டு ஆண்டிற்கு அத்தகைய கம்பெனியின் வரி விதிக்கற்பாலதான வருமானத்தின்மீது கணிக்கப்பட்ட ஒரு தொகையைக் கொண்டதாயிருத்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) ஏதேனும் வரிமதிப்பீட்டு ஆண்டிற்கு அத்தகைய கம்பெனியின் வரிவிதிக்கற்பாலதான வருமானம் எந்த இலாபங்களின்மீது கணிக்கப்படுகின்றதோ அந்த இலாபங்களிலிருந்து அந்த வரிமதிப்பீட்டு ஆண்டில் அத்தகைய கம்பெனியால் பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தப் பங்கிலாபத்தின் கூட்டு மொத்தத் தொகையின் சதவீதமொன்றிற்குச் சமமான ஒரு தொகையைக் கொண்டதாயிருத்தல் வேண்டும்; அத்தகைய சதவீதமானது—

(i) அந்த வரிமதிப்பீட்டு ஆண்டு 1979 ஏப்பிறில் 1ஆந் தேதியன்று தொடங்குகின்ற வரி மதிப்பீட்டு ஆண்டாக இருப்பின் முப்பத்து மூன்றுடு மூன்றிலொன்றாகவும்: அத்துடன்

(ii) அந்த வரிமதிப்பீட்டு ஆண்டு, 1980 ஏப்பிறில் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிமதிப்பீட்டு ஆண்டாக இருப்பின் இருபதாகவும்

இருக்கும்:

ஆயினும் விலைகோரிப் பெறப்படும் பங்குடைய பகிரங்கக் கம்பெனியொன்று, 1980, ஏப்பிறில் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டு ஆண்டிற்கு (ஆ) என்னும் பந்தியின் கீழ் வரி செலுத்துவதற்குப் பொறுப்புடையதாதல் ஆகாது."

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், "ஓராம், (1அ) என்னும் உட் பிரிவுகளின் நோக்கங்களுக்காக" என்னுஞ் சொற்களுக்கும் எண்ணுக்கும் பதிலாக, "(1) ஆம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக" என்னுஞ் சொற்களையும் எண்ணையும் இடுவதன் மூலம்;

(3) அப்பிரிவின் இரண்டாம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (ii) ஆம் உட்பந்தியில் "அதன் வழங்கப்பட்ட மூலதனம் ஐந்து இலட்சம் ரூபாவுக்கு மேற்படாததும்;" என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக, "வரிவிதிக்கற்பாலதான வருமானம், ஒன்றில் எந்த வரிமதிப்பீட்டு ஆண்டிற்குக் கணிக்கப்படுகின்றதோ அந்த வரிமதிப்பீட்டு ஆண்டு முழுவதும் அன்றேல் கம்பெனி கூட்டிணைக்கப்பட்ட தேதி முதல் அந்த வரிமதிப்பீட்டு ஆண்டு முடிவடையும் வரையில் அதன் வழங்கப்பட்ட மூலதனம் ஐந்து இலட்சம் ரூபாவுக்கு மேற்படாத்தும்;" என்னும் சொற்களை இடுவதன் மூலம்;

(4) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவினது (இ) என்னும் பந்தியை நீக்கஞ் செய்துவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலம்: —

(இ) விலைகோரிப் பெறப்படும் பங்குடைப் பகிரங்கக் கம்பெனி ஒன்றல்லாத வேறு கம்பெனி ஒன்றின் "மொத்தப் பங்கிலாபங்களின் தொகை" என்பது —

(i) கம்பெனியால் அதன் பங்கிலாபங்கள் தொடர்பில் 38ஆம் பிரிவின் கீழ் கழிப்பனவு ஒன்று செய்யப்படும் ஏதேனும் விடயத்தில் அத்தகைய கழிப்பனவு செய்யப்படுமுன்னருள்ள பங்கிலாபத்தின் தொகை எனவும்;

(ii) கம்பெனியால் அதன் பங்கிலாபங்களின் தொடர்பில் அத்தகைய கழிப்பனவு எதுவும் செய்யப்படாத ஏதேனும் விடயத்தில் —

(அ) பங்கிலாபம், 1980 மார்ச்சு 31 ஆந் தேதியன்று அல்லது அதற்கும் முன்னர் செலுத்தப்படற்பாலதாயின் அதன் ஐம்பது சத வீதத்தால்; அல்லது

(ஆ) பங்கிலாபம், 1980 ஏப்பிறில் 1 ஆந் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் செலுத்தப்படற்பாலதாயின் அதன் இருபத்தைந்து சதவீதத்தால்,

அதிகரிக்கப்பட்ட பங்கிலாபத்தின் தொகை எனவும் பொருளாகும்;

26. முதன்மைச் சட்டவாக்கத்தின் 34ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் "இரண்டாம் அட்டவணையின் V ஆம் பாகத்தில்" என்னும் சொற்களுக்கும் எண்ணுக்கும் பதிலாக, "இரண்டாம் அட்டவணையின் VII ஆம் பாகத்தில்" என்னுஞ் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

27. முதன்மைச் சட்டவாக்கத்தில் 37 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப் பட்டு, அதற்குப் பதிலாக பின்வரும் புதிய பிரிவு இடப்படுகின்றது—

வதிவற்ற கம்பெனிக்குச் செலுத்தற் பாலதான பங்கிலாபங் களின்மேல் வதிவுள்ள கம்பெனியானது வரியைக் கழித்தல்

37. வதிவுள்ள கம்பெனி ஒவ்வொன்றும், ஏதேனும் வரிமதிப்பீட்டு ஆண்டின்போது ஏதேனும் வதிவற்ற கம்பெனிக்குச் செலுத்தற் பாலதாகவரும் (இப்பிரிவில் ''இயைபான பங்கிலாபம்'' எனக் குறிப்பீடு செய்யப்படுகின்ற) ஏதேனு'ம் பங்கிலாபத் தொகையி லிருந்து—

(அ) இயைபான பங்கிலாபமானது, இச்சட்டத்தின்கீழ்வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்ட ஒரு பங்கிலாபத் தொகை யினது பாகமல்லாததும், அத்தகைய வதிவுள்ள கம்பெனி யினுல் வதிவுள்ள வேருெரு கம்பெனியிடமிருந்து பெறப் பட்டதுமான பங்கிலாபத் தொகையினது ஏதேனும் பாகத்தைக் கொண்டிருக்குமாயின், பங்கிலாபம் 1980 மார்ச்சு 31 தேதியன்று அல்லது அதற்கு முன்னர் செலுத் தற்பாலதாயிருக்குமிடத்து, ஐம்பது சதவீதத்தால் அதி கரிக்கப்பட்டதும், பங்கிலாபம் 1980 ஏப்பிறில் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் செலுத்தற்பாலதா யிருக்குமிடத்து இருபத்தைந்து சதவீதத்தால் அதிகரிக் கப்பட்டதுமான அத்தகைய இயைபான பங்கிலாபத் தொகையினது ஐந்து சதவீதத்துக்குச் சமமான வருமான வரியையும்;

(ஆ) இயைபான பங்கிலாபமானது, இச்சட்டத்தின் கீழ் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்ட பங்கிலாப மொன்ருக இல்லாமலும், அத்துடன் அத்தகைய வதிவுள்ள கம்பெனியால், வேருெரு வதிவுள்ள கம்பனியிடமிருந்து பெறப்பட்ட ஒரு பங்கிலாபத் தொகையின் ஏதேனும் பாகத்தை கொண்டிராமலும் இருக்குமாயின், அத்தகைய இயைபான பங்கிலாபத்தின் ஐந்து சதவீதத்துக்குச் சமமான வருமான வரியையும்;

(இ) இயைபான பங்கிலாபம், இச்சட்டத்தின் கீழ் வருமான வரி யிலிருந்து விலக்களிக்கப்பட்ட பங்கிலாபமொன்ருகவுள்ள தும் அத்தகைய வதிவுள்ள கம்பெனியால் பெறப்பட்டது மான பங்கிலாபத்தின் தொகையிலிருந்து செலுத்தப்பட்ட தாயின், அத்தகைய இயைபான பங்கிலாபத் தொகையின் ஐந்து சத வீதத்துக்குச் சமமான வருமான வரியையும்; அத்துடன்

(ஈ) இயைபான பங்கிலாபம், விலேகோரிப் பெறப்படும் பங் குடைப் பகிரங்கக் கம்பெனியொன்றிடமிருந்து அத்தகைய

DISCARDED

வதியுள்ள கம்பெனியால் பெறப்பட்டிருக்கும் பங்கிலாபத் தொகையொன்றிலிருந்து செலுத்தப்பட்டதாயின், அத் தகைய இயைபான பங்கிலாபத் தொகையின் ஐந்து சத வீதத்துக்குச் சமமான வருமான வரியையும்

கழித்தல் வேண்டும்;

ஆயின், எவ்வாறுயினும், அத்தகைய வதிவற்ற கம்பெனி, அத்தகைய இயைபான பங்கிலாபத்தை அது பெறுகின்ற வரிமதிப் பீட்டு ஆண்டுக்கு வருமான வரி செலுத்துவதற்குப் பொறுப்பாக வில்லையென. அல்லது அந்த வரிமதிப்பீட்டு ஆண்டுக்கு இப் பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின் கீழ் அத்தகைய இயைபான பங்கிலாபத்திலிருந்து கழிக்கப்பட வேண்டுமெனத் தேவைப்படுத் தப்பட்ட தொகைக்குக் குறைவான ஒரு தொகையை வருமான வரியாகச் செலுத்துவதற்குப் பொறுப்பாகவுள்ளது என ஆணை யாளர் தலைமையதிபதி திருப்திப்படுகின்றவிடத்து. அவர், அத்த கைய வதிவற்ற கம்பெனி அந்த வரிமதிப்பீட்டு ஆண்டுக்குச் செலுத்துவதற்குப் பொறுப்பாகவுள்ள வருமான வரித் தொகை யைக் கருத்திற்கொண்டு, அத்தகைய இயைபான பங்கிலாபத் தொகையிலிருந்து, இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின் கீழ் அத்தகைய இயைபான பங்கிலாபத்திலிருந்து எந்த வரி வீதத்தில் வருமான வரியைக் கழிக்கவேண்டுமென அது தேவைப்படுத்தப் படுகின்றதோ அந்த வரி வீதத்துக்குக் குறைவான ஒரு வரிவீதத் தில் வருமான வரியைக் கழிக்குமாறு அத்தகைய வதிவுள்ள கம் பெனியைப் பணிக்கலாம் என்பதுடன், இப்பிரிவின் கீழ், வதி வுள்ள கம்பெனியொன்று கழிக்க வேண்டுமெனத் தேவைப்படுத் தப்பட்ட வருமான வரித்தொகை அத்தகைய வதிவுள்ள கம் பெனியிடமிருந்து குடியரசுக்குப் போகுமதியாகவுள்ள தனிசு ஒன் றுக இருத்தல் வேண்டும் என்பதுடன், அத்தன்மையிலேயே உட னடியாக அறவிடற்பாலதாதலும் வேண்டும் அல்லது வேறு வகை யில் அத்தகைய கம்பெனியால் செலுத்தற்பாலதான ஏதேனும் வருமான வரிக்கு மேலதிகமாக வரிமதிப்பீடு செய்யப்பட்டு, அத் தகைய கம்பெனியின்மீது பொறுப்பாக்கப்படலாம்.

28. முதன்மைச்சட்டவாக்கத்தின் 42 ஆம் பிரிவு, அப்பிரிவின் (ஊ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்திகளை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"(ஊஊ) 1981 ஆம் ஆண்டின் 55 ஆம் இலக்க, இலங்கை அடிப்படைக் கற்கைகளுக்கான நிறுவகச் சட்டத்தினுல் தாபிக்கப்பட்ட இலங்கை அடிப்படைக் கற்கைகளுக்கான நிறுவகத்திற்கு:

(ஊஊஊ) 1982 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, சர்வதேச சிறகு அவரை (தம்பல) நிறுவகச் சட்டத்தினுல் தாபிக்கப்பட்ட சர்வ தேச சிறகு அவரை (தம்பல) நிறுவகத்திற்கு;.''

29. முதன்மைச் சட்டவாக்கத்தின் 48 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், அப்பிரிவின் முடிவில் பின்வருவதனைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது: –

''இவ்வுட் பிரிவின் நோக்கங்களுக்கென, (1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தினுல்தாபிக் கப்பட்ட) நகர அபிவிருத்தி அதிகாரச் சபையின் அங்கீகாரத்துடன் நிருமாணிக்கப்பட்டதும் 1973 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, இருப் பிடக்கூறு சொத்தாண்மைச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள், பதிவு செய்யப்பட்ட கூட்டாட்சியாதனமொன்றில் அடங்கியுள்ளதுமான இட வசதிக் கூறு ஒன்றிலிருந்து வதிவற்ற கம்பெனியொன்றுக்கு எழுகின்ற இலாபங்களும் வருமானமும், அசைவற்ற ஆதனத்திலிருந்து அக்கம் பெனியால் பெறப்பட்ட இலாபங்களும் வருமானமுமாகக் கருதப் படுதல் ஆகாது.''

30. முதன்மைச் சட்டவாக்கத்தின் 54 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் அவ்வுட்பிரிவின் (ஈ), (உ) என்னும் பந்திகளை நீக்கஞ் செய்து அவற் றிற்குப் பதிலாகப் பின்வரும் பந்திகளை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப் படுகின்றது:—

''(ச) இச்சட்டத்தின் 31 (9) ஆம் பிரிவின் அல்லது 1963 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, உண்ணுட்டரசிறைச் சட்டத்தின் 16 அ என்னும் பிரி வின் கருத்தெல்லைக்குட்பட்ட அங்கீகரிக்கப்பட்ட தரும நிறுவன மொன்ருக இருக்கின்ற தரும நிறுவனமொன்றுக்கு அல்லது 31 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவினது (ஓ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய் யப்படுகின்ற ஏதேனும் நிறுவகத்துக்கு, மன்றத்துக்கு அல்லது ஆணைக் குழுவுக்கு அளிக்கப்படும் கொடை; அத்தகைய கொடை ஒவ்வொன் றும் பெறுமதியில் ஓராயிரம் ரூபாவுக்கு மேற்படவும் 1958 யூலை 18 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் செய்யப்பட்ட கொடை கள் தொடர்பில் அத்தகைய தனியாளின் சீவியகாலத்துக்கு ஆகக் கூடியது ஐந்து இலட்சம் ரூபாய் பெறுமதிக்கு அமைவாகவும் இருக்க வேண்டும்:

(உ) அரசாங்கத்துக்கு அல்லது ஏதேனும் உள்ளூர் அதிகார சபைக்கு அல் லது 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத் தின் கீழ் தாபிக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்டதாகக் கருதப்பட்ட ஏதேனும் உயர்கல்வி நிறுவனத்துக்கு அளிக்கப்படும் கொடை;''.

**31.** எண்பத்தோராம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் பிரிவு உட்புகுத்தப் படுகின்றது என்பதுடன், இது முதன்மைச் சட்டவாக்கத்தின் 81 அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:—

வெளிநாட்டு களியாட்டக் காரர்களுக்கும் கலைஞர்களுக்கும் செய்யப்பட்ட கொடுப்பனவுகளிலிருந்து வருமான வரியைக் கழித்தல்

81. அ. (1) (அ) இலங்கைப் பிரசை ஒருவரல்லாதவரும்; அத்துடன்

(ஆ) களியாட்டக்காரராக அல்லது கலைஞராக உயர் தொழிலை அல்லது வாழ்க்கைத் தொழிலைக் கொண்டுநடாத்துகின்றவரும் அல்லது பிரயோகிக்கின்றவருமான.

வேறு எவரேனும் ஆளுக்கு, இலங்கையில் அத்தகைய வேறு எவரேனும் ஆளினால் அத்தகைய உயர்தொழில் அல்லது வாழ்க்கைத் தொழில் கொண்டு நடாத்தப்படுகையில் அல்லது பிரயோகிக்கப் படுகையில் ஆற்றப்பட்ட சேவைகள் தொடர்பில் கொடுப்பனவு ஒன்றைச் செய்கின்ற ஒவ்வோராளும் அத்தகைய கொடுப்பனவிலிருந்து அத்தகைய கொடுப்பனவுத் தொகையின் முப்பத்துமூன்றேடு மூன்றிலொரு சதவீதத்துக்குச் சமமான வருமான வரியைக் கழித்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவிற்கிணங்க, அவரால் வேறு எவரேனும் ஆளுக்குச் செய்யப்பட்ட ஏதேனும் கொடுப்பனவிலிருந்து வருமான வரியைக் கழிக்கின்ற ஒவ்வோராளும், அத்தகைய வேறு ஆளுக்கு, பின்வரும் விவரங்களைத் தருகின்ற கூற்றென்றை வழங்குதல் வேண்டும்;—

(அ) கொடுக்குமதியாகவுள்ளகொடுப்பனவின் மொத்தத்தொகை;

(ஆ) கழிக்கப்பட்ட வரி வீதமும் தொகையும்;

(இ) உள்ளபடியே செலுத்தப்பட்ட தேறிய தொகை

(3) ஏதேனும் வரிமதிப்பீட்டு ஆண்டுக்கு ஆளொருவரின் வரி மதிப்பிடற்பாலதான வருமானம், இப்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட கொடுப்பனவொன்றை உள்ளடக்குமிடத்து, அப்பொழுது

(அ) அத்தகைய ஆள் அந்த வரிமதிப்பீட்டு ஆண்டுக்கு வருமான வரி செலுத்துவதற்கு ஆளாகியிருப்பாராயின், அவர் (2)ஆம் உட்பிரிவுக்கிணங்க செய்யப்பட்ட அத்தகைய கொடுப்பனவு தொடர்பான கூற்றென்றினைச் சமர்ப்பிப்பதன் மேல் அவரால் செலுத்தப்படற்பாலதான வருமான வரியிலிருந்து அத்தகைய கூற்றில் தரப்பட்டுள்ள வரித் தொகையைக் கழிப்பதற்கு உரித்துடையவராதல் வேண்டும்;

(ஆ) அத்தகைய ஆள், அந்த வரிமதிப்பீட்டு ஆண்டுக்கு வருமான வரி செலுத்துவதற்கு ஆளாகஇல்லாதவராயின், அவர் (2)ஆம் உட்பிரிவிற்கிணங்க,செய்யப்பட்ட அத்தகைய கொடுப்பனவு தொடர்பான கூற்றென்றினைச் சமர்ப்பிப்பதன் மேலும் அத்துடன் XXIII ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக் கமையவும், அத்தகைய கூற்றில் தரப்பட்டுள்ள வரித் தொகையின் மீளக்கொடுப்பனவு ஒன்றுக்கு உரித்துடைய வராதல் வேண்டும்.

(4) எவரேனும் ஆளினல் செலுத்தப்பட்ட ஏதேனும் கொடுப் பனவிலிருந்து (1) ஆம் உட்பிரிவிற்கிணங்க வருமானவரியைக் கழிக்கும்படி அவ்வுட்பிரிவின்கீழ் தேவைப்படுத்தப்பட்ட அத்தகைய ஆள் அத்தகைய வரியைக் கழிக்கத் தவறுகின்றவிடத்து, அப்பொழுது —

(அ) அத்தகைய ஆள் ஒரு தனியாளாக இருப்பாராயின், அத்தகைய தனியாள் ;

(ஆ) அத்தகைய ஆள், கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட் டிணைக்கப்படாத ஒரு கம்பெனியாகவோ அல்லது ஆட்கள் குழுவொன்ருகவோ இருப்பின் அத்தகைய கம்பெனியின் அல்லது குழுவின் செயலாளர், முகாமையாளர் அல்லது வேறு பிரதான அலுவலர்,

அந்த உட்பிரிவின்கீழ் கழிக்கும்படி அவர் தேவைப்படுத்தப்பட்ட வரியைச் செலுத்துவதற்குத் தாமே பொறுப்புடையவராதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய வரி, இச்சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட எல்லா வழிமுறைகளாலும், விடயத்துக்கேற்றவாறு அத்தகைய தனியாளிடமிருந்து, செயலாளரிடமிருந்து, முகாமை யாளரிடமிருந்து அல்லது வேறு பிரதான அலுவலரிடமிருந்து அறவிடவும் படலாம்.

(5) இப்பிரிவில், ''களியாட்டக்காரரின் அல்லது கலைஞரின் உயர் தொழில் அல்லது வாழ்க்கைத் தொழில்'' என்பது நடிகரின், இசைக் கலைஞரின், விளையாட்டு வீரரின் அல்லது வேழம்பரின் உயர் தொழிலை அல்லது வாழ்க்கைத்தொழிலை உள்ளடக்கும்.

32. முதன்மைச் சட்டவாக்கத்தின் 113 ஆம் பிரிவு, ''5. இலங்கையில் வதியாத ஆள்.................. அவ்வாளின் இலங்கையிலுள்ள முகவர் அல்லது தத்துவகாரர்'' என்னும் சொற்களிலிருந்து ''ஏதேனும் சபையையும் அல்லது

விசாரணை ஆணைக்குழுவையும் உள்ளடக்குதலாகாது'' என்னும் சொற்கள் வரையிலான எல்லாச் சொற்களுக்கும் பதிலாக ''5. இலங்கையில் வதியாத ஆள்......... அவ்வாளின் இலங்கையிலுள்ள முகவர் அல்லது அற்றேணித் தத்துவகாரர்'' என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

33, முதன்மைச் சட்டவாக்கத்தின் 118ஆம் பிரிவு அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், ''இச்சபை உறுப்பினர்கள்'' என்பதிலிருந்து அவ்வுட்பிரிவின் முடிவுரையிலுள்ள எல்லாச் சொற்களுக்கும் பதிலாக, ''அவ்வாறு நியமிக்கப்படும் இச்சபையின் உறுப்பினர் ஒவ்வொருவரும் மூன்றுண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு பதவி வகித்தல் வேண்டும் என்பதுடன் மீள நியமிக்கப்படுவதற்குத் தகுதியுடையவராதலும் வேண்டும்.'' என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

34. முதன்மைச் சட்டவாக்கத்தின் 129ஆம் பிரிவு. அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது.

(அ) அப்பந்தியின் (i) ஆம் உட்பந்தியில், ''அக்காசு'' என்பதிலிருந்து ''பிரயோகிக்கப்படுதல் வேண்டும்.'' என்பது வரையிலான எல்லாச் சொற்களுக்கும் பதிலாக, பின்வருவதனை இடுவதன் மூலம்:—

''அத்தகைய காசு முதலில் கைப்பற்றுவதற்கான செலவுகளினதும் கட்டணங்களினதும் கொடுப்பனவுக்குப் பிரயோகிக்கப்படுதலும் அத்துடன் ஏதேனும் மீதி, தவணை தவறிய வரியைக் கொடுத்துத்தீர்ப்பதற்குப் பிரயோகிக்கப்படுதலும் வேண்டும்;''

(ஆ) அப்பந்தியின் (ii) ஆம் உட்பந்தியில், ''அதிலிருந்துவரும் வருவாய்கள்', என்பதிலிருந்து ''பிரயோகிக்கப்படுதலும் வேண்டும்;'' என்பது வரையிலான எல்லாச் சொற்களுக்கும் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம்:—

''அதிலிருந்து வரும் வருவாய்கள் கைப்பற்றுவதற்கான செலவுகளையும் கட்டணங்களையும் கொடுப்பனவு செய்வதற்குப் பிரயோகிக்கப்படுதலும் அத்துடன் ஏதேனும் மீதி, தவணை தவறிய வரியைக் கொடுத்துத் தீர்ப்பதற்குப் பிரயோகிக்கப்படுதலும் வேண்டும்; அத்துடன்''

35. முதன்மைச் சட்டவாக்கத்துக்கான இரண்டாம் அட்டவணை இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் அட்டவணை இடப்படுகின்றது:—

# 1982ஆம் ஆண்டின் 40 இலக்க, கடன்கள் (சிறப்பேற்பாடுகள்) சட்டம்

*(1982, நவம்பர் மாதம் 3ஆம் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

எந்த ஏதேனும் காலப்பகுதியின்போது அந்தக் காலப்பகுதியிலான செலவினத்துக்கு அதிகாரமளிக்கும் ஒதுக்கீட்டுச் சட்டமெதுவும் நிறைவேற்றப்படாதிருக்கின்றதோ அந்தக் காலப்பகுதியின்போது அரசாங்கத்தின் சேவைக்கென இலங்கைக்கு உள்ளே அல்லது இலங்கைக்கு வெளியே கடன்களைத் திரட்டுவதற்கு அதிகாரமளிப்பதற்கும், அத்தகைய சேவையின் மீதான செலவினத்துக்கென அக்காலப்பகுதியின் போது தேவைப்படுவனவான பணங்களை அத்தகைய கடன்பணத்திலிருந்து கொடுப்பனவு செய்வதற்கு ஏற்பாடு செய்வதற்கும் அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர் விளைவான கருமங்களுக்கு ஏற்பாடுசெய்வதற்குமானதொரு சட்டம்.

1. இச்சட்டம், 1982ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, கடன்கள் (சிறப்பேற்பாடுகள்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. அரசாங்கத்துக்கானதும் அதன் சார்பிலானதுமான கடன்களைத் திரட்டுவதனை அதிகாரமளிக்கும் வேறேதேனும் சட்டத்திற்குப் பங்கமின்றி, அரசாங்கத்தின் எந்த ஏதேனும் நிதியாண்டு தொடர்பில் ஒதுக்கீட்டுச் சட்டமெதுவும் பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லையோ அந்த நிதியாண்டின் முதலாம் நாளன்று தொடங்குவதும் அந்த நிதியாண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டம் தொடங்கும் தேதியன்று முடிவுறுவதுமான (இச்சட்டத்தில் 'இயைபான காலப்பகுதி' எனக் குறிப்பீடு செய்யப்படும்), காலப்பகுதிக்கான, அரசாங்கத்தின் எந்த ஏதேனும் செலவினத்துக்கென ஏதேனும் சட்டத்தால் அல்லது அதன்கீழ் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றதோ அல்லது வேறுவகையாகச் சட்டமுறையாக அதிகாரமளிக்கப்பட்டிருக்கின்றதோ அந்தச் செலவினமானது அரசாங்கத்துக்கென அல்லது அதன் சார்பில், இலங்கைக்கு உள்ளே அல்லது இலங்கைக்கு வெளியே திரட்டப்படுவதற்கென இத்தால் அதிகாரமளிக்கப்படும் கடன்களின் பெறுமதிகளிலிருந்து பொறுத்துக் கொள்ளப்படலாம். இது எவ்வாறுயினும், இயைபான காலப்பகுதியில் மூன்று மாதங்களைக்கொண்ட ஏதேனும் காலப்பகுதியின்போது திரட்டப்படும் கடன்களின் கூட்டுமொத்தப் பெறுமதிகளானவை, அந்த நிதியாண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டத்தினுல் அரசாங்கத்தின் முற்போந்த நிதியாண்டுக்கெனத் திரட்டப்படுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட கடன்களின் மொத்தத் தொகையின் நான்கிலொரு பங்கினை விஞ்சுதலாகாது.

## 1982ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன (திருத்த)ச் சட்டம்

*(1982, திசெம்பர் மாதம் 03ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

### இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

1. இச்சட்டம் 1982ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன (திருத்த)ச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. ஆயிரத்துத் தொளாயிரத்து ஐம்பத்தெட்டாம் ஆண்டின் 8ஆம் இலக்கச் சட்டத்தினுல் திருத்தப்பட்டவாறுன (இதனகத்துப் பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 4ஆம் பிரிவானது, அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவில் ''இருபது சதவீதத்திற்கு'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''நாற்பத்தொன்பது சதவீதத்திற்கு'' என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

3. ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்திநான்காம் ஆண்டின் 12ஆம் இலக்கச் சட்டத்தினுல் மாற்றீடு செய்யப்பட்டவாறுன, முதன்மைச் சட்டவாக்கத்தின் 5ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (vii) ஆம் பந்திக்குப் பதிலாக பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :—

''(vii) இலங்கையிலுள்ள தனியார்துறைசார் கைத்தொழில், கமத்தொழில், வர்த்தக முயற்சிகளுக்கு முகாமைத்துவ, தொழினுட்ப, நிருவாக ஆலோசனை போன்ற அத்தகைய சேவைகளையும் வணிக வங்கித்தொழிற் சேவைகளையும் அளித்தலும் முகாமைத்துவ, தொழினுட்ப, நிருவாக சேவைகளையும் வணிக வங்கித் தொழிற் சேவைகளையும் பெற்றுக்கொள்வதில் அவற்றிற்கு உதவியளித்தலும்;''

(2) அப்பிரிவின் (xv) ஆம், (xvi) ஆம் பந்திகளை முறையே (xxi) ஆம், (xxii) ஆம் பந்திகளாக மீள இலக்கமிடுவதன் மூலமும்.

(3) அப்பிரிவின் (xiv) ஆம் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்திகளை உட்புகுத்துவதன்மூலமும் :—

''(xv) தொகுதிக்கடன்களை வழங்குதலும், பணிப்பாளர்கள் சபையினுல் தீர்மானிக்கப்படக்கூடியவாறுன அத்தகைய தொகையிலும் அத்தகைய காலப்பகுதிக்கும் எவரேனும் ஆளிடமிருந்து நிலையான வைப்புகளை ஏற்றுக்கொள்ளுதலும்;

(xvi) அதன்நோக்கங்களை நிறைவேற்றுவதிலும் அதன் தத்துவங்களையும் கடமைகளையும் பிரயோகிப்பதிலும், நிறைவேற்றுவதிலும், உதவி செய்வதற்கென துணைநிலைக் கம்பனிகளைத் தாபித்தலும்;

(xvii) அங்கீகரிக்கப்பட்ட கடன் நிறுவனங்களுடனான கடன்களிலும், ஒப்புரவு மூலதனங்களிலும், கீழ்வரைதல் ஒழுங்குகளிலும், உத்தர வாதங்களிலும் பங்குபற்றுதல்;

(xviii) குதங்களையும், கிட்டங்கிகளையும், களஞ்சியங்களையும், கட்டிடங் களையும், எந்திரத்தொகுதியையும், சாதனங்களையும் வேறு பொருட் களையும் குத்தகைக்கு விடுதல், வாடகைக்குக் கொடுத்தல், முழுமை யாக விற்றல், அல்லது கேள்விக் கொள்வனவு அடிப்படையில் விற்றல்;

(xix) அதனது கடன்கள் முழுவதையும் அல்லது அதன் ஒரு பகுதி யையும் கைத்தொழில், கமத்தொழில், அல்லது வர்த்தக முயற்சி களாக மாற்றுவதற்கும் அத்துடன் சபைகளுக்கான அல்லது அத்த கைய ஏதேனும் முயற்சியினால் வழங்கப்பட்ட தொகுதிக்கடன் களுக்கான ஒப்பப்பணங்களை ஒப்புரவு மூலதனமாக மாற்றுதல்;

(xx) கூட்டுத்தாபனம் நிறைவேற்றக்கூடிய பணிகளுக்குப் பிரதி பலனாக, பணிப்பாளர் சபைகாலத்துக்குக் காலம் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய தரகை, தரகுக் கூலியை, வட்டியை, ஊதியத்தை அல்லது கட்டணத்தைப் பெறுதல்;''

4. ஆயிரத்துத் தொளாயிரத்து அறுபத்தேழாம் ஆண்டின் 1ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 7ஆம் பிரி வானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப்பதிலாக பின் வரும் உட்பிரிவை இடுவதன்மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது.

''(1) கூட்டுத்தாபனத்தின் அதிகாரமளிக்கப்பட்ட பங்கு மூலதனம் ஒவ் வொன்றும் நூறு ரூபா கொண்ட முப்பது இலட்சம் சாதாரண பங்குகளாகப் பிரிக்கப்பட்ட முப்பது கோடி ரூபாவாதல் வேண்டும்.''

5. ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்துநான்காம் ஆண்டின் 12ஆம் இலக்கச் சட்டத்தினால் மாற்றீடுசெய்யப்பட்ட முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரி வானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும்.—

(2) நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாயுள்ள அமைச்சர் எவரேனும் ஆளை (இதனகத்துப்பின்னர் ''அரசாங்கப் பணிப் பாளர்'' என்றழைக்கப்படும்) கூட்டுத்தாபனப் பணிப்பாளர்

ஒருவராக காலத்திற்குக் காலம் நியமிக்கவும், அத்தகைய ஆளைப் பதவியிலிருந்து அகற்றவும், பதவிதுறப்பின் மூலமாகவோ அல்லது இறப்பின் மூலமாகவோ அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதன் மூலமாகவோ அல்லது வேறு வகையாகவோ அத்தகைய பதவியில் வெற்றிடம் ஒன்று ஏற்படுவதன்மேல் அவ்வெற்றிடத்தை நிரப்புவதற்கும் பணிப்பாளர் ஒருவரை நியமிக்கவும் உரித்துடையவராதல் வேண்டும். அரசாங்கப் பணிப்பாளரானவர் அத்தகைய அமைச்சர் மூலமாகவன்றி, சுற்றுவரிசை முறைப்படி ஒய்வுபெறுவதற்கு அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுவதற்கு ஆளாகார் என்பதுடன், எவையேனும் தகைமைப் பங்குகளை வைத்திருக்கும்படி பிணிக்கப்பட்டவராதலும் ஆகாது, முற்சொல்லப்பட்டதற்கமைவாக, அரசாங்கப் பணிப்பாளரானவர், கூட்டுத்தாபனத்தின் வேறு எவரேனும் பணிப்பாளருக்குள்ளவை போன்ற அதே உரிமைகளுக்கும் சிறப்புரிமைகளுக்கும் உரித்துடையவராதல் வேண்டும் என்பதுடன், அதே கடப்பாடுகளுக்கு அமைந்தவராதலும் வேண்டும்';

(2) அப்பிரிவில் (4) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும்:—

"(4) அப்போதைக்கு கூட்டுத்தாபன பொது முகாமையாளர் பதவியை வகிப்பவர், வாக்களிக்கும் உரிமையற்றவரான கூட்டுத்தாபனத்தின் பதவிவழிப் பணிப்பாளர் ஒருவராகவிருத்தல் வேண்டும், பதவிவழி பணிப்பாளரானவர், தகைமைப் பங்குகள் எவற்றையும் வைத்திருக்க வேண்டுமெனத் தேவைப்படுத்தப்படுதலாகாது.';; அத்துடன்

(3) அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவில் "இலங்கைப் பிரசைகளாயிருத்தல் வேண்டும்" என்ற சொற்களுக்குப் பதிலாக "இலங்கைப் பிரசைகளாயிருத்தல் வேண்டும். பங்குதாரர் — பணிப்பாளர் எவரும் எட்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட ஒரு தொடர்ச்சியான காலப்பகுதிக்குப் பதவி வகித்தலாகாது."

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவானது, அதன் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது;—

"(2) அரசாங்கத்தினால் கூட்டுத்தாபனத்திற்கு (1) ஆம் உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட கடன் எதுவும் நிலுவையாகவிருக்கும்மட்டில், கூட்டுத்தாபனமானது அவ்வாண்டுக்கான கூட்டுத்தாபன நிதிக்கூற்றில் காட்டப்பட்டுள்ளவாறான கூட்டுத்தாபனத்தின் தேறிய இலாபத்தின் இருபது சதவீதத்திற்குக்

குறையாத தொகைக்குச் சமமான பணத் தொகையை (ஒதுக்கி வைக்கப் பட்ட தொகை, அப்போது நிலுவையாகவுள்ள அரசாங்கக் கடன்தொகைக்குச் சமமாக வருகின்றவரையில்) சிறப்பொதுக்கு நிதியம் ஒன்றில் ஒவ்வோராண் டிலும் ஒதுக்கி வைத்தல் வேண்டும்.''.

7. ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்துநான்காம் ஆண்டின் 12ஆம் இலக்கச் சட்டத்தினல் மாற்றீடு செய்யப்பட்டவாறுன முதன்மைச் சட்டவாக்கத்தின் 14ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் ''எழுநூற்று இருபது இலட்சம் ரூபா'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''முந்நூறு கோடி ரூபா'' என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

## 1982 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, முத்திரைத் தீர்வைச் சட்டம்

(1982, திசெம்பர் மாதம் 14 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

சாதனங்களுக்கும் ஆவணங்களுக்கும் முத்திரைத் தீர்வை விதிப்பதற்கும் அதனேடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங் களுக்கும் ஏற்பாடு செய்வதற்கானதொரு சட்டம்

1. இச்சட்டமானது. 1982 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, முத்திரைத் தீர்வைச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் கசெற்றில் வெளி யிடப்படும் கட்டளைமூலம் அமைச்சரால் நியமிக்கப்படக்கூடியவாறுன அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும். அத்தேதி இச்சட்டத்தில் ''நியமித்ததேதி'' எனக் குறிப்பீடு செய்யப்படும்.

### அத்தியாயம் I
### முத்திரைத் தீர்வை விதித்தல்

2. பின்வருவனவற்றின் மீது, அதாவது —

(அ) இலங்கையில் எழுதி நிறைவேற்றப்படும், வரையப்படும் அல்லது சமர்ப் பிக்கப்படும் சாதனம் ஒவ்வொன்றின் மீதும்;

(ஆ) உயர்நீதிமன்றத்தில், அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் அல்லது மாவட்ட நீதிமன்றமொன்றில் தொடுக்கப்படும் குடியியல் வழக்கு நடவடிக்கைகளில் அல்லது மேல் நீதிமன்றத்தில் கொடுக்கப்படும் கட லாண்மை வழக்கு நடவடிக்கைகளின் சமர்ப்பிக்கப்படும் அல்லது கோப் பிடப்படும் ஆவணம் ஒவ்வொன்றின் மீதும்;

(இ) இலங்கைக்கு வெளியே வரையப்படுவதும் அத்துடன், இலங்கையில் ஏற்றுக்கொள்ளப்படுவதும் அல்லது கொடுப்பனவு செய்யப்படுவதும் அல்லது ஏற்றுக்கொள்ளலுக்கோ, கொடுப்பனவிற்கோ சமர்ப்பிக்கப்

படுவதும் அல்லது புறக்குறிப்பிடப்படுவதும் அல்லது கைமாற்றம் செய்யப்படுவதும் அல்லது வேறுவகையில் உரிபெயர்த்தளிக்கப்படுவது மான மாற்றுண்டியில், காசோலே அல்லது வாக்குறுதிப் பத்திரம் ஒவ்வொன்றின் மீதும்;

(ஈ) இலங்கைக்கு வெளியே எழுதி நிறைவேற்றப்படுவதும் அத்துடன் இலங்கையில் பெறப்படுவதும், இலங்கையில் அமைந்துள்ள ஏதேனும்ஆதனம் அல்லது இலங்கையில் புரியப்பட்ட அல்லது புரியப்படவுள்ள ஏதேனும் கருமம் அல்லது காரியம் தொடர்பிலான சாதனம் ஒன்ருகவுள்ளது மான(மாற்றுண்டியல், காசோலே அல்லது வாக்குறுதிப்பத்திரம் ஒன்றல்லாத) சாதனம் ஒவ்வொன்றின்மீதும்.

விதித்துரைக்கப்பட்ட வீதத்தில் முத்திரைத் தீர்வையொன்று விதிக்கப்படுதல் வேண்டும். வெவ்வேறு வகுப்புக்களேச் சேர்ந்த அல்லது வகுதிகளேச் சேர்ந்த சாதனங்கள் தொடர்பில் வெவ்வேருன தீர்வை வீதங்கள் விதித்துரைக்கப் படலாம்.

3. பல்வேறு தனிவேருன கருமங்களேக்கொண்ட அல்லது அவை தொடர்பிலான ஏதேனும் சாதனத்திற்கு, அத்தகைய கருமங்கள் ஒவ்வொன்றும் தனித் தனி சாதனத்திஞல் கையாளப்பட்டிருப்பின், விதிக்கப்படற்பாலதாக இருந் திருக்கக்கூடியதான மொத்த முத்திரைத் தீர்வைத் தொகை விதிக்கப்படற் பாலதாதல்வேண்டும்.

4. இச்சட்டத்திலுள்ள எதுவும், ஏதேனும் சாதனத்தில் முத்திரை பொறித் தலுக்கு அல்லது ஏதேனும் சாதனத்துக்கு முத்திரைத் தீர்வையிலிருந்து விலக் களிப்பதற்கு ஏற்பாடு செய்யும் சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டைப் பாதித்தல் அல்லது பாதிப்பதாகக் கருதப்படுதல் ஆகாது.

## அத்தியாயம் II
## விலக்களிப்புக்கள்

5. பின்வரும் சாதனங்களும் ஆவணங்களும் முத்திரைத் தீர்வைக் கொடுப் பனவிலிருந்து விலக்களிக்கப்பட்டனவாதல் வேண்டும்:-

(1) எவரேனும் பகிரங்க அலுவலரின் வேண்டுகோளின்பேரில் அல்லது ஏதேனும் எழுத்திலான சட்டத்திஞல் சுமத்தப்பட்ட ஏதேனும் தேவைப் பாட்டுக்கு இணங்கியொழுகி செய்யப்படும் சத்தியக் கடுதாசி அல்லது உறுதியுரை

(2) உடன்படிக்கை அல்லது வரையுடம்பாட்டுடன் அதே சாதனத்தில் அடங்கியுள்ளதான ஈடு ஒன்றிஞல் பிணேப்பொறுப்பளிக்கப்பட்ட அத்தகைய உடன்படிக்கை அல்லது வரையுடம்பாடு; (அத்தகைய சாதனம் ஈடொன்ருக முறைப்படி முத்திரையிடப்பட்டிருத்தல் வேண்டும்);

(3) ஏதேனும் ஆதன நிர்ணயத்தை அல்லது கைமாற்றத்தை உள்ளடக்கியிராத, திருமணஞ் செய்வதற்கான உடன்படிக்கை;

(4) குற்றவியல் நடவடிக்கைகளிலான பிணைமுறி;

(5) வேறேதும் சாதனத்தில் அடங்கியுள்ள அதன் சார்பிலான வரைவுடம்பாடுகளை அல்லது வேறு உடன்படிக்கைகளைப் பின்பற்றிச் செய்யப்படுவதும், முறிக்கான அல்லது ஈட்டிற்கான பிரதிபயன் தொகையின்மீது சம பெறுமதியான முத்திரைத் தீர்வையொன்றுகொண்டு அத்தகைய வேறு சாதனத்திற்கு முத்திரையிடப்பட்டிருப்பின் மேலதிகப் பணப்பிரதி இல்லாமல் செய்யப்படுவதுமான முறி அல்லது ஈடு;

(6) பகிரங்க அலுவலர் ஒருவருக்கு அவரின் கடமை நிறைவேற்றலின்போது கொடுக்கப்படும் நட்டோத்தரவாத முறி;

(7) எவரேனும் பகிரங்க அலுவலரால் அல்லது அவரது பிணைப்பொறுப்பாளர்களால் அவரது பதவியை முறையாக நிறைவேற்றுவதற்கெனக் கொடுக்கப்படும் முறி அல்லது ஈடு;

(8) அரச சேவையிலுள்ள எவரேனும் ஆளினல் அவரது கடமை நிறைவேற்றலின்போது வரையப்படும் காசோலை;

(9) அரசாங்கத்தினல் அல்லது அரசாங்கத்துக்காக அல்லது அதன் சார்பில் ஆளெவராலும் செய்யப்படும் உரித்துமாற்றம் அல்லது கைமாற்றம்;

(10) ஈட்டுறுதியொன்றின் நியதிகளின்படி, அதன்கீழ் வழங்கப்படவுள்ள தொகுதிக்கடனின் முழுத்தொகை தொடர்பிலும் முறையாக முத்திரையிடப்பட்டு கம்பெனியொன்றினல் அல்லது வேறு கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றினல் வழங்கப்படுவதும், அத்துடன் அதன் மூலம், கடன் பெறும் கம்பெனி அல்லது குழு அதன் ஆதனத்தை தொகுதிக்கடன் கொண்டிருப்போரின் நன்மைக்காக நம்பிக்கைப் பொறுப்பாளர்களுக்கு முழுவதாக அல்லது பகுதியளவில் உரிமையாற்றுகின்றதுமான தொகுதிக்கடன்;

ஆயினும், வழங்கப்பட்ட தொகுதிக்கடன் அந்த ஈட்டுறுதியின் நியதிகளின்படி வழங்கப்படவேண்டியதாக இருப்பது வெளிப்படையாக்கப்படுதல் வேண்டும்.

(11) பொதுவாக வைத்திருக்கப்படும் ஏதேனும் காணியின் பிரிவிடல் உறுதி;

(12) இந்த விலக்களிப்பில்லாவிடில் அத்தகைய சாதனம் தொடர்பில் அறவிடப்படற்பாலதான தீர்வையைச் செலுத்துவதற்கு அரசாங்கம் ஆளாகும் விடயத்தில், அரசாங்கத்தினல் அல்லது அதன் சார்பில் அல்லது அதற்குச் சாதகமாக எழுதி நிறைவேற்றப்படும் சாதனம்;

(13) எந்த நாடு தொடர்பில், 67(3) ஆம் பிரிவின் கீழான கட்டளையொன்று வலுவிலிருக்கின்றதோ அந்த ஒரு நாடாகவுள்ள ஏதேனும் நாட்டின்

அரசாங்கத்தினுல், அல்லது அதன் சார்பில் அல்லது அதற்குச் சாதகமாக எழுதி நிறைவேற்றப்படும் சாதனம்;

(14) சட்ட நடவடிக்கைகளில் கோப்பிடப்படும் பின்வரும் ஆவணங்கள்:—

(அ) நீதிவான் நீதிமன்றங்களிலும், ஆரம்ப நீதிமன்றங்களிலும் கோப்பிடப்படும் எல்லா ஆவணங்களும், அத்துடன் குற்றவியல் நடவடிக்கைகளின் நோக்கங்களுக்காக வேறு ஏதேனும் நீதிமன்றத்தில் கோப்பிடப்படும் எல்லா ஆவணங்களும்;

(ஆ) ஏதேனும் நீதிமன்றத்தில், அத்தகைய நீதிமன்றத்தின் ஏதேனும் நடவடிக்கைகளில் பதவி சார்பில் வழக்குத் தொடரும் அல்லது அவருக்கெதிராக வழக்குத் தொடரப்படும் அல்லது இடைவரும் பகிரங்க அலுவலர்களால் கோப்பிடப்படும் ஆவணங்கள்;

(இ) ஏதேனும் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட எவையேனும் நடவடிக்கையில் நொடித்தவர் ஒருவராக வழக்குத் தொடருவதற்கு, எதிர்வாதம் கூறுவதற்கு அல்லது இடைவருவதற்கு உரியமுறையில் அனுமதிக்கப்பட்ட ஆளொருவரால் அத்தகைய நீதிமன்றத்தில் கோப்பிடப்படும் ஆவணங்கள்;

(ஈ) ஏதேனும் நீதிமன்றத்தினுல், கடனிறுக்க வகையற்றவராக வெளிப்படுத்தப்படுவதற்கென விண்ணப்பிக்கும் ஆளொருவரால் அத்தகைய நீதிமன்றத்தில் கோப்பிடப்படும் ஆவணங்கள்:

(உ) ஆட்கொணர்வெழுத்தாணை என்ற தன்மைத்தான கட்டளையொன்றுக்கான விண்ணப்பமொன்றின் நோக்கங்களுக்கென ஏதேனும் நீதிமன்றத்தில் கோப்பிடப்படும் எல்லா ஆவணங்கள்;

(ஊ) ஏதேனும் நீதிமன்றத்தில் கோப்பிடப்படும் பிரேரணைகள்;

(எ) ஏதேனும் நீதிமன்றத்தினுல், விண்ணப்பத்தின்மீதாயினுஞ் சரி, அல்லது அதன் சொந்தப் பிரேரணையின் மீதாயினுஞ் சரி, வழங்கப்படும் எழுத்தாணைகள்;

(15) இலங்கையில் வரைவுகளுக்கு அதிகாரமளித்து, இலங்கைக்கு வெளியேயுள்ள எவரேனும் ஆளுக்கு இலங்கையிலுள்ள எவரேனும் ஆளினுல், தொகுதிகளாகவாயினுஞ் சரி அல்லாவிடினுஞ் சரி அனுப்பப்படும் நாணயக் கடிதம்;

(16) உணவுப் பயிர்களின் ஈடு;

(17) வங்கியொன்றில் வைப்பிலிடப்படும் பணத்திற்காக வழங்கப்படும் பற்றுச்சீட்டு அல்லது பணத்திற்கான பிணைப்பொறுப்புக்கள்;

(18) நூறு ரூபாவுக்குக் குறைந்த தொகையினதான ஏதேனும் பணத்துக்காக அல்லது வேறு ஆதனத்திற்காக வழங்கப்படும் பற்றுச்சீட்டு அல்லது பொறுப்பு விடுவிப்பு ;

(19) ஏதேனும் கம்பெனியின் உளதாகும் பங்குகள் துணைப்பிரிவாக்கப்படுவதன் மீது அல்லது ஒன்றுதிரட்டப்படுவதன் மீது வழங்கப்படும் பங்குச் சான்றிதழ் ;

(20) காணுமற்போன அல்லது அழிக்கப்பட்ட பங்குச் சான்றிதழுக்குப்பதிலாக வழங்கப்பட்ட பங்குச் சான்றிதழ் அல்லது உளதாம் பங்குச் சான்றிதழ்களுக்குப் பதிலாகக் கூடுதலான அல்லது குறைந்த எண்ணிக்கையைக் கொண்ட, ஆனல் உளதாம் பங்குச் சான்றிதழ்களின் பெறுமதியை விஞ்சாத பங்குகளுக்காக வழங்கப்பட்ட புதிய பங்குச் சான்றிதழ்கள் ;

(21) இறுதி விருப்பாவணம், மரணசாதனம் அல்லது இறுதி விருப்பாவணப் பின்னிணைப்பு, அது நொத்தாரிசு மூலமாக அத்தாட்சிப்படுத்தப்பட்டதாயினுஞ்சரி அல்லது வேறுவகையிலானதாயினுஞ்சரி.

## அத்தியாயம் III

### சாதனங்களுக்கு முத்திரையிடும் நேரமும் முறையும்

6. (1) ஏதேனும் சாதனத்திற்கு அறவிடப்படற்பாலதான முத்திரைத் தீர்வையானது, சாதனம் எழுதி நிறைவேற்றப்படு முன்னரோ அல்லது நிறைவேற்றப்படும் நேரத்திலோ செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய கொடுப்பனவு, இச்சட்டத்தில் வேறு வகையாக அனுமதிக்கப்பட்டிருந்தாலன்றி, ஒட்டு முத்திரை அல்லது பொறித்திட்ட முத்திரை என்ற வகையாக அத்தகைய சாதனத்தின் மீது சுட்டிக்காட்டப்படுதலும் வேண்டும்.

(2) பின்வரும் சாதனங்கள் அவை எழுதி நிறைவேற்றப்படுவதற்கு முன்னரோ அல்லது நிறைவேற்றப்படும் நேரத்திலோ முத்திரையிடப்பட்டிருப்பனவாகக் கருதப்படுதல் வேண்டும் :—

(அ) இலங்கையில் எழுதி நிறைவேற்றப்பட்டவையும், எழுதி நிறைவேற்றப்பட்ட ஒரு மாதத்திற்குள் முத்திரையிடப்பட்டவையுமான பங்குக் கையாற்றங்கள் ;

(ஆ) ஒரு மாற்றுண்டியலாக, காசோலையாக அல்லது வாக்குறுதிப் பத்திரமாக அல்லாததும், இலங்கைக்கு வெளியே எழுதி நிறைவேற்றப்பட்டதும், முதலில் இலங்கையில் பெறப்பட்டிருந்ததன் பின்னர் ஒரு மாதத்திற்குள் முத்திரையிடப்பட்டதுமான ஏதேனும் சாதனம் ;

(இ) இலங்கைக்கு வெளியே வரையப்பட்டதும் அல்லது ஆக்கப்பட்டதும், அத்தகைய சாதனத்தை முதலில் வைத்திருந்தவர், ஏற்றுக்கொள்ளலுக்

கென அல்லது கொடுப்பனவுக்கென அதனை இலங்கையில் சமர்ப்பிப்பதற்கு முன்னர் அல்லது அதனை வேறுவகையில் உரிபெயர்த்தளிப்பதற்கு முன்னர் முத்திரையிடப்பட்டதுமான ஏதேனும் மாற்றுண்டியல், காசோலை அல்லது வாக்குறுதிப் பத்திரம்.

(3) அத்தகைய சாதனத்திற்கு அறவிடப்படற்பாலதான முத்திரைத் தீர்வையின் கொடுப்பனவைச் சுட்டிக்காட்டுவதற்கு ஒட்டு முத்திரைகளை அல்லது பொறித்திட்ட முத்திரைகளைப் பயன்படுத்துவது இயலாததாயிருக்குமிடத்து, ஆணையாளர் தலைமையதிபதி அத்தகைய சாதனத்திற்கு அறவிடப்படற்பாலதான முத்திரைத் தீர்வைக்குச் சமமான ஒரு தொகை அவருக்குச் செலுத்தப்படுவதன்மீது, செலுத்தப்பட்ட தொகையையும் அத்தகைய தீர்வை செலுத்தப்பட்ட தேதியையும், சாதனத்தின்மீது புறக்குறிப்பிடலாம். அவ்வாறு புறக்குறிப்பிடப்பட்ட சாதனமொன்று உரிய முறையில் முத்திரையிடப்பட்டிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

7. (1) சாதனமொன்றுக்கு அறவிடப்படற்பாலதான முத்திரைத் தீர்வையின் கொடுப்பனவு, ஒட்டு முத்திரையின் வாயிலாகச் சுட்டிக்காட்டப்படுமிடத்து, அத்தகைய சாதனத்தை எழுதி நிறைவேற்றும் ஆள், அல்லது நொத்தாரிசு மூலமாக எழுதி நிறைவேற்றப்படும் சாதனமொன்றின் விடயத்தில், நொத்தாரிசு, அம்முத்திரை மீண்டும் பயன்படுத்தப்படுவதை அனுமதிக்காதவாறு அதன் குறுக்கே அவரது பெயரையும் முதலெழுத்துக்களையும் மையினால் எழுதுவதன்மூலம் அம்முத்திரையைப் பெறுமதியழித்தல் வேண்டும்.

(2) சாதனமொன்று ஐம்பது ரூபாய் பெறுமதியையுடைய அல்லது அதற்குக் கூடுதலானபெறுமதியையுடையஒட்டுமுத்திரையொன்றைக்கொண்டிருக்குமிடத்து, அத்தகைய முத்திரையானது, (1)ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட எழுதுதலுடன் மேலதிகமாக, ஒரு பழையால், துளையால், துளைக்கருவியால் அல்லது குறட்டினால் வெட்டி பெறுமதியழிக்கப்படுதலும் வேண்டும்.

(3) ஓராம், (2)ஆம் உட்பிரிவுகளில் தரப்பட்டுள்ள முறையில் பெறுமதியழிக்கப்பட்டில்லாத ஒட்டு முத்திரையைக் கொண்டிருக்கும் ஏதேனும் சாதனம் அம்முத்திரையினது பெறுமதியின் அளவுக்கு முத்திரையிடப்படாததாகக் கருதப்படுதல் வேண்டும்.

## அத்தியாயம் IV

### குறித்த சில சாதனங்களுக்கு எவ்வாறு முத்திரையிடப்பட வேண்டும் என்பது

(8) முத்திரைத் தீர்வை அறவிடப்படற்பாலதான இரண்டாவது சாதனம் எதுவும், தீர்வை அறவிடப்படற்பாலதான சாதனமொன்று எந்த முத்திரையிடப்பட்ட கடதாசியின்மீது ஏற்கனவே எழுதப்பட்டுள்ளதோ அந்த முத்திரையிடப்பட்ட கடதாசியில் எழுதப்படுதல் ஆகாது:

ஆயினும், ஏதேனும் சாதனத்தினுல் உருவாக்கப்பட்ட அல்லது சான்றுபடுத் தப்பட்ட ஏதேனும் உரிமையைக் கைமாற்றும் நோக்கத்துக்கென அல்லது எந்தப் பணத்தின் கொடுப்பனவுக்கு அல்லது பொருளின் ஒப்படைப்புக்கு ஏதேனும் சாதனத்தினுல் பிணைப் பொறுப்பளிக்கப்பட்டுள்ளதோ அந்த ஏதேனும் பணத்தை அல்லது பொருளைப் பெற்றுக் கொண்டமை பற்றி ஒப்புக் கொள்வதற்கென அல்லது ஒரு மாற்றுண்டியலின் அல்லது வாக்குறுதிப் பத்திரத்தின் கொடுப்பனவிற்கான காலத்தை நீடிப்பதற்கென அத்தகைய ஏதேனும் சாதனத்தின்மீது உரியமுறை யில் முத்திரையிடப்பட்ட ஏதேனும் புறக்குறிப்பு அல்லது முத்திரைத் தீர்வை அறவிடப்படற்பாலதல்லாத ஏதேனும் புறக்குறிப்பு இடப்படுவதை இப்பிரிவி லுள்ள எதுவும் தடைசெய்தலாகாது,

9. ஆதனப் பரிமாற்றமொன்றைப் பயனுறுத்துவதற்குப் பல்வேறு உரித்து மாற்றற் சாதனங்கள் அல்லது கைமாற்றற் சாதனங்கள் இருக்குமிடத்து, முத லாவதாக எழுதி நிறைவேற்றப்படும் சாதனம், அத்தகைய பரிமாற்றலுக்கு விதிக்கப்படற்பாலதான முத்திரைத் தீர்வை ஏதேனுமிருப்பின், அம்முத்திரைத் தீர்வை கொண்டு முத்திரையிடப்படுதல் வேண்டும் என்பதுடன், வேறு எல்லாச் சாதனங்களும் ஐந்து ரூபா முத்திரைத் தீர்வை கொண்டு முத்திரையிடப்படுதலும் வேண்டும்,

ஆயினும், எவ்வாருயினும், இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகள் முதலா வது சாதனம் எழுதி நிறைவேற்றப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாதங்களைக் கொண்ட காலப்பகுதியொன்றின் பின்னர் எழுதி நிறைவேற்றப்படும் அத்தகைய ஏதேனும் அடுத்துள்ள சாதனத்திற்கு ஏற்புடையனவாதல் ஆகாது.

10. ஏதேனும் வகையினதான ஒப்பந்தம் அல்லது உடன்படிக்கை இரண்டு அல்லது அதற்குக் கூடுதலான கடிதங்கள் அடங்கிய கடிதத் தொடர்பின் மூலம் பயனுறுத்தப்படுமிடத்தும், அத்துடன் கடிதங்களுள் ஏதேனுமொன்றுதகுந்த பெறு மதியுள்ள முத்திரையொன்றைக் கொண்டிருக்குமிடத்தும் ஒப்பந்தம் அல்லது உடன்படிக்கை உரியமுறையில் முத்திரையிடப்பட்டிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

11. ஏதேனும் சட்ட நடவடிக்கைகளில் கோப்பிடப்பட்டுள்ளதும் முத்திரைத் தீர்வை விதிக்கப்படற்பாலதுமான ஒவ்வோர் ஆவணத்தின் மீதும் செலுத்தப் படற்பாலதான தகுந்த தீர்வை, அத்தகைய ஆவணங்களின் நிரலில் ஒட்டப் பட்டும், இச்சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள முறையில் பெறுமதி அழிக் கப்பட்டும் இருப்பின், அத்தகைய ஆவணம் ஒவ்வொன்றும் உரிய முறையில் முத்தி ரையிடப்பட்டிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

12. முத்திரைத் தீர்வை, விதிக்கப்படற்பாலதான (பணக்கொடுப்பனவுக்கான ஒரு வரைவு, கட்டளை அல்லது வாக்குறுதிப் பத்திரம் அல்லது பணக்கொடுப்பனவிற் கான பற்றுச் சீட்டு அல்லது அதன்மீதான பொறுப்பு விடுவிப்பு அல்லாத) ஏதேனும் சாதனம், பிரசித்த நொத்தாரிசு ஒருவர் முன்னிலையில் அல்லது பிசுக்கால் ஒருவர்

முன்னிலையில் அவரது பதவியினை நிறைவேற்றுகையில் எழுதி நிறைவேற்றப் படுமிடத்து, அல்லது ஒப்புக் கொள்ளப்படுமிடத்து, அத்தகைய சாதனத்தின்மீது விதிக்கப்படற் பாலதான முத்திரைத் தீர்வை, மூலச் சாதனத்தின் மீது விதிக்கப் படற் பாலதாவதற்குப் பதிலாக அதன் இணைப்பிரதியின்மீதோ அல்லது அடியிதழின் மீதோ விதிக்கப்படற்பாலதாதல் வேண்டும். அத்துடன் மூலச் சாதனம் ஒரு ரூபா முத்திரையொன்றினைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

## அத்தியாயம் V

## முத்திரைத் தீர்வைக் கூட்டு

13. (1) ஆணையாளர் தலைமையதிபதி —

(அ) காப்புறுதிப் பூட்கைகளை வழங்கும் எவரேனும் ஆளுக்கு;

(ஆ) பங்குகளை அவை மூலப்பங்குகளாக இருப்பினுஞ்சரி, அதிகரிக்கப்பட்டவைகளாக இருப்பினுஞ்சரி, அல்லது தொகுதிக்கடன் தொக்குகளை உருவாக்குகின்றவைகளாகவிருப்பினுஞ்சரி, வழங்குகின்ற ஏதேனும் கம்பெனிக்கு;

(இ) இலங்கையில் தொழில்புரியும் ஏதேனும் வங்கிக்கு ;

(ஈ) எந்த ஊழியர்கள் தங்களுக்குச் செலுத்தப்படும் கொடுப்பனவுகள் தொடர்பில் முத்திரையிடப்பட்ட பற்றுச்சீட்டுகளைக் கொடுப்பதற்கு ஆளாகின்றனரோ அந்த ஊழியர்களுக்கு அத்தகைய கொடுப்பனவுகளைச் செய்யும் எவரேனும் தொழில்தருநருக்கு;

(உ) உயர்நீதிமன்றத்தின், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின், மேல் நீதிமன்றத்தின் அல்லது மாவட்ட நீதிமன்றத்தின் அலுவலர் ஒருவருக்கு;

(ஊ) இச்சட்டத்தினால் விதித்துரைக்கப்பட்ட நேரத்தில் அல்லது முறையில் ஒரு வகுதியைச் சேர்ந்த சாதனங்களுக்கு முத்திரையிடுவது சாத்தியமல்ல அல்லது உசிதமல்ல என்ற நிகழ்வைக் கருத்திற்கொண்டு அவ்வகுதியைச் சேர்ந்த சாதனங்களை வழங்கும் வேறு எவரேனும் ஆளுக்கு,

விடயத்திற்கு ஏற்றவாறு, அத்தகைய ஆளினால் வழங்கப்பட்ட காப்புறுதிப் பூட்கைகளின் மீது அல்லது அத்தகைய கம்பெனியால் வழங்கப்பட்ட பங்குகளின் அல்லது தொகுதிக்கடன் தொக்குகளின் மீது அல்லது அத்தகைய வங்கியால் விநியோகிக்கப்பட்ட படிவங்களின்மீது வரையப்பட்டு, வழங்கப்பட்டவையான காசோலைகளின் மீது, அல்லது அத்தகைய தொழில்தருநருக்கு அவரது ஊழியர்களினால் கொடுக்கப்பட்ட பற்றுச் சீட்டுகளின்மீது, அல்லது அத்தகைய ஏதேனும் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட ஏதேனும் குடியியல் அல்லது கடலாண்மை நடவடிக்கைகளில் முன் வைக்கப்பட்ட அல்லது கோப்பிடப்பட்ட ஆவணங்களின்மீது அல்லது அத்தகைய வேறு ஆளினால் வழங்கப்பட்ட சாதனங்களின் மீது, செலுத்

தப்படற்பாலதான முத்திரைத் தீர்வையின் கொடுப்பனவுக்கென பின்வரும் எல்லா நிபந்தனைகளின் மீதும் அல்லது அவற்றுள் எவையேனும் நிபந்தனைகளின்மீது ஒத்திணங்குவதற்கு அதிகாரமளிக்கலாம்: அந்நிபந்தனைகளாவன:-

(i) விடயத்திற்கு ஏற்றவாறு அத்தகைய ஆள், கம்பெனி, வங்கி, தொழில் தருநர், அலுவலர் அல்லது வேறு ஆள் ஆணையாளர் தலைமையதிபதியுடன், பொருளளவில் விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் முறியொன்றைச் செய்துகொள்ளவேண்டும்.

(ii) விடயத்திற்கு ஏற்றவாறு அத்தகைய ஆள், கம்பெனி, வங்கி, தொழில் தருநர், அலுவலர் அல்லது வேறு ஆள், விடயத்திற்கு ஏற்றவாறு அத்தகைய ஆளினால் வழங்கப்பட்ட காப்புறுதிப் பூட்கைகளின், அத்தகைய கம்பெனியால் வழங்கப்பட்ட பங்குகளின் அல்லது தொகுதிக் கடன் தொக்குகளின், அல்லது அத்தகைய வங்கியால் விநியோகிக்கப்பட்ட படிவங்களில் வரையப்பட்ட அல்லது வழங்கப்பட்ட காசோலைகளின் அல்லது அத்தகைய ஊழியர்களினால் வழங்கப்பட்ட பற்றுச் சீட்டுக்களின் அல்லது அத்தகைய நீதிமன்றத்தில் தொடரப்பட்ட குடியியல் அல்லது கடலாண்மை நடவடிக்கைகளில் முன்வைக்கப்பட்ட அல்லது கோப்பிடப்பட்ட ஆவணங்களின் அல்லது அத்தயை வேறு ஆளினால் வழங்கப்பட்ட சாதனங்களின் பதிவேடொன்றைப் பேணுதல் வேண்டும்.

(iii) விடயத்திற்கு ஏற்றவாறு அத்தகைய ஆள், கம்பெனி, வங்கி, தொழில் தருநர், அலுவலர் அல்லது வேறு ஆள் விடயத்திற்கு ஏற்றவாறு, அக்காலப்பகுதியின்போது:-

(அ) அத்தகைய ஆளினால் வழங்கப்பட்ட காப்புறுதிப் பூட்கைகளின் மீது;

(ஆ) அத்தகைய கம்பெனியால் வழங்கப்பட்ட பங்குகளின் அல்லது தொகுதிக்கடன் தொக்குகளின் மீது;

(இ) அத்தகைய வங்கிகளினால் விநியோகிக்கப்பட்ட படிவங்களில் வரையப்பட்ட அல்லது வழங்கப்பட்ட காசோலைகளின் மீது;

(ஈ) அத்தகைய ஊழியர்களினால் கொடுக்கப்பட்ட பற்றுச் சீட்டுக்களின் மீது;

(உ) அத்தகைய அலுவலர் எந்த நீதிமன்றத்துக்கு நியமிக்கப்படுகின்றாரோ அந்த நீதிமன்றத்தில் தொடரப்பட்ட குடியியல் அல்லது கடலாண்மை நடவடிக்கைகளில் முன் வைக்கப்பட்ட அல்லது கோப்பிடப்பட்ட ஆவணங்களின் மீது; அல்லது

(ஊ) அத்தகைய வேறு ஆளினால் வழங்கப்பட்ட சாதனங்களின் மீது.

செலுத்தப்படற்பாலதான மொத்த முத்திரைத் தீர்வையை ஆணையாளர் தலைமையதிபதியினால் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய காலப்பகுதிகளில் முடிவில் ஆணையாளர் தலைமையதிபதிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

*(2)* இப்பிரிவின் முன்போந்த ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும்-

(i) நூறு அல்லது அதற்கு மேற்பட்ட ஊழியர்களுக்கு அவர்களது தொழில் தொடர்பில் கொடுப்பனவுகளைச் செய்யும் ஆளெவரும் அத்தகைய கொடுப்பனவுக்கான பற்றுச்சீட்டின் மீது செலுத்தப்படற்பாலதான முத்திரைத் தீர்வையைச் சேகரித்தல் வேண்டும்;

(ii) வங்கி அல்லது அங்கீகரிக்கப்பட்ட நாணய முகவராண்மை ஒவ்வொன்றும், அதனால் எடுக்கப்பட்ட காசோலை அல்லாத மாற்றுண்டியல், வாக்குறுதிப் பத்திரம், நம்பிக்கைப் பொறுப்புப் பற்றுச்சீட்டு, நம்பிக்கைப் பொறுப்புக் கடிதம் அல்லது நம்பிக்கைப் பொறுப்பு வெளிப்படுத்துகை ஒவ்வொன்றின் தொடர்பிலும், அத்துடன் அதற்குச் செய்யப்பட்ட அசையும் பருப்பொருட்கள் தொடர்பிலான அடகு ஒவ்வொன்றினதும் நாணயக் கடிதமொன்றுக்கென அதற்குச் செய்யப்பட்ட விண்ணப்பம் ஒவ்வொன்றினதும் தொடர்பிலும் செலுத்தப்படற்பாலதான முத்திரைத் தீர்வையைச் சேகரித்தல் வேண்டும்

என்பதுடன், இரண்டினது விடயத்திலும் வேறுவகையாகப் பணிக்கப்பட்டாலன்றி, ஒவ்வோராண்டினதும் மார்ச் *31*, யூன் *30*, செத்தம்பர் *30*, திசெம்பர் *31* ஆகிய தேதிகளில் முடிவடையும் ஒவ்வொரு காலாண்டின் முடிவிலும் பதினைந்து நாட்களுக்குள், முற்போந்த ஒவ்வொரு காலாண்டின்போதும் முத்திரைத் தீர்வையாகச் செலுத்தப்படற்பாலனவான பணத் தொகைகளை, சேகரிப்புகள் பற்றிய அத்தாட்சிப்படுத்தப்பட்ட கூற்றொன்றுடன் சேர்த்து, காலாண்டுக்கொருமுறை ஆணையாளர் தலைமையதிபதிக்கு அனுப்பிவைத்தலும் வேண்டும்.

*(3)* சாதனமொன்றிற்கு அல்லது ஆவணமொன்றிற்கு என்ன முத்திரைத் தீர்வை விதிக்கப்படற்பாலதாகின்றதோ அந்த முத்திரைத் தீர்வையின் கொடுப்பனவு இப்பிரிவிற்கிணங்க ஒத்திணக்கப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய சாதனம் அல்லது ஆவணம் உரியமுறையில் முத்திரையிடப்பட்டிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

*(4)* (காசோலையொன்று தவிர்ந்த) ஒரு மாற்றுண்டியல், வாக்குறுதிப் பத்திரம், நம்பிக்கைப் பொறுப்புப் பற்றுச்சீட்டு, நம்பிக்கைப் பொறுப்புக் கடிதம் நம்பிக்கைப்பொறுப்பு வெளிப்படுத்துகை, அசையும் பருப்பொருட்கள் தொடர்பிலான அடகு அல்லது நாணயக் கடிதத்துக்கான விண்ணப்பம் ஆகியவற்றுக்கு எந்த முத்திரைத் தீர்வை விதிக்கப்படற்பாலதாகின்றதோ அந்த முத்திரைத்

தீர்வையின் கொடுப்பனவு இப்பிரிவுக்கிணங்க ஒத்திணக்கப்பட்டுள்ளவிடத்து, விடயத்திற்கேற்ப கம்பெனி அல்லது வங்கி அல்லது அங்கீகரிக்கப்பட்ட நாணய முகவராண்மை (காசோலையொன்று தவிர்ந்த) அத்தகைய மாற்றுண்டியல், வாக் குறுதிப்பத்திரம், நம்பிக்கைப்பொறுப்புப் பற்றுச்சீட்டு, நம்பிக்கைப்பொறுப்புக் கடிதம், நம்பிக்கைப்பொறுப்பு வெளிப்படுத்துகை, அசையும் பருப் பொருட்கள் தொடர்பிலான அடகு அல்லது நாணயக் கடிதத்துக்கான ஒரு விண்ணப்பம் என்ப வற்றின் மீதான முத்திரைத் தீர்வை ஒத்திணக்கப்பட்டுள்ளதென அவ்வவற்றின் மீது அத்தாட்சிப்படுத்துதல் வேண்டும். அத்தகையசான்றிதழ் பொருளளவில்பின் வரும் படிவத்தில் இருத்தல் வேண்டும்.

"இச்சாதனம் தொடர்பில் செலுத்தப்படற்பாலதான முத்திரைத் தீர்வை யானது, அதாவது........ ரூபா, முத்திரைத் தீர்வைச் சட்டத்தின் 13ஆம் பிரிவின் நியதிகளின்படி ஒத்திவைக்கப்பட்டுள்ளதென இத்தால் அத்தாட்சிப்படுத்தப்படு கின்றது."

(5) உயர் நீதிமன்றத்தில், மேன்முறையீட்டு நீதிமன்றத்தில், மேல் நீதிமன் றத்தில் அல்லது மாவட்ட நீதிமன்றமொன்றில் தொடரப்பட்டுள்ள குடியியல் அல்லது கடலாண்மை வழக்கு நடவடிக்கைகளில் சமர்ப்பிக்கப்பட்ட அல்லது கோப் பிடப்பட்ட ஆவணம் ஒன்றின்மீது செலுத்தப்படற்பாலதான முத்திரைத் தீர் வைக் கொடுப்பனவு இப்பிரிவிற்கிணங்க ஒத்திணக்கப்பட்டுள்ளவிடத்து, (1) ஆம் உட்பிரிவின் கீழ் அதிகாரமளிக்கப்பட்ட அத்தகைய நீதிமன்றத்தின் அலுவலர், அத்தகைய ஆவணத்தின் மீது செலுத்தப்படற்பாலதான முத்திரைத் தீர்வைத் தொகையையும், அத்தகைய முத்திரைத் தீர்வைக் கொடுப்பனவு இப்பிரிவிற் கிணங்க ஒத்திணக்கப்பட்டுள்ளது என்பதையும் அத்தகைய ஆவணத்தின் மீது புறக்குறிப்பிடுதல் வேண்டும்.

(6) சாதனமொன்றுக்கு அல்லது ஆவணமொன்றுக்கு விதிக்கப்படற்பாலதான முத்திரைத் தீர்வைக் கொடுப்பனவு மேலே சொல்லப்பட்டவாறு ஒத்திணக்கப் பட்டிருப்பினும், அத்தகைய சாதனம் அல்லது ஆவணம் தொடர்பில் செலுத்தப் படற்பாலதான தகுந்த தீர்வையின் மீது ஆணையாளர் தலைமையதிபதி தீர்த் தளிக்கலாம்.

### அத்தியாயம் VI

### சட்ட நடவடிக்கைகளில் கோப்பிடப்பட்ட ஆவணங்கள் தொடர்பிலான சிறப்பேற்பாடுகள்

14. (1) (அ) உயர்நீதிமன்றத்தில் அல்லது மேன்முறையீட்டு நீதிமன் றத்தில் அல்லது மாவட்ட நீதிமன்றமொன்றில் தொடரப் படும் எவையேனும் குடியியல் நடவடிக்கைகளில்; அல்லது

(ஆ) மேல் நீதிமன்றத்தில் தொடரப்படும் எவையேனும் கட லாண்மை நடவடிக்கைகளில்

முன் வைக்கப்படும் அல்லது கோப்பிடப்படும் ஆவணங்களின் மீது செலுத்தப் படற்பாலதான முத்திரைத் தீர்வையைத் தீர்மானிக்கும் நோக்கங்களுக்கென, அத்தகைய வழக்கு நடவடிக்கைகளின் பெறுமதியானது, இதில் அல்லது வேறு ஏதேனும் சட்டவாக்கத்தில் வேறுவகையாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாலன்றி—

(i) வழக்கு நடவடிக்கைகளில் உரிமைகோரப்படும் தனிசின், கோரிக்கையின் அல்லது சேதஈட்டின் தொகையாதல் வேண்டும்.

(ii) வழக்கு நடவடிக்கையானது காணிமீதான உரிமை, உரித்துவம் அல்லது அக்கறை தொடர்பிலானதாகவிருக்குமிடத்து, அத்தகைய காணியின் பெறுமதியாதல் வேண்டும்;

(iii) வேறு எதேனும் விடயத்தில், ஐயாயிரம் ரூபாவாதல் வேண்டும்.

*(2)* ஏதேனும் நீதிமன்றத்தில் எவையேனும் வழக்கு நடவடிக்கைகளில் கோப்பிடப்படும் ஆவனங்கள் தொடர்பில் விதிக்கப்படற்பாலதான மொத்த முத்திரைத் தீர்வையானது, வழக்கு நடவடிக்கைகளுக்கான ஒவ்வொரு கட்சிக் காரராலும் கோப்பிடப்பட்ட முதல் பத்து ஆவணங்களின் மீது விதிக்கப்படற்பால தான முத்திரைத் தீர்வையின் கூட்டு மொத்தத்தை விஞ்சுதலாகாது.

## அத்தியாயம் VII

## முத்திரை தீர்வைக்கான பெறுமதி மதிப்பு

*15. (1)* ஏதேனும் ஆதனம், சாதனமொன்றின் மூலமாக உரித்துமாற்றப் படுமிடத்து, அத்தகைய சாதனத்திற்கு விதிக்கப்படற்பாலதான முத்திரைத் தீர்வை, உரித்துமாற்றப்படும் ஆதனத்தின் பெறுமதியின்மீது கணிக்கப்படுதல் வேண்டும்.

*(2)* பிரதிபயனொன்றுக்காக கைமாற்றப்படும் ஏதேனும் ஆதனம் ஏதேனும் ஈட்டிற்கு, வில்லங்கத்திற்கு அல்லது அக்கறை ஒதுக்கலுக்கு அமைவதாயிருக்கு மிடத்து, கைமாற்றற் சாதனத்திற்கு விதிக்கப்படற்பாலதான முத்திரைத்தீர்வை யானது, ஈட்டிற்கு, வில்லங்கத்திற்கு அல்லது ஒதுக்கலுக்கு ஆன கழிப்பனவு எதுவுமின்றி, கைமாற்றப்பட்ட ஆதனத்தின் பெறுமதியின் மீது கணிக்கப்படுதல் வேண்டும்.

*(3)* ஏதேனும் ஆதனம், கொடை அளிப்பவருக்கு அல்லது வேறு எவரேனும் ஆளுக்குச் சாதகமாக ஏதேனும் ஒதுக்கலுக்கமைய நன்கொடையாக அளிக்கப்படு மிடத்து, நன்கொடைச் சாதனத்திற்கு விதிக்கப்படற்பாலதான முத்திரைத் தீர்வையானது, அவ்வாதனம் அவ்வொதுக்கல் இன்றியே கொடைகொளிக்கு நன் கொடையாக அளிக்கப்பட்டிருந்தது என்றாற் போன்று நன்கொடையாக அளிக்கப் பட்ட ஆதனத்தின் பெறுமதியின் மீது கணிக்கப்படுதல் வேண்டும்.

*16.* கடனுக அல்லது முற்பணமாகச் செலுத்தப்படவுள்ள அல்லது கொடுப் பனவு செய்யப்படவுள்ள பணத்தின் கொடுப்பனவுக்கான, அல்லது மீளக்கொடுப்

பனவுக்கான ஒரு முறிக்கு அல்லது ஈட்டிற்கு பிணைப் பொறுப்பளிக்கப்பட்ட அல்லது இறுதியாக அறவிடற்பாலதான மொத்தத் தொகை ஏதேனும் வழியில் வரையறுக்கப்பட்டிருக்குமிடத்து அவ்வாறு வரையறுக்கப்பட்ட தொகைக்கான ஒரு முறியின் அல்லது ஈட்டின்மீது விதிக்கப்படுகின்ருற்போன்று அதே முத்திரைத் தீர்வை விதிக்கப்படுதல் வேண்டும். அறவிடப்படற்பாலதான மொத்தத்தொகை வரையறுக்கப்படாதிருக்குமிடத்து, அச்சாதனத்தின் மீது செலுத்தப்பட்ட முத்திரைத் தீர்வையால் உள்ளடக்கப்பட்டுள்ளவாருன அத்தகையதொரு தொகையை மட்டுமே அறவிடுவதற்கு முறி அல்லது ஈடு உறுதி கூறுவதாதல் வேண்டும்.

17. சாதனமொன்றின் நியதிகளினுல், வட்டி வெளிப்படையாக செலுத்தப்படற்பாலதாக்கப்படுமிடத்து, அத்தகைய சாதனத்திற்கு அதில் வட்டியைப்பற்றி எதுவும் குறிப்பிடப்படாதிருந்தால் என்ன தீர்வை அறவிடப்படற்பாலதாக இருந்திருக்குமோ அதைவிடக் கூடுதலான முத்திரைத் தீர்வை அறவிடப்படற்பாலதாதல் ஆகாது.

18. (1) எந்த உரித்துமாற்றத்திற்கான பிரதிபயன் அல்லது பிரதிபயனின் ஏதேனும் பாகம் பருவகாலத்திற் செலுத்தப்படற்பாலதான பணத்தை உள்ளடக்கியதாக இருக்கின்றதோ அந்த உரித்துமாற்றத்திற்கு அல்லது ஏதேனும் ஆண்டுத் தொகையை அல்லது முன்னர் உளதாம் தன்மையிலில்லாத பருவகாலக்கொடுப்பனவு ஒன்றிற்கான வேறு உரிமையை ஆக்குவதற்கான அல்லது விற்பனை செய்வதற்கான ஏதேனும் சாதனத்திற்கு, அத்தகைய சாதனத்தில் தரப்பட்டுள்ள பிரதிபயனுக்கு ஆதனத்தை உரித்து மாற்றுவதற்கென விதிக்கப்படற்பாலதாகின்றவாருன அதே முத்திரைத் தீர்வை விதிக்கப்படற்பாலதாதல் வேண்டும் பிரதிபயன் அவ்விதம் தரப்பட்டில்லாதவிடத்து, பிரதிபயனுனது (2) ஆம் உட்பிரிவிற்கிணங்க நிச்சயிக்கப்பட்ட ஒரு தொகையெனக் கருதப்படுதல்வேண்டும்.

(2) பருவகாலக் கொடுப்பனவு—

(அ) முன்னமே நிச்சயிக்கப்படக்கூடியதான வரையறுக்கப்பட்ட ஒரு காலப் பகுதிக்கானதாக இருக்குமிடத்து, அக்காலப்பகுதியில் செலுத்தப்படற்பாலதான மொத்தத் தொகை;

(ஆ) ஆயுட்காலத்தோடு முடிவுருத வரையறுக்கப்படாதவொரு காலப் பகுதிக்கானதாகவிருக்குமிடத்து, முதற்கொடுப்பனவு வருமதியாக வருகின்ற தேதியிலிருந்து கணிக்கப்பட்ட இருபது ஆண்டுகளைக் கொண்ட காலப்பகுதியின்போது செலுத்தப்படற்பாலதென நிச்சயிக்கப்படக்கூடியவாருன மொத்தத் தொகை;

(இ) ஏதேனும் ஆயுட்காலத்தோடு அல்லது ஆயுட்காலங்களோடு முடிவுறும் ஒரு காலப்பகுதிக்கானதாகவிருக்குமிடத்து, முதற் கொடுப்பனவு வருமதியாக வருகின்ற தேதியிலிருந்து கணிக்கப்பட்ட பதினைந்து ஆண்டுகளைக் கொண்ட காலப்பகுதியின்போது செலுத்தப்படற்பாலதென நிச்சயிக்கப்படக்கூடியவாருன மொத்தத் தொகை.

19. எந்தச் சாதனத்திற்கு முத்திரைத் தீர்வை விதிக்கப்படற்பாலதாகின்றதோ அந்தச் சாதனம் எதனதும் விடயப்பொருளின் தொகை அல்லது பெறுமதி நிச்சயிக்கப்படக்கூடியதாக இல்லாதவிடத்து. 18 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய அத்தகைய சாதனத்தின் கீழ், அதே விவரணத்தினதான சாதனமொன்றில் ஆகக்கூடுதலான எத்தொகை அல்லது பெறுமதி கூறப்பட்டிருப்பின் உள்ளபடியே பயன்படுத்தப்பட்டிருக்கும் முத்திரை அத்தகைய எழுதி நிறைவேற்றற் தேதியில் போதுமானதாக. இருந்திருக்குமோ, அந்த ஆகக்கூடுதலான தொகையிலும் அல்லது பெறுமதியிலும் பார்க்க அதிகமாக எதுவும் உரிமை கோரப்படற்பாலதாதல் ஆகாது;

ஆயினும், அரசுரிமைப்பணம் அல்லது விளைபொருளின் ஒரு பங்கு வாடகையாக அல்லது வாடகையின் ஒரு பாகமாகப் பெறுப்படுகின்ற ஒரு சுரங்கத்தினது குத்தகையின் விடயத்தில். முத்திரைத் தீர்வை நோக்கங்களுக்காக, அத்தகைய உரிமைப் பணம் அல்லது அத்தகைய பங்கின் பெறுமதி ஆண்டொன்றுக்கு இரண்டு இலட்சம் ரூபாவென, அல்லது அத்தகைய சுரங்கத்தினுடைய விளைபொருளின் நேர்த்தகவு. அளவையும் பெறுமதியையும் கருத்திற்கொண்டு ஆணையாளர் தலைமையதிபதியினால் மதிப்பீடு செய்யப்படக்கூடியவாறான. அத்தகைய குறைந்த தொகையென மதிப்பீடு செய்யப்படுதல் வேண்டும்.

20. ஏதேனும் அசைவற்ற ஆதனம் அல்லது அதன் ஏதேனும் பாகம், துண்டுகளாக ஒரே ஆளுக்குப் பல்வேறு சாதனங்கள் மூலம் உரித்துமாற்றப்படுகின்றவிடத்தும் அல்லது கைமாற்றப்படுகின்றவிடத்தும், அத்துடன் அத்தகைய சாதனங்களின் மூலம் உரித்துமாற்றப்பட்ட அல்லது கைமாற்றப்பட்ட மொத்த இடப்பரப்பு தனியொரு சாதனத்தின் மூலம் உரித்து மாற்றப்பட்டிருப்பின் கைமாற்றப்பட்டிருப்பின் விதிக்கப்படற்பாலதாகும் முத்திரைத் தீர்வையைத் தவிர்க்கும் முன்னத்துடனேயே பல்வேறு சாதனங்கள் எழுதி நிறைவேற்றப்பட்டன என வரிமதிப்பீட்டாளருக்குத் தோன்றுமிடத்தும், அவர், அத்தகைய சாதனங்கள் அத்தகைய முன்னத்துடன் எழுதி நிறைவேற்றப்படவில்லை என்பதனை அவர் திருப்திப்படும் வகையில் எண்பிக்குமாறு அத்தகைய சாதனங்களுக்கான திறத்தவர்களை அழைக்கலாம் என்பதுடன், அத்தகைய எண்பிப்பு கொடுத்துதவப்படாவிடில், அல்லது கொடுத்துதவப்பட்ட எண்பிப்பு போதுமானதாக இல்லாவிடில், அத்தகைய சானம் ஒவ்வொன்றுக்கும், சாதனமூலம் உரித்து மாற்றப்பட்ட ஆதனத்தின் பெறுமதியின் விகிதாசாரப்படி, அத்தகைய எல்லாச்சாதனங்கள் மீதும் விதிக்கப்படற்பாலதாகும் கூட்டு மொத்த முத்திரைத் தீர்வையை, அத்தகைய சாதனங்கள்மூலம் கைமாற்றப்பட்ட மொத்த இடப்பரப்பினை உரித்து மாற்றுவதற்கென அல்லது கைமாற்றுவதற்கென தனியொரு சாதனம் எழுதி நிறைவேற்றப்பட்டிருந்தால் என்ன முத்திரைத் தீர்வை அறவிடப்படற்பாலதாக இருந்திருக்கக் கூடுமோ அந்த முத்திரைத் தீர்வையின் ஒன்றரைமடங்கிற்குச் சமமாக ஆக்குகின்றவாறான அத்தகையதொரு தொகைகொண்டு முத்திரைத்தீர்வை விதிக்கப்படுதல் வேண்டும்.

21. (1) (அ) ஏதேனும் தொழிலை அல்லது ஏதேனும் தொழில் பங்கை, அல்லது

(ஆ) (i) அசைவற்ற ஆதனம்; அல்லது

(ii) இலங்கைக்கு வெளியே அமைந்துள்ள ஆதனம்; அல்லது

(iii) பொருட்கள், களஞ்சியப் பொருட்கள் அல்லது வணிகப் பொருட்கள்; அல்லது

(iv) கையிருப்பு. பங்குகள், அல்லது சந்தைப்படுத்தப்படற் பாலதான பிணைப் பொறுப்புகள்.

என்பன தவிர்ந்த வேறு எவையேனும் ஆதனங்களை உரித்து மாற்றுவதற்கான அல்லது கைமாற்றுவதற்கான ஏதேனும் உடன்படிக்கு அல்லது ஒப்பந்தத்திற்கு அத்தகைய உடன்படிக்கையும் ஒப்பந்தமும் விடயத்திற்கேற்றவாறு தொழிலின் அல்லது தொழிலிலுள்ள பங்கின் அல்லது அத்தகைய வேறு ஆதனத்தின் உள்ள படியானவோர் உரித்துமாற்றம் அல்லது கைமாற்றம் என்றுற்போன்று,அளிப்புப் பெறுநரால் அல்லது கைமாற்றம் பெறுநரால் செலுத்தப்படவேண்டிய அதே சம பெறுமதியான முத்திரைத் தீர்வை விதிக்கப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவிற்கியைய, ஓர் உடன்படிக்கையின்மீது அல்லது ஒப்பந் தத்தின்மீது உரியமுறையில் முத்திரைத் தீர்வை செலுத்தப்பட்டுள்ளவிடத்து, அதனைப் பின்பற்றிச் செய்யப்பட்ட உரித்துமாற்றத்திற்கு அல்லது கைமாற்ற திற்குப் பத்து ரூபா முத்திரைத் தீர்வை விதிக்கப்படற்பாலதாதல் வேண்டும் என் பதுடன், அதற்கென செய்யப்பட்ட விண்ணப்பத்தின்மீது ஆணையாளர் தலைமை யதிபதி, உரியமுறையில் முத்திரையிடப்பட்ட உடன்படிக்கை அல்லது ஒப்பந்தம் சமர்ப்பிக்கப்படுவதன்பேரில் உரித்துமாற்றத்தின் அல்லது கைமாற்றத்தின் அல்லது கைமாற்றத்தின் மீதான சம பெறுமதித் தீர்வையின் கொடுப்பனவைப் புறக்குறிப் பிடுவதன் மூலம் குறிப்பிடுதலும் வேண்டும்.

## அத்தியாயம் VIII

### பிரசித்த நொத்தாரிசுமாரினதும் வேறு ஆட்களினதும் கடமைகள்

22. (1) முத்திரைத் தீர்வை விதிக்கப்படற்பாலதான ஏதேனும் சாதனத்தை வரைகின்ற, ஆக்குகின்ற, எழுதி நிறைவேற்றுகின்ற அல்லது அத்தாட்சிப்படுத்து கின்ற ஆள் ஒவ்வொருவரும், அத்தகைய சாதனத்திற்கான கட்சிக்காரர்களாக வுள்ளவர்களின் முழுப் பெயர்களையும், முகவரிகளையும் பிரதிபயனையும் கொடுப் பனவுத் திகதியையும், கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய முறையையும், அத் துடன் அத்தகைய சாதனத்திற்கு முத்திரைத் தீர்வை விதிக்கப்படற்பாலதாகும் தன்மையைப் பாதிக்கின்ற மற்றெல்லா நிகழ்வுகளையும் சூழ்நிலைகளையும், அத்து டன் எத்தகைய முத்திரைத் தீர்வை அச்சாதனத்திற்கு விதிக்கப்படற்பாலதோ அத்தகைய முத்திரைத் தீர்வையின் தொகையையும் அதனகத்துதருதல் வேண்டும்.

(2) உரித்துமாற்றச் சாதனமொன்றினை அத்தாட்சிப்படுத்தும் ஒவ்வொரு பிரசித்த நொத்தாரிசும் அவ்வாறு அத்தாட்சிப்படுத்துவதற்கு முன்னர் எந்தப்

பெறுமதியின்மீது முத்திரைத் தீர்வை செலுத்தப்படுகின்றதோ அந்தப்பெறுமதி. உரித்து மாற்றப்படும் ஆதனத்தின் பெறுமதியை குறித்துக் காட்டுகிறது எனத் தம்மைத் திருத்திப்படுத்திக்கொள்வதற்கு நியாயமான எல்லா நடவடிக்கைகளையும் எடுத்தல் வேண்டும்.

(3) எந்தச் சாதனத்திற்கு ஒட்டு முத்திரைகள் பயன்படுத்தப்படுகின்றனவோ அந்த ஏதேனும் சாதனத்தை அத்தாட்சிப்படுத்தும் பிரசித்த நொத்தாரிசு ஒவ்வொருவரும், அத்தகைய சாதனத்திற்குச் சரியான விவரணத்தையும் பெறுமதியும் கொண்டமுத்திரைகளை ஒட்டுதல்வேண்டும் என்பதுடன், அவற்றை இச்சட்டத்தில் பணிக்கப்பட்டமுறையில் பொறித்தழித்தலும், அத்துடன் அவரது அத்தாட்சிப் படுத்துதலில் அத்தகைய சாதனத்திற்கு ஒட்டப்பட்ட முத்திரைகளின் எண்ணிக்கையையும் பெறுமதியையும் குறிப்பிடுதலும் வேண்டும்.

23. (அ) விற்கப்பட்ட எவையேனும் பொருட்களுக்கு அல்லது ஆற்றிய சேவைகளுக்கு அத்தகைய விற்பனை அல்லது ஆற்றுகையின் பேரில் உடனடியாகப் பெறும் கொடுப்பனவாகவன்றி வேறுவகையில், நூறு ரூபாவிலான அல்லது அதற்கு மேற்பட்ட தொகையினதான ஏதேனும் பணத்தைப் பெறுகின்ற; அல்லது

(ஆ) நூறு ரூபாவுக்கான அல்லது அதற்கு மேற்பட்ட தொகைக்கான ஏதேனும் மாற்றுண்டியலை, காசோலையை அல்லது வாக்குறுதிப் பத்திரத்தைப் பெறுகின்ற; அல்லது

(இ) தனிசொன்றைத் தீர்த்துவைப்பதில் அல்லது பகுதி அளவில் தீர்த்துவைப்பதில், நூறு ரூபாவிலான அல்லது அதற்கு மேற்பட்ட தொகையினதான பெறுமதியுள்ள ஏதேனும் அசைவுள்ள, ஆதனத்தைப் பெறுகின்ற.

ஆளெவரும் அவற்றிற்கு உரியமுறையில் முத்திரையிடப்பட்ட பற்றுச் சீட்டொன்றைச் கொடுத்தல் வேண்டும்.

## அத்தியாயம் IX

### முத்திரைத் தீர்வைச் செலுத்துவதற்கு ஆளாகும் ஆட்கள்

24. முரணான உடன்படிக்கையொன்று இருக்குமிடத்தன்றி-

(அ) காப்புறுதிப் பூட்கையொன்றின் விடயத்தில், காப்புறுதியைப் பயனுறுத்தும் ஆளினால்;

(ஆ) உரித்துமாற்றமொன்றின் அல்லதுஉரித்துமாற்றுதற்கானஉடன்படிக்கையொன்றின் விடயத்தில், அளிப்புப் பெறுநரால் அல்லது முன்னப்பட்ட அளிப்புப் பெறுநரால்;

(இ) குத்தகையொன்றின் அல்லது குத்தகைக்கான உடன்படிக்கையொன்றின் விடயத்தில், குத்தகைக்கொளியால் அல்லது முன்னப்பட்ட குத்தகைக் கொளியால்;

(ஈ) பரிமாற்றற் சாதனமொன்றின் விடயத்தில்,சமமான பங்குகளில் திறத்தவர்களினால்;

(உ) கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றின் அல்லது வேறு கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றின் பங்குகளினது கைமாற்றமொன்றின் விடயத்தில் கைமாற்றம் பெறுநரால் ;

(ஊ) வேறு ஏதேனும் சாதனத்தின் விடயத்தில்; அத்தகைய சாதனத்தை வரைகின்ற ஆக்குகின்ற அல்லது எழுதி நிறைவேற்றுகின்ற ஆளினால்;

முத்திரைத் தீர்வை செலுத்தப்படற்பாலதாதல் வேண்டும்.

25. (1) முத்திரைத் தீர்வை விதிக்கப்படற்பாலதான ஏதேனும் சாதனம் இலங்கையில் எழுதி நிறைவேற்றப்படுமாயின் அத்துடன் உரியமுறையில் முத்திரையிடப்படாதிருப்பின், அப்போது அத்தகைய சாதனத்தை எழுதி நிறைவேற்றும் ஒவ்வொராளும் அத்தகைய தீர்வைத் தொகையையும் அத்தகைய தீர்வையைச் செலுத்தாமைக்காக விதிக்கப்பட்ட ஏதேனும் குற்றவிறுப்பையும் ஆணையாளர் தலைமையதிபதிக்குச் செலுத்துவதற்கு ஆளாதல் வேண்டும்.

(2) முத்திரைத் தீர்வை விதிக்கப்படற்பாலதான ஏதேனும் சாதனம் இலங்கைக்கு வெளியே எழுதி நிறைவேற்றப்படுமாயின், அப்போது, சாதனத்திற்கு திறத்தவரொருவராக இலங்கையில் இருந்துள்ள ஒவ்வொராளும் அத்துடன் ஏதேனும் வழியில் சாதனத்தைப் பயன்படுத்துகின்றவரான இலங்கையிலுள்ள ஒவ்வொராளும் முத்திரைத் தீர்வையையும் அத்தகைய தீர்வையைச் செலுத்தாமைக்காக விதிக்கப்படும் ஏதேனும் குற்றவிறுப்பையும் ஆணையாளர் தலைமையதிபதிக்குச் செலுத்துவதற்கு ஆளாதல் வேண்டும்,

(3) ஏதேனும் சாதனம் தொடர்பில் செலுத்தப்படற்பாலதான முத்திரைத் தீர்வையும் குற்றவிறுப்பும், (அவ்வாறு ஏதுமிருப்பின்) (1) ஆம் உட்பிரிவின் கீழ். உடன்படிக்கையின் மூலம் அல்லது வேறுவகையில், அல்லது 24 ஆம் பிரிவின் கீழ், அத்தகைய சாதனத்தின்மீது முத்திரைத் தீர்வையைச் செலுத்துவதற்கு ஆளாயிருந்தவரான ஆள் அல்லாத வேறு எவரேனும் ஆளிடமிருந்து, ஆணையாளர் தலைமையதிபதியினால் அறவிடப்பட்டிருக்கும்போது, அவ்வாறு அறவிடப்பட்ட தீர்வையினதும் குற்றவிறுப்பினதும் தொகையை (அவ்வாறு ஏதுமிருப்பின்) முதற்கூறப்பட்ட ஆள், இரண்டாவதாகக் கூறப்பட்ட ஆளிடமிருந்து அறவிடுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(4) இருபத்துநாலாம் பிரிவில், முரணாக எது எவ்வாறிருப்பினும், இப்பிரிவின் (1) ஆம், (2) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகள் பயனுறுவனவாதல் வேண்டும்.

(5) இறந்த ஆளொருவரின் மரணசாதன, தத்துவக்காரர், அத்தகைய இறந்தார் உயிருடன் இருந்திருப்பின் இச்சட்டத்தின்கீழ் எந்தச் செயல்களையும் கருமங்களையும் காரியங்களையும் செய்வதற்கு ஆளாயிருந்திருக்கக் கூடுமோ

அந்த எல்லாச் செயல்களையும் கருமங்களையும் காரியங்களையும் செய்வதற்கு ஆளாதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய இறந்த ஆள் எந்தச் சாதனங்களுக்குத் திறத்தவரொருவராக இருந்தாரோ அந்த எல்லாச் சாதனங்களினதும் தொடர்பில், அவர் உயிருடன் இருந்திருந்தால் அவருக்கு எந்த முத்திரைத் தீர்வை விதிக்கப் படற்பாலதாக இருந்திருக்கக் கூடுமோ அந்த முத்திரைத் தீர்வை விதிக்கப் படற்பாலதாதலும் வேண்டும்.

ஆயினும் —

(i) இறந்த ஆளின் ஏதேனும் செயல் அல்லது தவறுகை தொடர்பில், மரண சாதன தத்துவக்காரருக்கு எதிராக வழக்கு நடவடிக்கைகள் எதுவும் தொடரப்படுதல் ஆகாது ;

(ii) இந்த உட்பிரிவின்கீழ் மரணசாதன தத்துவக்காரரொருவரின் பொறுப்பானது, —

(அ) முத்திரைத் தீர்வைக்கான பொறுப்பு இவ்வுட்பிரிவின் கீழ் எழுமென அவருக்கு அறிவித்தல் கொடுக்கப்பட்ட தேதியன்று அவரது உடைமையில் அல்லது கட்டுப்பாட்டிலிருக்கும் இறந்த ஆளின் மரணச் சொத்தினதும் அத்துடன்

(ஆ) பயன்பெறுநர் ஒருவருக்குப் போயிருக்கக் கூடியதான மரணச் சொத்தின் ஏதேனும் பாகத்தினதும்,

பணத்தொகைக்கு வரையறுக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

*26.* *(1)* ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்திரெண்டாம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தில் எது எவ்வாறிருப்பினும், ஏதேனும் தனியார் கம்பெனி ஒடுக்கப்படுமிடத்து அத்துடன், அக்கம்பெனியானது, முத்திரைத் தீர்வையாக எந்தத் தொகையைச் செலுத்துவதற்காளாகின்றதோ அந்த ஏதேனும் தொகையை, அத்தகைய பொறுப்பு அதன் ஒழித்துக்கட்டலுக்கு முன்னர் எழுந்ததாயினுஞ் சரி, ஒழித்துக்கட்டலின்போது எழுந்ததாயினுஞ் சரி, ஒழித்துக்கட்டலின் பின்னர் எழுந்ததாயினுஞ் சரி, அறவிட முடியாதிருக்குமிடத்தும், அப்போது, அத்தகைய தீர்வையைச் செலுத்துவதற்கான கம்பெனியின் பொறுப்பு எந்தக் காலப்பகுதியின்போது எழுந்ததோ அந்த ஏதேனும் காலப்பகுதியின் போது கம்பெனியின் பணிப்பாளரொருவராக இருந்த ஒவ்வோராளும், தொகையின் கொடுப்பனவில் ஏற்பட்ட தவறுகையானது கம்பெனியின் அலுவல்கள் தொடர்பில் அவர்பாலான ஏதேனும் கடும் அசட்டைக்கு, அதிகாரத் துர்ப்பிரயோகத்திற்கு அல்லது கடமை மீறலுக்கு ஏற்றிக்கூற முடியாதென அவர் எண்பித்தாலன்றி, அத்தகைய தொகையின் கொடுப்பனவிற்குக் கூட்டாகவும் தனித்தனியாகவும் ஆளாதல் வேண்டும்.

*(2)* இப்பிரிவில் ''தனியார் கம்பெனி'' என்னும் சொல்லமைப்பு 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தில் உள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருக்கும்.

## அத்தியாயம் X

## சாதனங்களை வலுவிழக்கச் செய்தல்

27. (1) சான்று பெறுவதற்குச் சட்டத்தின் மூலம் அல்லது திறத்தவர்களின் சம்மதத்தின் மூலம் அதிகாரம் பெற்றுள்ள ஒவ்வோராளும், அத்துடன், பகிரங்க அலுவலகமொன்றிலுள்ள (பொலிசு அலுவலரொருவர் அல்லாத) வேறு எந்த அலுவலரின் முன்னிலையில் அத்துடன், ஒரு பகிரங்கக் கூட்டுத்தாபனத்தின், வங்கியின் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நாணய முகவராண்மையின் எந்த அலுவலரின் முன்னிலையில் அவரது அபிப்பிராயப்படி முத்திரைத் தீர்வை விதிக்கப்படற்பாலதான ஏதேனும் சாதனம் முன்வைக்கப்படுகின்றதோ அல்லது அவரது கடமைகளைப் புரிகையில் அவர்முன் வருகின்றதோ அந்த அலுவலர் ஒவ்வொருவரும், அத்தகைய சாதனத்திற்கு உரிய முறையில் முத்திரையிடப்படவில்லையென அவருக்குத் தோன்றுமாயின், அத்தகைய சாதனத்தை வலுவிழக்கச் செய்தல் வேண்டும்;

ஆயினும், குற்றவியல் நீதிமன்றமொன்றின் நீதிவானின் அல்லது நீதிபதியின் முன்னிலையில், அந்நீதிமன்றத்தில் ஏதேனும் வழக்கு நடவடிக்கையின்போது வருகின்ற ஏதேனும் சாதனத்தை வலுவிழக்கச் செய்தல் அல்லது சோதனை செய்தல் பொருத்தமாகும் என அவர் கருதாவிடில், இப்பிரிவிலுள்ள எதுவும் அவ்விதம் வலுவிழக்கச் செய்யுமாறு அல்லது சோதனை செய்யுமாறு அவரைத் தேவைப்படுத்துவதாகக் கருதப்படுதல் ஆகாது.

(2) முத்திரைத் தீர்வை விதிக்கப்படற்பாலதான ஏதேனும் சாதனமானது பகிரங்க அலுவலகமொன்றிலுள்ள அல்லது கூட்டுத்தாபனமொன்றிலுள்ள அல்லது வங்கியிலுள்ள அல்லது அங்கீகரிக்கப்பட்ட முகவராண்மையொன்றிலுள்ள எந்த அலுவலரின் முன்னிலையில் முன்வைக்கப்படுகின்றதோ அல்லது அவரது பணிகளை நிறைவேற்றுகையில் வருகின்றதோ அந்த எவரேனும் அலுவலரை, ஆணையாளர் தலைமையதிபதி:—

(அ) அத்தகைய சாதனம் உரியமுறையில் முத்திரையிடப்பட்டுள்ளதா என்பதனை நிச்சயிப்பதற்காக அதனைச் சோதனை செய்யுமாறும்,

(ஆ) அத்தகைய சாதனத்தை வலுவிழக்கச் செய்யுமாறும்,

தேவைப்படுத்தலாம்.

(3) ஏதேனும் சாதனத்தைச் சோதனை செய்யுமாறு அல்லது வலுவிழக்கச் செய்யுமாறு (2) ஆம் உட்பிரிவின்கீழ் ஆளெவரும் தேவைப்படுத்தப்படுமிடத்து, அத்தகைய சாதனத்தை விடயத்திற்கேற்றவாறு, வலுவிழக்கச் செய்வதும் அல்லது சோதனை செய்வதும் அத்துடன் ஆணையாளர் தலைமையதிபதியினால் தேவைப்படுத்தப்பட்டவாறான அத்தகைய மேலும் நடபடிகளை எடுத்தலும் அத்தகைய ஆளின் கடமையாதல் வேண்டும்.

(4) ஆணையாளர் தலைமையதிபதி அல்லது அவரால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர், ஒரு பகிரங்க அலுவலகத்திற்கு கூட்டுத்தாபனத்திற்கு அல்லது வங்கிக்கு அல்லது அங்கீகரிக்கப்பட்ட நாணய முகவராண்மைக்குப் பொறுப்பாயிருக்கின்ற எவரேனும் ஆளுக்கு உரிய முறையிலான அறிவித்தல் கொடுத்த பின்னர், அத்தகைய சாதனத்திற்கு உரிய முறையில் முத்திரை இடப்பட்டுள்ளதா என்பதனை நிச்சயிப்பதற்கென அத்தகைய அலுவலகத்தில், கூட்டுத்தாபனத்தில் அல்லது வங்கியில் அல்லது முகவராண்மையில் உள்ள ஏதேனும் சாதனத்தைச் சோதனையிடலாம் என்பதுடன் அத்தகைய சாதனத்திற்கு அவ்விதம் முத்திரையிடப்படாதிருப்பின் அதனை வலுவிழக்கச் செய்தலும் வேண்டும்.

28. (1) சான்று பெறுவதற்குச் சட்டத்தினால் அல்லது திறத்தவர்களின் சம்மதத்தினால் அதிகாரம் பெற்றுள்ள ஆளெவரும் அல்லது பதிவாளர் தலைமையதிபதி, 33 ஆம் பிரிவிற்கான காப்பு வாசகத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க, ஏதேனும் சாதனத்தைச் சான்றாக ஏற்றுக் கொள்ளுமிடத்து, அல்லது ஏதேனும் சாதனத்தின் மீது செயலாற்றுமிடத்து, அவர், அதனைச் சமர்ப்பிக்கும் ஆளின் செலவில் வழங்கப்பட்டதான அத்தகைய சாதனத்தின் மெய்யென்று உறுதிப்படுத்தப்பட்ட பிரதியொன்றையும், அத்துடன் சேர்த்து முத்திரைத் தீர்வையினதும் அதன் தொடர்பில் அறவிடப்பட்ட குற்றவிறுப்பினதும் தொகையைக் கூறும் எழுத்திலான சான்றிதழொன்றையும் ஆணையாளர் தலைமையதிபதிக்கு அனுப்பி வைத்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய தொகையை ஆணையாளர் தலைமையதிபதிக்கு அனுப்பி வைத்தலும் வேண்டும்.

(2) ஏனையவிடயம் ஒவ்வொன்றிலும் சாதனமொன்றை அவ்வாறு வலுவிழக்கச் செய்கின்றவரான ஆள் அதனை மூலப்பிரதியில் ஆணையாளர் தலைமையதிபதிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

29. முத்திரைத் தீர்வை விதிக்கப்படற்பாலதும் உரிய முறையில் முத்திரையிடப்படாததும், ஐம்பது சதத்தை விஞ்சாத முத்திரைத் தீர்வை விதிக்கப்படற்பாலதானவொரு சாதனமாக அல்லாததும், அல்லது மாற்றுண்டியலாக, காசோலையாக அல்லது வாக்குறுதிப் பத்திரமாக அல்லாததுமான ஏதேனும் சாதனம். எவரேனும் ஆளினால் அவரது சொந்தப் பிரேரணையின் மீது, அது எழுதி நிறைவேற்றப்பட்ட தேதியிலிருந்து ஓராண்டுக் காலத்திற்குள் வரி மதிப்பீட்டாளர் ஒருவரின் முன்னர் முன் வைக்கப்படுமிடத்து, அத்துடன் அத்தகைய சாதனத்திற்கு உரிய முறையில் முத்திரையிடப்படவில்லை என்ற நிகழ்வை அத்தகைய ஆள் வரி மதிப்பீட்டாளரின் கவனத்திற்குக் கொண்டு வருமிடத்தும், தகுந்த தீர்வைத் தொகையை அல்லது அதனை நிறைவு செய்வதற்குத் தேவைப்படும் தொகையை வரிமதிப்பீட்டாளருக்குச் செலுத்த முனையுமிடத்தும், அத்துடன் அத்தகைய சாதனத்திற்கு முத்திரையிடாது விடப்பட்டமை தற்செயலாக, தவறுதலாக அல்லது அவசரமான அவசியத்தினால் ஏற்பட்டதென வரிமதிப்பீட்டாளர் திருதிப்திப்படு

மிடத்தும் அவர் சாதனத்தை வலுவிழக்கச் செய்வதற்குப் பதிலாக அத்தகைய தொகையைப் பெற்றுக் கொள்ளலாம் என்பதுடன், அத்தகைய சாதனத்திற்கு விதிக்கப்படற்பாலதான தகுந்த முத்திரைத் தீர்வைத் தொகை செலுத்தப்பட்டுள்ளதென அதன்மீது புறக்குறிப்பிடுவதன் மூலம் குறிப்பிடுதலும் வேண்டும்.

30. (1) ஆணையாளர் தலைமையதிபதி, 27ஆம் பிரிவின்கீழ் ஏதேனும் சாதனத்தை வலுவிழக்கச் செய்யுமிடத்து, அல்லது 28ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ், ஐம்பது சதத்தை அல்லது அதற்குக் குறைவான தொகையைக் கொண்ட தீர்வை விதிக்கப்படற்பாலதான சாதனமொன்றாக அல்லாத ஏதேனும் சாதனத்தை, அல்லது ஒரு மாற்றுண்டியலாச, காசோலையாக அல்லது வாக்குறுதிப்பத்திரமாக அல்லாத ஏதேனும் சாதனத்தைப் பெறுமிடத்து, அவர் அதனை வரிமதிப்பீட்டாளர் ஒருவருக்கு ஆற்றுப்படுதல் வேண்டும்; அதன் தொடர்பில் வரிமதிப்பீட்டாளர் பின்வரும் நடவடிக்கை முறைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்:—

(அ) அத்தகைய சாதனத்திற்கு உரிய முறையில் முத்திரையிடப்பட்டுள்ளது என அல்லது அது முத்திரைத் தீர்வை விதிக்கப்படற்பாலதல்ல என அவர் அபிப்பிராயப்படுவாராயின், விடயத்திற்கேற்றவாறு அதற்கு உரியமுறையில் முத்திரையிடப்பட்டுள்ளது என அல்லது அது அவ்விதம் தீர்வை விதிக்கப்படற்பாலதல்ல என அதன்மீது புறக்குறிப்பிடுவதன் மூலம் அவர் சான்றுபடுத்துதல் வேண்டும்:

(ஆ) அத்தகைய சாதனம் முத்திரைத் தீர்வை விதிக்கப்படற்பாலதானது எனவும், அதற்கு உரியமுறையில் முத்திரையிடப்படவில்லை எனவும் அவர் அபிப்பிராயப்படுவாராயின் தகுந்த தீர்வையையும் அல்லது அதனை ஈடுசெய்வதற்குத் தேவைப்படும் தொகையையும் அதனுடன் சேர்த்து, தகுந்த தீர்வைத் தொகையின் மூன்று மடங்கிற்கு மேற்படாதவொரு குற்றவிறுப்பொன்றையும் செலுத்துமாறு அவர் எழுத்திலான அறிவித்தலின் மூலம், முத்திரைத்தீர்வை செலுத்துவதற்காளான ஆளைத் தேவைப்படுத்துதல் வேண்டும்.

(2) அத்தகைய ஏதேனும் சாதனத்தின்மீது தகுந்த முத்திரைத் தீர்வைத் தொகை செலுத்தப்பட்டும், அத்துடன் அத்தகைய சாதனம் எழுதி நிறைவேற்றப்பட்ட முறையில் உள்ள ஏதேனும் ஒழுங்கீனம் காரணமாக அல்லது சட்டத்தால் தேவைப்படுத்தப்பட்ட நேரத்தில் அதற்கு முத்திரை இடப்படவில்லை என்பதனால் அது வலுவிழக்கச் செய்யப்பட்டும் இருக்குமிடத்து, வரிமதிப்பீட்டாளர் அவ்வொழுங்கீனம் தற்செயலாக, தவறுதலாக அல்லது அவசரமான அவசியத்தினால் ஏற்பட்டதெனத் திருப்திப்படுவாராயின் ஐந்நூறு ரூபாவை விஞ்சாத குற்றவிறுப்பொன்று செலுத்தப்படுவதன்பேரில், சாதனத்திற்கு உரிய முறையில் முத்திரையிடப்பட்டுள்ளதென அவர் அதன்மீது புறக்குறிப்பிடுவதன் மூலம் சான்று

படுத்துதல் வேண்டும் என்பதுடன், அவ்விதம் புறக்குறிப்பிடப்பட்ட சாதனம் ஒவ்வொன்றுக்கும் அதன் எழுதி நிறைவேற்றுகைத் தேதியிலிருந்தே உரியமுறையில் முத்திரையிடப்பட்டுள்ளதாகக் கருதப்படுதலும் வேண்டும்.

*31,* (1) ஏதேனும் சாதனம் தொடர்பில் 29 ஆம் பிரிவின்கீழ், அல்லது 30 (1) (ஆ) என்னும் பிரிவின்கீழ் அறிவித்தலொன்றினல் அல்லது 33 ஆம் பிரிவின் கீழ் செலுத்தப்படத் தேவைப்படுத்தப்பட்ட முத்திரைத் தீர்வையும், குற்றவிறுப்பும் (ஏதுமிருப்பின்) செலுத்தப்பட்டுள்ளவிடத்து அல்லது அறவிடப்பட்டுள்ளவிடத்து, வரிமதிப்பீட்டாளர் அல்லது அத்தகைய சாதனத்தைச் சான்ருக ஏற்றுக் கொள்ளும் ஆள், அல்லது அத்தகைய சாதனத்தின்மீது செயலாற்றும் ஆள் அதன்மீது புறக்குறிப்பிடுவதன் மூலம்—

(i) சாதனத்தின் தொடர்பில் தகுந்த முத்திரைத் தீர்வையும் குற்ற விறுப்பும் செலுத்தப்பட்டுள்ளன எனவும்;

(ii) அவற்றைச் செலுத்துகின்ற ஆளின் பெயரையும், முகவரியையும்; அத்துடன்

(iii) கொடுப்பனவுத் தேதியையும்,

சான்றுபடுத்தல் வேண்டும்.

அத்தகைய சான்றிதழ் இச்சட்டத்தின் நோக்கங்களுக்கென அதனகத்தே கூறப்பட்ட கருமங்களுக்கு முடிவான சான்ருதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவிற்கிணங்க, புறக்குறிப்பிடப்பட்ட சாதனம் ஒவ்வொன்றும் உரியமுறையில் முத்திரையிடப்பட்டிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், சான்ருக ஏற்கப்படற்பாலதாதலும் வேண்டும். அத்துடன் அது அவ்வாறு முத்திரையிடப்பட்டிருக்கின்றதென்றுற் போன்று பதிவு செய்யப்படுதலும் அதன்மீது செயற்படப்படுதலும், மெய்யென்று உறுதிப்படுத்தப்படுதலும் வேண்டும் என்பதுடன், அது எந்த ஆளின் உடைமையிலிருந்து அதனை வலுவிழக்கச் செய்யும் அலுவலரின் கைக்கு வந்ததோ அந்த ஆளுக்கு அவரது விண்ணப்பத்தின்மீது திருப்பிக் கொடுக்கப்படுதலும் வேண்டும்.

*32.* (1) ஆணையாளர் தலைமையதிபதிக்கு 28ஆம் பிரிவின்கீழ் அனுப்பப்பட்ட ஏதேனும் சாதனம் அனுப்புகையின்போது இழக்கப்படின், அழிக்கப்படின் அல்லது சேதப்படுத்தப்படின் அதனை அனுப்பும் ஆள் அத்தகைய இழப்புக்கு, அழிவுக்கு அல்லது சேதத்துக்குப் பொறுப்பாதல் ஆகாது.

(2) ஏதேனும் சாதனம் அனுப்பப்படவிருக்கும்போது, அது எந்த ஆளின் உடைமையிலிருந்து அதனை வலுவிழக்கச் செய்யும் அலுவலரின் கைக்கு வந்ததோ அந்த ஆள், தமது செலவில், அதன் பிரதியொன்று ஆக்கப்பட்டு அத்தகைய வேதனத்தை வலுவிழக்கச்செய்யும் அலுவலரால் மெய்யென்று உறுதிப்படுத்தப்படல் வேண்டும் எனத் தேவைப்படுத்தலாம்.

## அத்தியாயம் XI

### சாதனங்களின் ஏல்தகவு

*33. (1)* முத்திரைத்தீர்வை விதிக்கப்படற்பாலதான சாதனம் எதுவும் உரியமுறையில் முத்திரையிடப்பட்டிருந்தாலன்றி, அவை சான்றுகளைப் பெறுவதற்குச் சட்டத்தின்மூலம் அல்லது திறத்தவர்களின் சம்மதத்தின் மூலம் அதிகாரம் பெற்றுள்ள எவரேனும் ஆளினல் சான்ருகப் பெற்றுக்கொள்ளப்படுதலோ அல்லது ஏல்தகவுடையதாதலோ அல்லது அத்தகைய எவரேனும் ஆளினல் அல்லது ஒரு பகிரங்க அலுவலகத்தில் அல்லது கூட்டுத்தாபனத்தில் அல்லது வங்கியில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நாணய முகவராண்மையில் உள்ள எவரேனும் அலுவலரினல் பதிவு செய்யப்படுதலோ மெய்யென்று உறுதிப்படுத்தப்படுதலோ அல்லது அவர் அதன்மீது செயற்படுதலோ ஆகாது;

ஆயின், அத்தகைய ஏதேனும் சாதனம், அதற்கு விதிக்கப்படற்பாலதான தகுந்த தீர்வையும் அல்லது அதனை ஈடு செய்வதற்குத் தேவைப்பட்ட தொகையும் அத்துடன் தகுந்த தீர்வையின் மும்மடங்கை விஞ்சாதவொரு குற்றவிறுப்பும் செலுத்தப்படுவதன்மீது—

(அ) சான்று பெறுவதற்குச் சட்டத்தின் மூலம் அல்லது திறத்தவர்களின் சம்மதத்தின் மூலம் அதிகாரம் பெற்றுள்ள எவரேனும் ஆளினல் சான்ருக ஏற்றுக்கொள்ளப்படலாம்; அல்லது

(ஆ) அத்தகைய சாதனத்தின்மீது விதிக்கப்படற்பாலதான முத்திரைத் தீர்வை ஆயிரத்து ஐந்நூறு ரூபாவாக அல்லது அதற்குக் குறைவானதாக இருக்குமாயின், பதிவாளர் தலைமையதிபதி அதன்மீது செயற்படலாம்.

இக்காப்புவாசகத்தில் ''சாதனம்'' என்பது ஐம்பது சதத்திலான அல்லது அதற்குக் குறைவான முத்திரைத் தீர்வை விதிக்கப்படற்பாலதான சாதனமொன்றை வாக்குறுதிப் பத்திரமொன்றை காசோலையொன்றை அல்லது (34 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்படும் மாற்றுண்டியலொன்றல்லாத) மாற்றுண்டியலை உள்ளடக்கமாட்டாது.

ஆயின், மேலும் எவையேனும் பகிரங்கக் கணக்குகளினது கணக்காய்வு நெறியின்போது எவரேனும் அலுவலருக்கு அல்லது அவர்முன் உரியமுறையில் முத்திரையிடப்படாத ஏதேனும் பற்றுச்சீட்டு சமர்ப்பிக்கப்படுமிடத்து அல்லது முன்வைக்கப்படுமிடத்து, அத்தகைய அலுவலர், இச்சட்டத்தின்கீழ் அத்தகைய பற்றுச்சீட்டை வலுவிழக்கச்செய்வதற்குப்பதிலாக, உரிய முறையில் முத்திரையிடப்பட்ட பற்றுச்சீட்டொன்று அதற்குப் பதிலீடு செய்யப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்துதல் வேண்டும்.

(2) ஏதேனும் சாதனம் (1) ஆம் உட்பிரிவிற்கான காப்புவாசகத்தின் கீழ் சான்ருக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளவிடத்து, அவ்வாறு ஏற்றுக்கொள்ளப்பட்டமை

அத்தகைய சாதனத்திற்கு உரியமுறையில் முத்திரையிடப்படவில்லை என்ற ஏதுவின் மீது அதே துடர்ச்சியின் அல்லது வழக்கு நடவடிக்கையின் ஏதேனும் கட்டத்தில் கேள்விக்குட்படுத்தப்படுதல் ஆகாது.

34. இலங்கைக்கு வெளியே ஏற்றுக்கொள்ளப்படுவதற்கெனச் சமர்ப்பிக்கப்படுகின்ற, அல்லது ஏற்றுக்கொள்ளப்படுகின்ற அல்லது செலுத்தப்படற்பாலதான மாற்றுண்டியலொன்று அது இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க முத்திரையிடப்படவில்லை என்றகாரணத்தினுல்மட்டும் செல்லுபடியற்றதாதல் ஆகாது என்பதுடன் உரியமுறையில் முத்திரையிடப்படாத அத்தகைய ஏதேனும் மாற்றுண்டியல் அதற்கு விதிக்கப்படற்பாலதான முத்திரைத் தீர்வை செலுத்தப்பட்டதன்மீது அல்லது போதிய அளவில் முத்திரையிடப்படாத அத்தகைய ஏதேனும் மாற்றுண்டியலின் விடயத்தில் தகுந்த தீர்வையை ஈடுசெய்வதற்குத் தேவைப்பட்ட தொகையும் அத்துடன் தகுந்த தீர்வையின் மும்மடங்கை விஞ்சாத குற்றவிறுப்பொன்றும் செலுத்தப்பட்டதன்மீது சான்ருக ஏற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்.

35. மாற்றுண்டியலொன்று ஒரு தொகுதியாக வரையப்பட்டும் அத்துடன் அத்தொகுதியில் ஒன்று உரியமுறையில் முத்திரையிடப்பட்டும் இருக்குமிடத்து, அதன் ஏனைய தொகுதி அல்லது தொகுதிகள், முத்திரையிடப்பட்ட உண்டியலைத் தவிர்த்து வழங்கப்பட்டிருந்தாலன்றி, அல்லது வேறு முறையில் உரிபெயர்த்து அழிக்கப்பட்டிருந்தாலன்றி முத்திரை தீர்வையினின்று விலக்களிக்கப்படுதல் வேண்டும். அத்துடன் தொகுதியொன்றின் ஒரு பாகமாயமையும் உரிய முறையில் முத்திரையிடப்பட்ட உண்டியலொன்று இழக்கப்பட்டமை அல்லது அழிக்கப்பட்டமை பற்றிய எண்பிப்பின்மீது, இழக்கப்பட்ட அல்லது அழிக்கப்பட்ட உண்டியலைத் தவிர்த்துவழங்கப்பட்டிராத அல்லது ஏதேனும் முறையில் உரிபெயர்த்தளிக்கப்பட்டிராத தொகுதியின் வேறு ஏதேனும் உண்டியல், 33ஆம் பிரிவிலுள்ள எது எவ்வாறிருப்பினும், இழக்கப்பட்ட அல்லது அழிக்கப்பட்ட உண்டியலின் உள்ளடக்கங்களை எண்பிப்பதற்கான சான்ருக ஏற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்.

36. முத்திரையிடப்பட்ட பற்றுச்சீட்டொன்றை வழங்குமாறு தேவைப்படுத்தப்பட்ட ஆளெவரும் முத்திரையிடப்படாத பற்றுச்சீட்டொன்றை வழங்கி அத்துடன் அத்தகைய பற்றுச்சீட்டு முத்திரையிடப்பட்டிருப்பின் அது அவருக்கெதிரான சான்ருக ஏற்றுக் கொள்ளப்படற்பாலதாக ஆகுமிடத்து அத்தகைய பற்றுச்சீட்டானது, 33ஆம் பிரிவிலுள்ள எது எவ்வாறிருப்பினும் அதனைச் சமர்ப்பிக்கும் ஆளினுல் ஐந்து ரூபா குற்றவிறுப்பொன்று செலுத்தப்படுவதன் மீது அவருக்கெதிரான சான்ருக ஏற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்.

37. முப்பத்து மூன்ரும் பிரிவிலுள்ள எது எவ்வாறிருப்பினும், ஒரு ரூபாவிலான அல்லது அதற்குக் குறைவான முத்திரைத் தீர்வை விதிக்கப்படற்பாலதான ஏதேனும் மாற்றுண்டியல், காசோலை அல்லது வாக்குறுதிப் பத்திரம் கொடுப்பனவுக்கென முத்திரையிடப்படாமல் சமர்ப்பிக்கப்படுமிடத்து, அது எந்த ஆளிடம் சமர்ப்பிக்கப்படுகின்றதோ அந்த ஆள் அதற்கு அவசியமான ஒட்டு

முத்திரையை ஒட்டலாம் என்பதுடன், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க அதன் பெறுமதி அழிக்கப்படுவதன் மீது, அத்தகைய உண்டியலின் அல்லது காசோலையின் அல்லது பத்திரத்தின்மீது செலுத்தப்படற்பாலதான பணத்தொகையையும் செலுத்தலாம். அத்துடன் முத்திரைத் தீர்வையை, அதனைச் செலுத்தியிருக்க வேண்டிய ஆளுக்கெதிராக விதிக்கலாம் அல்லது மேலே சொல்லப்பட்டவாறு செலுத்தப்படற்பாலதான பணத் தொகையிலிருந்து அதனைக் கழித்தல் வேண்டும். அதன்மேல், அத்தகைய உண்டியல், பத்திரம் அல்லது காசோலை உரியமுறையில் முத்திரையிடப்பட்டிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

ஆயினும், இதில் அடங்கியுள்ள எதுவும் எவரேனும் ஆளை, அத்தகைய உண்டியலின், காசோலையின் அல்லது பத்திரத்தின் தொடர்பில் அவர் ஆளாகக்கூடிய ஏதேனும் குற்றவிறுப்பினின்று அல்லது வழக்கு நடவடிக்கையின்று விடுவித்தல் ஆகாது.

## அத்தியாயம் XII

## முத்திரைத் தீர்வை பற்றிய தீர்த்தளிப்பு

38. (1) ஏதேனும் சாதனம், அது எழுதி நிறைவேற்றப்பட்டதாயினுஞ்சரி, அல்லாவிடினுஞ்சரி, அத்துடன் முன்னர் முத்திரையிடப்பட்டதாயினுஞ் சரி அல்லாவிடினுஞ்சரி, அதன் பிரதியொன்றுடன் சேர்த்து வரிமதிப்பீட்டாளரொருவரிடம் கொணரப்படுமிடத்தும், அதனைக்கொணரும் ஆள், அதற்கு விதிக்கப்படற்பாலதான ஏதேனும் முத்திரைத் தீர்வையிருப்பின் அத்தீர்வையைப் பற்றி வரிமதிப்பீட்டாளரின் அபிப்பிராயத்தைப் பெறுவதற்கென விண்ணப்பித்து, ஐம்பது ரூபா கட்டணமொன்றைச் செலுத்துமிடத்தும், வரிமதிப்பீட்டாளர் அச்சாதனத்திற்கு அவரது அபிப்பிராயப்படி விதிக்கப்படற்பாலதான முத்திரைத் தீர்வையைத் தீர்மானித்தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய ஆளுக்கு அவரது தீர்மானத்தைப்பற்றி எழுத்தில் அறிவித்தலும் வேண்டும்.

(2) வரிமதிப்பீட்டாளர் அவரது அபிப்பிராயத்தை வழங்கும் நோக்கத்துக்கென, அச்சாதனத்திற்கு முத்திரைத் தீர்வை விதிக்கப்படற்பாலதாகுந் தன்மை தொடர்பிலான அல்லது அதற்கு விதிக்கப்படற்பாலதான முத்திரைத் தீர்வைத் தொகை தொடர்பிலான நிகழ்வுகளை எண்பிப்பதற்கு அவசியமான வாறான அத்தகைய ஏதேனும் ஆவணத்தை அல்லது வேறு சான்றை முன்வைக்குமாறு, அச்சாதனத்தைக் கொணரும் ஆளைத்தேவைப்படுத்தலாம்.

ஆயினும், அத்தகைய ஏதேனும் சான்றினைக் கொடுத்துதவும் ஒவ்வோராளும், அது தொடர்புறுத்தும் சாதனத்திற்கு விதிக்கப்படற்பாலதான முழு முத்திரைத் தீர்வையும் செலுத்தப்படுவதன் மீது, மேலே சொல்லப்பட்ட எவையேனும் நிகழ்வுகளை அல்லது சூழ்நிலைகளை அத்தகைய சாதனத்தில் அவர் உண்மையிலேயே கூறுதுவிட்டதன் காரணத்தினாலன்றி, வேறுவகையில் இச்சட்டத்தின்கீழ் அவரால் உறப்பட்டிருக்கக் கூடிய ஏதேனும் குற்றவிறுப்பினின்றும் விடுவிக்கப்பட்டவராதல் வேண்டும்.

39. (1) வரிமதிப்பீட்டாளர், 38ஆம் பிரிவின்கீழ் அவரிடம் கொணரப்படும் ஏதேனும் சாதனத்தின் மீது புறக்குறிப்பிடுவதன்மூலம், அச்சாதனத்திற்கு விதிக்கப்படற்பாலதான ஏதேனும் முத்திரைத் தீர்வை செலுத்தப்பட்டுள்ளதென அல்லது அத்தகைய சாதனம் முத்திரைத் தீர்வை விதிக்கப்படற்பாலதல்ல என அத்தாட்சிப்படுத்துதல் வேண்டும்.

(2) இப்பிரிவின்கீழ் எந்தச் சாதனத்தின்மீது புறக்குறிப்பொன்று செய்யப்பட்டுள்ளதோ அந்த ஏதேனும் சாதனத்திற்கு விடயத்திற்கேற்றுற் போன்று உரியமுறையில் முத்திரையிடப்பட்டுள்ளதென அல்லது அது முத்திரைத் தீர்வை விதிக்கப்படற்பாலதல்ல எனக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், முத்திரைத் தீர்வை விதிக்கப்படற்பாலதாகுமாயின் சான்ருக அல்லது வேறுவகையாக பெற்றுக்கொள்ளப்படற்பாலதாதலும் வேண்டும்; அத்துடன் அது ஆரம்பத்திலேயே உரியமுறையில் முத்திரையிடப்பட்டிருந்தது என்றுற்போன்று அதன்மீது செயலாற்றப்படலாம் என்பதுடன், அது பதிவு செய்யவும்படலாம்.

ஆயினும், இப்பிரிவிலுள்ள எதுவும்—

(அ) இலங்கையில் எழுதி நிறைவேற்றப்பட்டு அல்லது முதலில் எழுதி நிறைவேற்றப்பட்டு, விடயத்திற்கேற்றுற்போன்று அதன் எழுதி நிறைவேற்றுகை அல்லது முதல் எழுதி நிறைவேற்றுகைத் தேதியிலிருந்து ஒரு மாதம் கழிந்ததன் பின்னர் அவரிடம் கொண்டுவரப்படும் ஏதேனும் சாதனத்திற்கு; அல்லது

(ஆ) இலங்கைக்கு வெளியே எழுதி நிறைவேற்றப்பட்டு அல்லது முதலில் எழுதி நிறைவேற்றப்பட்டு, அது இலங்கையில் பெறப்பட்டபின் ஒரு மாதம் கழிந்ததன் பின்னர் அவரிடம் கொண்டுவரப்படும் ஏதேனும் சாதனத்திற்கு; அல்லது

(இ) ஐம்பது சதத்தை அல்லது அதனிலும் குறைவானதை முத்திரைத் தீர்வையாக அறவிடப்படற்பாலதான ஏதேனும் சாதனத்திற்கு அல்லது உரியமுறையில் முத்திரையிடப்படாத கடதாசியில் வரையப்பட்டதன் பின்னர் அல்லது எழுதி நிறைவேற்றப்பட்டதன் பின்னர் அவரிடம் கொண்டுவரப்படும் ஏதேனும் மாற்றுண்டியலுக்கு, காசோலைக்கு அல்லது வாக்குறுதிப் பத்திரத்துக்கு.

புறக்குறிப்பிடுவதற்கு ஆணையாளருக்கு அதிகாரமளித்தலாகாது.

## அத்தியாயம் XIII

### மேன்முறையீடுகள்

### ஆணையாளர் தலைமையதிபதிக்குச் செய்யப்படும் மேன்முறையீடுகள்

40. (1) முப்பத்தெட்டாம் பிரிவின் கீழ் கொடுக்கப்பட்ட அபிப்பிராயமொன்றினல், அல்லது 30 (1) (ஆ) என்னும் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அறிவித்தலொன்றினல் சுமத்தப்பட்ட ஏதேனும் தேவைப்பாட்டினல் இன்னலுறுபவரான

ஆளெவரும், அபிப்பிராயத் தேதியின் அல்லது அறிவித்தல் தேதியின் பின்னர் முப்பது நாட்களைக்கொண்ட ஒரு காலப் பகுதிக்குள்ளாக அத்தகைய அபிப்பிராயத்திற்கு அல்லது அறிவித்தலுக்கு எதிராக ஆணையாளர் தலைமையதிபதிக்கு மேன்முறையீடு செய்யலாம்.

ஆயின், இலங்கையில் இல்லாமை காரணமாக, நோய் காரணமாக அல்லது நியாயமான வேறு காரணத்தால் மேன்முறையீட்டாளர் அத்தகைய காலப்பகுதிக்குள்ளாக மேன்முறையீடு செய்வதினின்று தடுக்கப்பட்டார் என ஆணையாளர் தலைமையதிபதி திருப்தியடைவதன்மேல், மேன்முறையீடு செய்வதற்கென கால நீடிப்பொன்றினை ஆணையாளர் தலைமையதிபதி வழங்குதல் வேண்டும்.

(2) ஒவ்வொரு மேன்முறையீடும், ஆணையாளர் தலைமையதிபதிக்கு முகவரியிடப்பட்ட எழுத்திலான மனு ஒன்றின்மூலம் செய்யப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய மேன்முறையீட்டுக்கான ஏதுக்களைத் தருதலும் வேண்டும்.

(3) ஒராம், (2) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கு இணங்கி அமையாதிருக்கும் மேன்முறையீட்டு மனு ஒவ்வொன்றும் செல்லுபடியற்றதாதல் வேண்டும்.

(4) செல்லுபடியான மேன்முறையீட்டு மனு ஒன்றினைப் பெற்றுக் கொண்டதன் மேல், ஆணையாளர் தலைமையதிபதியானவர் வரிமதிப்பீட்டாளர் ஒருவரினால் மேலும் விசாரணை நடாத்தப்படச் செய்யலாம் என்பதுடன், அத்தகைய விசாரணையின்போது மேன்முறையீட்டு மனுவில் குறித்துரைக்கப்பட்ட விடயங்கள் பற்றிய உடன்படிக்கையொன்று ஏற்படுமாயின், அதற்கிணங்க அபிப்பிராயத்தில் அல்லது அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட தொகை, திருத்தப்படுதலும்வேண்டும்.

(5) நான்காம் உட்பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்ட முறையில் மேன்முறையீட்டாளருக்கும் வரிமதிப்பீட்டாளருக்கும் இடையில் உடன்படிக்கையெதுவும் ஏற்படாதவிடத்து, ஆணையாளர் தலைமையதிபதியானவர் மேன்முறையீட்டினைக் கேட்பதற்கென நேரத்தையும் இடத்தையும் நிர்ணயித்தல் வேண்டும்.

(6) மேன்முறையீட்டாளர் ஒவ்வொருவரும் மேன்முறையீட்டைக் கேட்பதற்கென நிர்ணயிக்கப்பட்ட நேரத்திலும் இடத்திலும் ஆணையாளர் தலைமையதிபதியின் முன்னர் வருகைதருதல் வேண்டும். மேன்முறையீட்டாளர் மேன்முறையீட்டுக் கேட்பின்போது நேரிலோ அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவர் மூலமோ வருகைதரலாம். ஆணையாளர் தலைமையதிபதியானவர். காலத்துக்குக் காலம் அந்நோக்கத்துக்கென அவர் நிர்ணயிக்கக்கூடியவாறான அத்தகைய நேரத்திலும் இடத்திலும் மேன்முறையீட்டுக் கேட்பை ஒத்திவைக்கலாம். அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி ஒருவர் மேன்முறையீட்டாளர் சார்பில் வருகைதரும் ஏதேனும் விடயத்தில் ஆணையாளர் தலைமையதிபதி மேன்முறையீட்டுக் கேட்பை ஒத்திவைக்கலாம் என்பதுடன், மேன்முறையீட்டினைத் தீர்மானிப்பதற்கு மேன்முறையீட்டாளர் நேரில் வருகைதருவது அவசியமானதென அவர் கருதினால், மேன்முறையீட்டின் ஒத்திவைக்கப்பட்ட கேட்புக்கென நிர்ணயிக்கப்

பட்ட நேரத்திலும் இடத்திலும் மேன்முறையீட்டாளர் நேரில் வருகைதருதல் வேண்டுமெனத் தேவைப்படுத்தலாம். மேன்முறையீட்டாளர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி, மேன்முறையீட்டின் கேட்புக்கென அல்லது மேன்முறையீட்டின் ஒத்திவைக்கப்பட்ட கேட்புக்கென நிர்ணயிக்கப்பட்ட நேரத்திலும் இடத்திலும் வருகைதரத் தவறினுல், அல்லது மேன்முறையீட்டாளர், ஆணையாளர் தலைமையதிபதியினுல் வருகைதருதல் வேண்டும் எனத் தேவைப்படுத்தப்பட்டபோது வருகைதரத் தவறினுல், ஆணையாளர் தலைமையதிபதி மேன்முறையீட்டைத் தள்ளுபடி செய்யலாம்.

ஆயின், மேன்முறையீட்டாளர், மேன்முறையீடு ஒன்று தள்ளுபடி செய்யப்பட்டதன் பின்னர் நியாயமான காலத்துக்குள்ளாக, அவர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி இலங்கையில் இல்லாமை காரணமாக, நோய் காரணமாக அல்லது வேறு தவிர்க்க முடியாத காரணத்தினுல் அத்தகைய மேன்முறையீட்டின் கேட்புக்கு அல்லது ஒத்திவைக்கப்பட்ட கேட்புக்கு உரியமுறையில் வருகைதர முடியாமல் தடுக்கப்பட்டார் என ஆணையாளர் தலைமையதிபதியைத் திருப்திப்படுத்தினுல், ஆணையாளர் தலைமையதிபதியானவர் தள்ளுபடிக்கட்டளையை வறிதாக்குதல் வேண்டும் என்பதுடன், மேன்முறையீட்டுக் கேட்புக்கென நேரத்தையும், இடத்தையும் நிர்ணயித்தலும் வேண்டும்.

(7) ஆணையாளர் தலைமையதிபதியானவர் மேன்முறையீடு சம்பந்தமாக சான்றளிக்க இயலுமானவர் எனத் தாம் கருதும் ஆளெவரையும் தம்முன்னர் வருகைதருமாறு கட்டளைவிட்டழைப்பதற்குத் தத்துவமுடையவராதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய ஆளைச் சத்தியத்தின் மேல் அல்லது வேறுவகையாக விசாரணையும் செய்யலாம். அவ்வாறு வருகைதரும் எவரேனும் ஆளினுல் அவ்வாறு வருகைதருவதில் அவசியமாக உறுப்பட்ட எவையேனும் நியாயமான செலவுகள் அத்தகைய ஆளுக்கு ஆணையாளர் தலைமையதிபதியினுல் அனுமதிக்கப்படலாம்.

(8) ஏதேனும் மேன் முறையீட்டின் மீது தமது தீர்மானத்தைச் செய்வதற்கு முன்னர், ஆணையாளர் தலைமையதிபதியானவர் அவசியமானதெனக் கருதினுல். எவரோனுமாளுக்குக் கொடுக்கப்படும். எழுத்திலான அறிவித்தல்மூலம், அத்தகைய அறிவித்தலிற் குறித்துரைக்கப்பட்டுள்ள காலத்துள், அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்படகூடியவாறுன அவரது உடைமையிலுள்ள அத்தகைய எவையேனும் உறுதிகளை, வரைபடங்களை, இடாப்புக்களை சாதனங்களை புத்தகங்களை, கணக்குகளை, கையிருப்புப் பட்டியல்களை, காசோலைகளை, கணக்காய்வாளரின் அல்லது விலைமதிப்பாளரின் அறிக்கைகளை அல்லது வேறு ஆவணங்களை பரிசோதனைக்கென முன்வைக்குமாறு அல்லது ஆணையாளர் தலைமையதிபதிக்கு அனுப்பிவைக்குமாறு தேவைப்படுத்தலாம்.

(9) ஆணையாளர் தலைமையதிபதியானவர், மேன்முறையீடு சம்பந்தமாக மேன்முறையீட்டாளரின் அல்லது வேறு எவரேனும் ஆளின் சான்றினைக் கேட்குமிடத்து, அவர் அத்தகைய சான்று பற்றிய பதிவேடொன்றை பேணிவருதல் அல்லது பேணிவரச் செய்வித்தல் வேண்டும்.

UNIVERSITY OF MORATUWA LIBRARY KATUBEDDA

(1) இப்பிரிவின் கீழான மேன்முறையீடு ஒன்றினைத் தீர்மானிப்பதில், ஆணையாளர் தலைமையதிபதியானவர், எந்த அபிப்பிராயத்துக்கெதிராக மேன்முறையீடு செய்யப்பட்டதோ அந்த அபிப்பிராயத்தை உறுதிப்படுத்தலாம் அல்லது திருத்தலாம் அல்லது, எந்த அறிவித்தலுக்கு எதிராக மேன்முறையீடு செய்யப்படுகின்றதோ அந்த அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட தொகையை உறுதிப்படுத்தலாம், குறைக்கலாம், அதிகரிக்கலாம் அல்லது நீக்கலாம் என்பதுடன், அவர் மேன்முறையீட்டின்மீதான தமது தீர்மானம் பற்றிய எழுத்திலான அறிவித்தலை மேன்முறையீட்டாளருக்குக் கொடுத்தலும் வேண்டும்.

### மீளாய்வுச் சபைக்கு செய்யப்படும் மேன்முறையீடு

41. நாற்பதாம் பிரிவின் கீழ் ஆணையாளர் தலைமையதிபதிக்குச் செய்யப்படும் ஏதேனும் மேன்முறையீட்டின் மீது அவரால் எடுக்கப்பட்ட தீர்மானத்தினால் இன்னலுறுகின்ற ஆளெவரும் 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட மீளாய்வுச்சபைக்கு அத்தீர்மானத்திற்கெதிராக மேன்முறையீடுசெய்யலாம் என்பதுடன், அச்சட்டத்தின்கீழ் ஆணையாளர் தலைமையதிபதியின் தீர்மானத்திற்கெதிராக அத்தகைய மீளாய்வுச் சபைக்குச் செய்யப்படும் மேன்முறையீடுகள் தொடர்பிலான அச்சட்டத்தின் ஏற்பாடுகள், இப்பிரிவின் கீழ் மேன்முறையீடொன்றைச் செய்வதற்கும், கேட்பதற்கும் தீர்மானிப்பதற்கும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதலும் வேண்டும்.

42. முப்பத்தெட்டாம் பிரிவின்கீழ் கொடுக்கப்பட்ட அபிப்பிராயமொன்றுக்கு எதிராக அல்லது 30 (1) (ஆ) என்னும் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அறிவித்தலொன்றுக்கு எதிராக செல்லுபடியான மேன்முறையீடெதுவும் இச்சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட காலத்துள் செய்யப்பட்டிராதவிடத்து, அத்தகைய அபிப்பிராயத்தில் அல்லது அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டவாறான தொகை, அல்லது அத்தகைய ஏதேனும் தொகைபற்றி 40(4)ஆம் பிரிவின்கீழ் உடன்படிக்கை செய்யப்பட்டுள்ளவிடத்து அல்லது அத்தகைய ஏதேனும் தொகை மேன்முறையீட்டில் தீர்மானிக்கப்பட்டுள்ளவிடத்து, விடயத்துக்கேற்றவாறு அத்தகைய உடன்படிக்கையின் கீழ் செலுத்தப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்டவாறான தொகை அல்லது மேன்முறையீட்டின்மீது குறைக்கப்பட்டவாறான அல்லதுஅதிகரிக்கப்பட்டவாறான அல்லது உறுதிப்படுத்தப்பட்டவாறான தொகை. செலுத்தப்பட வேண்டிய தொகை சம்பந்தப்பட்ட இச்சட்டத்தின் எல்லா நோக்கங்களுக்கும் முற்றானதும் முடிபானதுமாதல் வேண்டும்.

ஆயினும், இச்சட்டத்திலுள்ள எதுவும் மேன்முறையீட்டின்மீது தீர்மானிக்கப்பட்டுள்ள ஏதேனும் கருமம் மீள ஆரம்பிக்கப்படுவதை உட்படுத்தாத வேறு ஏதேனும் தொகையைச் செலுத்தும்படி தேவைப்படுத்துவதினின்று ஆணையாளர் தலைமையதிபதியைத் தடைசெய்தல் ஆகாது.

### மேன்முறையீட்டு நிதிமன்றத்துக்கும், உயர் நீதிமன்றத்துக்கும் செய்யப்படும் மேன்முறையீடுகள்

*43. (1)* சபையின் முடிவானது முற்றுனதாதல் வேண்டும்.

ஆயின், மேன்முறையீட்டாளர் அல்லது ஆணையாளர் தலைமையதிபதியானவர் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் அபிப்பிராயத்துக்கென சட்டப்பிரச்சினை பற்றிய வாக்கொன்றை எடுத்துரைக்கும்படி சபையைத் தேவைப்படுத்தி விண்ணப்பம் ஒன்றினைச் செய்யலாம். அத்தகைய விண்ணப்பமானது சபையின் தீர்மானம் விடயத்திற்கேற்ப ஆணையாளர் தலைமையதிபதிக்கு அல்லது மேன்முறையீட்டாளருக்கு எழுத்தில் அறிவிக்கப்பட்ட தேதியிலிருந்து ஒரு மாதத்துக்குள்ளாக எழுத்திலிடப்பட்டு ஐம்பது ரூபாக் கட்டணத்துடன் சேர்த்து சபையின் செயலதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தாலன்றி ஏற்றுக் கவனிக்கப்படுதலாகாது.

*(2)* சபையினுல் எடுத்துரைக்கப்பட்ட வழக்கானது நிகழ்வுகளையும், சபையின் முடிவையும், பிணக்கிலுள்ள முத்திரைத் தீர்வை அல்லது குற்றவிறுப்பு ஐயாயிரம் ரூபாவை விஞ்சுகின்றவிடத்து அத்தகைய தொகையையும் தருதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய வழக்கினை எடுத்துரைக்குமாறு சபையினைத் தேவைப்படுத்தும் திறத்தவர், அவ்வழக்கு எடுத்துரைக்கப்பட்டு கையொப்பமிடப்பட்டவுடன் அதனைப் பெற்றுக்கொண்டபின்னர் பதினுன்கு நாட்களுக்குள் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

*(3)* (அ) இப்பிரிவின்கீழ் எடுத்துரைக்கப்பட்ட ஏதேனும் வழக்கின் மீது அல்லதுஅத்தகைய ஏதேனும் வழக்கின் கேட்பின் தீர்மானத்தின் அல்லது கையாளுதலின் இடைநேர்விளைவாக மேன் முறையீட்டு நீதிமன்றத்தின் முன்னர் இடம் பெறும் எல்லா நடவடிக்கைகளும், ஐயாயிரம் ரூபா பெறுமதியுள்ள அல்லது பிணக்கிலுள்ள முத்திரைத் தீர்வையினதும் குற்றவிறுப்பினதும் தொகையென எடுத்துரைக்கப்பட்ட வழக்கில் சபையால் எடுத்துக் காண்பிக்கப்பட்டவாறன அத்தகைய அதிகமான தொகைபெறுமதியாகவுள்ள மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் முன்னரான குடியியல் நடவடிக்கையாகக் கருதப்படுதல் வேண்டும்.

(ஆ) அவ்வாறு எடுத்துரைக்கப்பட்ட ஒவ்வொரு வழக்கும் சபையினுல் அதனேடு இணைக்கப்பட்ட புத்தகங்கள், ஆவணங்கள், பத்திரங்கள் எல்லாவற்றுடனும், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் முன்னரான குடியியல் நடவடிக்கைகளிலான தனித்தவொரு காண்பிபொருளாகக் கருதப்படுதல் வேண்டும்.

(இ) ஆணையாளர் தலைமையதிபதியானவர், அவர் மேன்முறையீட்டாளராக இருப்பின், பதவியின் பயனுக துடர்ச்சி ஒன்றில் வழக்குத் தொடரும் ஓர் அரசாங்க அலுவலராகஅல்லது மேன்முறையீட்டில் அவர் எதிர்வாதியாகஇருப்பின் பதவியின் பயனுன துடர்ச்சி ஒன்றில் தமக்கெதிராக வழக்குத் தொடரப்பெற்ற ஓர் அரசாங்க அலுவலராகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) எடுத்துரைக்கப்பட்ட வழக்கை மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு அனுப்பும்போது அல்லது அதற்குமுன்னர், அதனைத் தேவைப்படுத்துபவரான திறத்தவர் மற்றத் திறத்தவருக்கு அவரது விண்ணப்பத்தின் பேரில் வழக்கொன்று எடுத்துரைக்கப்பட்டுள்ளது என அவருக்கு அறிவிக்கும் எழுத்திலான அறிவித்தலை அனுப்பிவைத்தல் வேண்டும் என்பதுடன், எடுத்துரைக்கப்பட்ட வழக்குப் பிரதியொன்றை அவருக்கு வழங்குதலும் வேண்டும்.

(5) எடுத்துரைக்கப்பட்ட வழக்கொன்றினை மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளில் எவரேனும் இருவர் அல்லது அதற்கு அதிகமானோர், திருத்தம் செய்வதற்கெனச் சபைக்குத் திருப்பி அனுப்பச்செய்யலாம் என்பதுடன், அவ்வழக்கானது சபையினால் அதற்கிணங்கத் திருத்தப்படுதலும் வேண்டும்.

(6) மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளில் எவரேனும் இருவர் அல்லது அதற்கு அதிகமானோர், எடுத்துரைக்கப்பட்ட வழக்கில் எழுகின்ற ஏதேனும் சட்டப் பிரச்சினையைக் கேட்டுத் தீர்மானிக்கலாம் என்பதுடன், அத்தகைய பிரச்சினையின்மீதான நீதிமன்றத்தின் முடிவுக்கு இணங்க, சபையின் தீர்மானத்தை உறுதிப்படுத்தலாம், எதிர்மாறுக்கலாம், திருத்தலாம் அல்லது திரிபுபடுத்தலாம் அல்லது நீதிமன்றம் தகுந்ததெனக் கருதுகின்றவாறான அத்தகைய நியதிகளின் மீது புதிய அல்லது மேலுமொரு கேட்புக்குக் கட்டளையிடலாம் அல்லது அதன் மீதான நீதிமன்றத்தின் அபிப்பிராயத்துடன் வழக்கை சபைக்குத் திருப்பியனுப்பலாம், வழக்கொன்று, நீதிமன்றத்தினால் அவ்வாறு திருப்பியனுப்பப்படுமிடத்து, நீதிமன்றத்தின் அபிப்பிராயத்துக்கிணங்க, விடயம் தேவைப்படுத்துகின்றவாறு, சபையானது தனது முடிவை மீளாய்தல் வேண்டும்.

(7) இப்பிரிவின் கீழ் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் முன்னருள்ள நடவடிக்கைகள் எவற்றிலும், நீதிமன்றமானது, மேன்முறையீட்டு நீதிமன்ற வழக்குச் செலவுத்தொகை சம்பந்தமாகவும், (1) ஆம் உட்பிரிவின் கீழ் செலுத்தப்பட்ட பணத்தொகை சம்பந்தமாகவும் நீதிமன்றம் பொருத்தமானதெனக் கருதுகின்றவாறான அத்தகைய கட்டளையை ஆக்கலாம்.

(8) ஆறும் உட்பிரிவின் கீழான மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் கட்டளை எதற்கும் எதிராக ஆணையாளர் தலைமையதிபதியோ அல்லது வேறு எவரேனும் திறந்தவரோ உயர் நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்வதை இயலச்செய்யும் நோக்கங்களுக்காகவும், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்புகளுக்கு எதிராக உயர் நீதிமன்றன்றத்திற்கு முறையீடு செய்தல் தொடர்பில் உள்ள ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளை ஏற்புடையனவாக்கும் நோக்கத்திற்காகவும்—

(அ) மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் (6) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்டதான கட்டளையொன்று, அந்நீதிமன்றத்தினால் (7) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளை ஒன்றுடன் சேர்த்து. ஆணையாளர் தலைமையதிபதிக்கும் அத்தகைய வேறு திறத்தவருக்கும் இடையே உள்ள குடியியல் வழக்கொன்றில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் முற்றான தீர்ப்பாகக் கருதப்படுதல் வேண்டும்;

(ஆ) அத்தகைய குடியியல் வழக்கில் பிணக்கிலுள்ள விடயத்தின் பெறுமதி யானது ஐயாயிரம் ரூபாவாகக் கருதப்படுதல் வேண்டும்.

ஆயின், எடுத்துரைக்கப்பட்ட வழக்கில், பிணக்கிலுள்ள முத்திரைத் தீர்வையின் அல்லது குற்றவிறுப்பின் தொகையென ஐயாயிரம் ரூபா வுக்கு அதிகமான ஒரு தொகையைச் சபையானது எடுத்துக்காட்டி யிருக்குமிடத்து, அத்தகைய குடியியல் வழக்கில் பிணக்கிலுள்ள விட யத்தின் பெறுமதியானது, எடுத்துக் காண்பிக்கப்பட்ட அவ்வாறன உயர்ந்த தொகையாகக் கருதப்படுதல் வேண்டும்; அத்துடன்

(இ) ஆணையாளர் தலைமையதிபதிக்கு, அத்தகைய ஏதேனும் மேன்முறையீடு தொடர்பாக அத்தகைய எழுத்திலான சட்டத்தினால் விதித்துரைக்கப் பட்டதான வைப்புத் தொகையைக் கட்டுமாறு அல்லது கட்டணம் எத னையும் செலுத்துமாறு அல்லது பிணைப்பொறுப்பு எதனையும் கொடுத் துவுமாறு தேவைப்படுதலாகாது.

## அத்தியாயம் XIV
## தீர்வை அறவிடுதல்

44. இவ்வத்தியாயத்தில் "தீர்வை" என்பது முத்திரைத் தீர்வையையும் அத்தகைய ஏதேனும் தீர்வையுடன் சேர்க்கப்பட்ட ஏதேனும் பணத் தொகையை யும் அத்துடன் எவையேனும் குற்றப் பணங்கள், குற்ற விறுப்புக்கள் இச்சட்டத் தின் கீழ் உறப்பட்ட எத்தன்மையதுமான எவையேனும் கட்டணங்கள் அல்லது செலவுத் தொகைகள் என்பவற்றையும் உள்ளடக்கும்.

45. (1) முப்பதாம் பிரிவின் (1) (ஆ) என்னும் உட்பிரிவின் கீழ் வழங்கப் பட்ட ஏதேனும் அறிவித்தலினால் செலுத்தப்பட வேண்டுமெனத் தேவைப்படுத் தப்பட்ட தீர்வையானது அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட தேதி யன்று அல்லது அதற்கு முன்னர் செலுத்தப்படுதல் வேண்டும்; அத்துடன், (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, அவ்வாறு செலுத்தப்படாதிருக்கும் ஏதேனும் தீர்வை செலுத்தத் தவறியிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அத் தயை தீர்வை எந்த ஆளினால் செலுத்தப்படற்பாலனதாக இருக்கின்றதோ அந்த ஆள் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக தவறுபவராகக் கருதப்படுதலும் வேண்டும்.

(2) பதின்மூன்றும் பிரிவின்கீழ் ஒவ்வொரு காலாண்டும் செலுத்தப்படற்பால தான தீர்வையானது, அதன்கண் குறித்துரைக்கப்பட்ட தேதியன்று அல்லது அதற்குமுன் செலுத்தப்படாதிருக்குமிடத்து, அத்தகைய தீர்வை, கொடுப்பனவு செய்யப்படாத ஒவ்வொரு மாதத்திற்கும் தீர்வையின் பத்து சத வீதத்திற்குச் சமனான குற்றவிறுப்பொன்றுடன் சேர்த்து செலுத்தத் தவறியிருப்பதாகக் கருதப் படுதல் வேண்டும் என்பதுடன், தீர்வையைச் செலுத்துவதற்காளான ஆள் தவறு பவரொருவராகக் கருதப்படுதலும் வேண்டும்;

ஆயினும், குற்றவிறுப்பாக செலுத்தப்படற்பாலதான மொத்தத்தொகை செலுத்தத் தவறப்பட்டுள்ள தீர்வையின் ஐம்பது சதவீதத்தை விஞ்சுதல் ஆகாது.

(3) மேன்முறையீடு எதுவும் எவ்வாறு இருப்பினும், அத்தகைய மேன்முறையீட்டின் மீதான தீர்மானம் முடிவுறுதிருக்கையில் தீர்வையின் அல்லது அதன் ஏதேனும் பாகத்தின் கொடுப்பனவு நிறுத்திவைக்கப்படுதல் வேண்டுமென ஆணையாளர் தலைமையதிபதி கட்டளையிட்டாலன்றி, தீர்வை செலுத்தப்படுதல் வேண்டும். அத்தகைய கட்டளையின்மீது நிறுத்திவைக்கப்பட்ட தொகை செலுத்தத் தவறியதாக கருதப்படுதல் ஆகாது.

(4) மூன்றும் உட்பிரிவின் கீழ் நிறுத்திவைக்கப்பட்ட தீர்வை அல்லது அதன் ஏதேனும் பாகம் அறவிடப்பட முடியாததாகவரும் சாத்தியமுள்ளதென அல்லது மேன்முறையீட்டாளர், அவரது மேன்முறையீட்டைத் தொடருவதை நியாயமற்ற முறையில் தாமதப்படுத்துகின்றார் என ஆணையாளர் தலைமையதிபதி அபிப்பிராயப்படுகின்றவிடத்து, அவர், அவ்வுட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையை ஒழிக்கலாம் என்பதுடன், வழக்குத் தேவைப்படுத்துவதாக அவருக்குத் தோன்றுகின்றவாறான அத்தகைய புதிய கட்டளையையும் ஆக்கலாம்: அத்துடன் அப்புதிய கட்டளையில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய தேதியன்று அல்லது அதற்கு முன்னர் செலுத்தப்படாதிருக்கின்ற ஏதேனும் தீர்வையின் தொகை செலுத்தத் தவறியதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) அத்தியாயம் XIII என்பதன் கீழான மேன்முறையீடொன்று இறுதியாகத் தீர்மானிக்கப்பட்டதன் மீது அல்லது ஆணையாளர் தலைமையதிபதியினால் ஏதேனும் கட்டளை ஆக்கப்பட்டதன் மீது, (3)ஆம் உட்பிரிவின் கீழ், நிறுத்திவைக்கப்பட்டுள்ள ஏதேனும் தீர்வையானது செலுத்தப்படற்பாலதாக வருமிடத்து அல்லது அறிவித்தலொன்றின் கீழ் செலுத்தப்படற்பாலதான தீர்வை அதிகரிக்கப்படுமிடத்து, ஆணையாளர் தலைமையதிபதியானவர், ஏதேனும் தீர்வையோ அல்லது மிகுதித் தீர்வையோ எந்தத் தேதியன்று அல்லது எந்தத் தேதிக்கு முன்னர் செலுத்தப்படவேண்டுமோ அந்தத் தேதியை நிர்ணயித்து மேன்முறையீட்டாருக்கு எழுத்தில் அறிவித்தலொன்றைக் கொடுத்தல்வேண்டும். அத்தகைய தேதிக்கு முன்னர் செலுத்தப்படாத ஏதேனும் தீர்வை செலுத்தத் தவறியதாகக் கருதப்படுதல்வேண்டும்.

46. செலுத்தத் தவறியதான ஏதேனும் தீர்வை, செலுத்தத் தவறுபவரின் எல்லாச் சொத்துக்களின் மீதும் ஒரு முதற்பொறுப்பாதல் வேண்டும்; ஆயின்—

(i) 48ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க, சொத்தினைக் கைப்பற்றுவதற்கு முன்னராக பெறுமதி கொடுத்த நன்னோக்கு கொள்வனைக்காரருக்கு தீர்வை செலுத்தத் தவறியவரினால் விற்கப்பட்ட சொத்துக்களுக்கு அத்தகைய பொறுப்பானது விரிவுபடுத்தப்படுதலோ அல்லது அவற்றைப் பாதிப்பதாதலோ ஆகாது; அத்துடன்

(ii) அசைவற்ற ஆதனம் தொடர்பில் செலுத்தத் தவறியிருக்கும் தொகையானது, பெறுமதி கொடுத்து நன்னேக்குடன் உருவாக்கப்பட்டதும், அத்தகைய கைப்பற்றுகைத், தேதிக்கு முன்னர் பதிவு செய்யப்பட்டதுமான குத்தகை அல்லது பாரபந்தம் எதற்கும் முந்துரிமை பெற்றிருத்தல் ஆகாது.

47. (1) ஏதேனும் தீர்வை செலுத்தத் தவறியதாகவுள்ளவிடத்து, ஆணையாளர் தலைமையதிபதி, இதனகத்துப்பின்னர் ஏற்பாடு செய்யப்பட்ட ஏதேனும் முறையில் அத்தகைய தீர்வையை அறவிட முற்படு முன்னர்—

(அ) அத்தகைய தீர்வையின் விவரங்களையும்; அத்துடன்

(ஆ) அத்தகைய தீர்வையை அறவிடுவதற்கென நடவடிக்கை எடுக்கும் எண்ணம் உள்ளதென்றும்

குறிப்பிட்டு, தவறுபவருக்கு எழுத்தில் அறிவித்தலொன்றை வழங்குதல்வேண்டும்.

(2) அத்தகைய தவறுபவர், 30 (1) (ஆ) என்னும் பிரிவின் கீழான ஏதேனும் அறிவித்தலுக்கெதிராக தகுந்த நேரத்துக்குள்ளாக மேன்முறையீடு செய்யாது விட்டிருந்தால், இப்பிரிவினது (1)ஆம் உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அறிவித்தற் தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள்,அவ்வாறு விதிக்கப்பட்ட தீர்வைக்கு எதிராக ஆட்சேபனை எதனையும் செய்யலாம் என்பதுடன், ஆணையாளர் தலைமையதிபதியானவர், 42ஆம் பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், அத்தகைய ஆட்சேபனைகளை சீர்தூக்கிப் பார்த்தலும், அதன் மீதான அவரது முடிபைக் கொடுத்தலும் வேண்டும்; அத்துடன் அம்முடிவு முற்றானதாதலும் வேண்டும்.

(3) இப்பிரிவிலுள்ள எது எவ்வாறிருப்பினும், 30 (1)(ஆ) என்னும் பிரிவின் கீழான அறிவித்தலொன்றுக்கு எதிராக மேன்முறையீடொன்று செய்யப்பட்டு அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் தீர்வையின் கொடுப்பனவு ஆணையாளர் தலைமையதிபதியின் கட்டளையின்மீது நிறுத்திவைக்கப்பட்டுள்ளவிடத்து, அந்த மேன்முறையீட்டு கேட்பின்போது மேன்முறையீட்டாளர் அந்த அறிக்கை தொடர்பில் குறித்தவொரு பணத்தொகை தீர்வையாகப்போமதியாகவுள்ளதென அல்லது போதிமதியாகும் சாத்தியமுள்ளதென உடன்படுவாராயின், ஆணையாளர் தலைமையதிபதி, மேன்முறையீட்டாளருக்கு எழுத்தில் வழங்கும் அறிவித்தலின்மூலம் அத்தயை பணத்தொகையை அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டுள்ள அத்தகைய தேதியன்று அல்லது அதற்கு முன்னர் செலுத்துமாறு மேன்முறையீட்டாளரை பணிக்கலாம். அத்தகைய தேதிக்கு முன்னர் செலுத்தப்படாத ஏதேனும் பணத்தொகை செலுத்தத் தவறியதாக கருதப்படுதல்வேண்டும்.

(4) அத்தியாயம் XIIIஇன் கீழான மேன்முறையீட்டொன்றினது இறுதித் தீர்மானத்தின் மீது செலுத்தத் தவறிய ஏதேனும் முத்திரைத் தீர்வை குறைக்கப்படுமிடத்து, அத்தகைய முத்திரைத் தீர்வை தொடர்பில் செலுத்தப்படற்பாலதான குற்றவிறுப்பு விகிதாசாரப்படி குறைக்கப்படுதல்வேண்டும்.

48, (1) இச்சட்டத்தின் நோக்கங்களுக்கென முத்திரைத் தீர்வைச் சேகரிப்பாளர்கள் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(2) (அ) ஏதேனும் தீர்வை செலுத்தத் தவறியதாக இருக்குமிடத்து, ஆணையாளர் தலைமையதிபதியானவர், அத்தகைய தீர்வை பற்றிய விவரங்களும் தவறுபவரின் பெயரும் அடங்கிய சான்றிதழொன்றை ஓர் அரசாங்க அதிபருக்கு, உதவி அரசாங்க அதிபருக்கு, பிசுக்காலுக்கு, பிரதிப் பிசுக்காலுக்கு அல்லது முத்திரைத் தீர்வைச் சேகரிப்பாளருக்கு வழங்கலாம். அத்துடன் அத்தகைய சான்றிதழ் எந்த அலுவலருக்கு வழங்கப்பட்டதோ அந்த அலுவலர் அச்சான்றிதழில் பெயர் குறிக்கப்பட்டுள்ள தவறுபவரிடமிருந்து, அவருடைய அசைவுள்ள ஆதனத்தைக் கைப்பற்றி விற்பனை செய்வதன்மூலம் அத்தீர்வையை அறவிடச் செய்வதற்கு இத்தால் தத்துவம் பெறுகின்றார் என்பதுடன், தேவைப்படுத்தவும் படுகின்றார்.

(ஆ) அசைவுள்ள ஆதனத்தின் கைப்பற்றுகையானது, அத்தகைய அலுவலர் அது தொடர்பாக மிக உகந்ததெனக் கருதுகின்றவாறான அத்தகைய முறையில் பயனுறுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன், அசைவுள்ள ஆதனம் எதுவும் அத்தகைய அலுவலரினால் கைப்பற்றப்பட்டவுடன் உடனடியாக அத்தகைய ஆதனத்தின் நிரலொன்று தயாரிக்கப்பட்டு, அவரால் கையொப்பமிடப்பட்டு, தவறுபவருக்குக் கொடுக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், அதன் பிரதியொன்று ஆணையாளர் தலைமையதிபதிக்குக் கொடுத்துதவப்படுதலும் வேண்டும்.

(இ) அவ்வாறு கைப்பற்றப்பட்ட ஆதனம்—

(i) இலங்கை நாணயத்திலான காசாக இருக்குமிடத்து, அத்தகைய காசு, செலுத்தத் தவறியுள்ள தீர்வையைக் கொடுத்துத் தீர்ப்பதற்குப் பயன்படுத்தப்படுதல் வேண்டும்;

(ii) வெளிநாட்டு நாணயத்திலான காசாக இருக்குமிடத்து, அத்தகைய காசு மத்திய வங்கியில் வைப்பிலிடப்படுதல் வேண்டும் என்பதுடன், அதிலிருந்து பெறப்படும் வருவாய்கள் செலுத்தத் தவறியுள்ள தீர்வையைக் கொடுத்துத் தீர்ப்பதற்குப் பயன்படுத்தப்படுதலும் வேண்டும்;

(iii) காசு தவிர்ந்த வேறு ஆதனமாக இருக்குமிடத்து, அத்தகைய ஆதனம் தவறுபவரது செலவுகளிலும் கட்டணங்களிலும் ஐந்து நாட்களுக்கு வைத்திருக்கப்படுதல் வேண்டும். தவறுபவர் அந்த ஐந்து நாட்களுக்குள்ளாகச் செலுத்தத் தவறிய தீர்வையைச் செலவுகளுடனும் கட்டணங்களுடனும் சேர்த்துச் செலுத்தாவிடில், அரசாங்க அதிபர். உதவி அரசாங்க அதிபர், பிசுக்கால், பிரதிப் பிசுக்கால் அல்லது முத்திரைத்தீர்வைச்சேகரிப்பாளர் அத்தகைய ஆதனத்தைப் பகிரங்க ஏல விற்பனை மூலம் விற்கச் செய்தல் வேண்டும் அல்லது அத்தகைய ஆதனம் உரிபெயர்தகுசாதனமொன்றாகவோ அல்லது ஏதேனும் கூட்டுத்தாபனத்திலுள்ள அல்லது பகிரங்கக் கம்பெனியிலுள்ள ஒரு பங்காகவோ இருக்குமிடத்து, அதனை அந்நாளன்றுள்ள சந்தைவீதப்படி தரகர் ஒருவர் மூலமாக விற்கச் செய்வித்தல் வேண்டும்.

(ஈ) உட்பந்தி (iii) இல் குறிப்பீடு செய்யப்பட்ட விற்பனையின் மூலம் தேறிப் பெறப்பட்ட பணத்தொகை—

(i) முதலாவதாக, அவ்வாதனத்தைக் கைப்பற்றுவதற்கான, வைத்திருப்ப தற்கான, விற்பனை செய்வதற்கான செலவுகளையும் கட்டணங்களையும் செலுத்துவதற்கும்; அத்துடன்

(ii) இரண்டாவதாக, செலுத்தத் தவறிய தீர்வையைக் கொடுத்துத் தீர்ப் பதற்கும்

பயன்படுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன், ஏதேனும் மீதி, கைப்பற்றப்பட்ட ஆதனத்தின் சொந்தக்காரருக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

(3) ஏதேனும் தீர்வை செலுத்தத் தவறியிருக்குமிடத்தும் அத்துடன், (2) ஆம் உட்பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்ட வழிமுறையில் அதனை அறவிடுதல் செயற்படுத்தப்படற்பாலதல்லவென அல்லது உகந்ததல்லதென ஆணையாளர் தலைமையதிபதி அபிப்பிராயப்படுமிடத்தும், அவர், அத்தகைய தீர்வை பற்றிய விவரங்களும் அத்தீர்வை எந்த ஆளினால், அல்லது ஆட்களினால் செலுத்தப்படற் பாலதோ அந்த ஆளின் அல்லது ஆட்களின் பெயரும் அல்லது பெயர்களும் அடங்கிய சான்றிதழொன்றை, தவறுபவர் வதிகின்ற அல்லது தவறுபவருக்குச் சொந்தமான அசைவுள்ள அல்லது அசைவற்ற ஏதேனும் ஆதனம் அமைந்திருக் கின்ற ஏதேனும் மாவட்டத்தில் நியாயாதிக்கம் கொண்டுள்ள மாவட்ட நீதி மன்றமொன்றிற்கு வழங்கலாம்; அத்துடன் அதன்மேல் அந்நீதிமன்றமானது, தவறுபவரின் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் எல்லாவற்றையும் அல் லது எதனையும் அல்லது தீர்வையை அறவிடுவதற்கு அவசியமானதென அவர் கருதுகின்றவாறான அதன் அத்தகைய பாகத்தைக் கைப்பற்றி விற்பனை செய்வ தற்கு அதிகாரமளித்தும், தேவைப்படுத்தியும் நிறைவேற்றெழுத்தாணையொன் றைப் பிசுக்காலுக்கு வழங்குவதற்குப் பணித்தல் வேண்டும் என்பதுடன், அத் தகைய கைப்பற்றுகைக்கும் விற்பனைக்கும் குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக் கோவையின் 226 முதல் 297 வரையிலான பிரிவுகளினது ஏற்பாடுகள் ஏற்றமாற் றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) ஆணையாளர் தலைமையதிபதியானவர் இப்பிரிவின்கீழ் சான்றிதழொன்றை வழங்கும்போதெல்லாம், அதுபற்றிய அறிவிப்பொன்றினை, நேரில் சேர்ப்பிப்பதன் மூலம் அல்லது அஞ்சலில் அனுப்பப்படும் பதிவுக் கடிதத்தின் மூலம் அல்லது தந்திமூலம் தவறுபவருக்கு, அவர் வதிவுள்ளவராயினுஞ் சரி, வதிவற்றவராயி னுஞ் சரி, உடனடியாக வழங்குதல் வேண்டும்; ஆயினும், அத்தகைய அறிவிப்பு தவறுபவருக்குக் கிடைக்கவில்லை என்பதற்காக இச்சட்டத்தின் கீழான நடவடிக் கைகள் செல்லுபடியற்றனவாதல் ஆகாது.

49. (1) ஏதேனும் விடயத்தில், செலுத்தத் தவறிய தீர்வையை, கைப்பற்று கையின் மூலமும் விற்பனையின் மூலமும் அறவிடுவது செயற்படுத்தப்படற்பால

தல்ல அல்லது உகந்ததல்ல என ஆணையாளர் தலைமையதிபதி அபிப்பிராயப்படுமிடத்து அல்லது கைப்பற்றுகையின் மூலமும் விற்பனையின் மூலமும் முழுத் தீர்வையும் அறவிடப்பட்டிராதவிடத்து, அவர் அத்தகைய தீர்வை பற்றிய விபரங்களும் தவறுபவரின் பெயர், அவர் கடைசியாக வதிந்து வந்ததாக அறியப்படும் இடம் என்பன பற்றிய விபரங்களும் அடங்கிய சான்றிதழொன்றை அத்தகைய இடம் அமைத்துள்ள பிரிவில் நியாயாதிக்கம் கொண்டுள்ள நீதிவானொருவருக்கு வழங்கலாம்.

அதன்மேல் அந்நீதிவான், தீர்வையை அறவிடுவதற்கென தவறுபவருக்கெதிராக ஏன் மேலும் நடவடிக்கைகள் எடுக்கப்படக் கூடாதென்பதற்குக் காரணம் காண்பிக்குமாறு கோரி அத்தவறுபவரைத் தம்முன் கட்டளைவிட்டழைத்தல் வேண்டும் என்பதுடன், அவர் போதிய காரணம் காட்டத் தவறும் பட்சத்தில் செலுத்தத்தவறிய தீர்வையானது. குற்றப்பணத்தினால் மட்டு தண்டிக்கப்படற்பாலதான அல்லது மறியற்றண்டனையினால் தண்டிக்கப்படற்பாலதல்லாத தவறொன்க்கு அத்தகைய தவறுபவரின் மீது நீதிவானின் தண்டனைத் தீர்ப்பினால் விதிக்கப்பட்ட ஒரு குற்றப்பணமாகக் கருதப்படுதல் வேண்டும். அத்துடன் அத்தகைய தவறுக்காக விதிக்கப்பட்ட குற்றப்பணமொன்றின் கொடுப்பனவைச் செலுத்தத் தவறுதலின் தொடர்பில். 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 291 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் [அதன் (அ), (ஈ), (ஐ) என்னும் பந்திகள் தவிர்ந்த] ஏற்பாடுகள் அதன்மீது ஏற்புடையனவாதல் வேண்டும்; அத்துடன் நீதிவான் அத்தகைய தண்டனைத் தீர்ப்பை விதிக்கும் நேரத்தில் அவ்வுட் பிரிவினது ஏற்பாடுகளின் மூலம் அவர் விடுத்திருக்கக் கூடிய பணிப்பு எதனையும் விடுக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக ஆணையாளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றிலுள்ள ஏதேனும் கூற்றின் செம்மை, இப்பிரிவின் கீழான எவையேனும் நடவடிக்கைகளின்போது நீதிவானால் கேள்விக்குட்படுத்தப்படுதலோ பரிசீலனை செய்யப்படுதலோ ஆகாது; அத்துடன் அதற்கிணங்க, அவ்வுட்பிரிவிலுள்ள எதுவும் அத்தகைய சான்றிதழிலுள்ள ஏதேனும் கூற்றின் செம்மையைச் சீர்தூக்கிப் பார்ப்பதற்கு அல்லது தீர்மானிப்பதற்கு அல்லது செலுத்தத் தவறியுள்ள தீர்வையின் கொடுப்பனவைத் தேவைப்படுத்தும் ஏதேனும் அறிவித்தலுக்கெதிராக மேன்முறையீடொன்று முடிவுறாதிருக்கின்றது என்ற நிகழ்வின் காரணத்தினால் மட்டும் அத்தகைய நடவடிக்கைகளை முப்பது நாட்களை விஞ்சுமொரு காலப் பகுதிக்கு ஒத்தி வைப்பதற்கு அல்லது பின்போடுவதற்கு நீதிவானுக்கு அதிகாரமளிப்பதாக வாசித்துப் பொருள் கொள்ளப்படுதல் ஆகாது.

(3) 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 291ஆம் பிரிவினது (2) முதல் (5) வரையிலான உட்பிரிவுகளிலுள்ள எதுவும், இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்படும் ஏதேனும் விடயத்தில் ஏற்புடையதாதல் ஆகாது.

(4) தவறுபவர் மீது விதிக்கப்பட்டதென (1) ஆம் உட்பிரிவினுல் கருதப்பட்டதான குற்றப்பணக் கொடுப்பனவை செலுத்தத் தவறியமைக்கு தவறுபவருக்கு மறியற்றண்டனைத்தீர்ப்பு அளிக்கப்படுகின்றதும், அவ்வுட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்படுகின்றதுமான ஏதேனும் விடயத்தில் நீதிவான், அக்குற்றப்பணத் தொகையைச் செலுத்துவதற்கான கால அவகாசத்தை அனுமதிக்காலாம் அல்லது அத்தொகை தவணை அடிப்படையில் கொடுப்பனவு செய்யப்படவேண்டுமெனப் பணிக்கலாம்.

(5) ஒராம் உட்பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு அதன்கீழ் காரணம் காட்டுதற்கு அல்லது (4) ஆம் உட்பிரிவின் கீழ் குற்றப்பணக் கொடுப்பனவிற்கு கால அவகாசம் அளிப்பதற்கான முன் நிபந்தனையாகப் பிணை கொடுக்கப்பட வேண்டுமென நீதிமன்றம் தேவைப்படுத்தலாம்; அத்துடன் தவறுபவர் அவ்வாறு பிணை கொடுக்கவேண்டுமெனத் தேவைப்படுத்தப்படுமிடத்து, 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின், அத்தியாயம் XXXIV என்பதன் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(6) கொடுப்பனவொன்று தவணை அடிப்படையில் செலுத்தப்பட வேண்டுமென (4) ஆம் உட்பிரிவின் கீழ் நீதிவானெருவர் பணிக்குமிடத்தும், அத்துடன் ஏதேனும் ஒரு தவணைப்பணக் கொடுப்பனவு தவணை தவறுமிடத்தும், அப்போது செலுத்தப்படாமல் எஞ்சியிருக்கும் எல்லாத் தவணைப் பணங்களினதும் கொடுப்பனவு தவணை தவறப்பட்டுள்ளது என்றாற்போன்று நடவடிக்கைகள் எடுக்கப்படலாம்.

(7) ஒராம் உட்பிரிவின் கீழான எவையேனும் நடவடிக்கைகளில் தீர்வை செலுத்தப்பட வேண்டுமென உரியமுறையில் தேவைப்படுத்தப்பட்டுள்ளது என்பதற்கும். அது தவணை தவறியுள்ளது என்பதற்கும் ஆணையாளர் தலைமையதிபதியின் சான்றிதழ் போதிய சான்றாதல் வேண்டும் என்பதுடன், தொகை மிகையானது. செம்மையற்றது அல்லது மேன்முறையீட்டின் கீழுள்ள என்னும் வழக்குரையெதுவும் ஏற்றுக் கவனிக்கப்படுதலுமாகாது.

50. (1) எவரேனும் ஆளினுல் செலுத்தப்படற்பாலதான தீர்வை செலுத்தத் தவறியிருக்குமிடத்தும் அத்துடன், எவரேனும் ஆள் —

(அ) தவறுபவருக்கு அல்லது அவரது முகவருக்குப் பணம் செலுத்த வேண்டியுள்ளாரென அல்லது செலுத்துவுள்ளாரென; அல்லது

(ஆ) தவறுபவருக்காக அல்லது அவரது முகவருக்காக அல்லது தவறுபவரின் அல்லது அவரது முகவரின் நிமித்தம் பணம் வைத்திருக்கின்றாரென:

(இ) தவறுபவருக்கு அல்லது அவரது முகவருக்காக கொடுப்பனவு செய்வதற்காக வேறெவரேனும் ஆளின் நிமித்தம் பணம் வைத்திருக்கின்றாரென; அல்லது

(ஈ) தவறுபவருக்கு அல்லது அவரது முகவருக்குப் பணம் செலுத்துவதற்காக வேறெவரேனும் ஆளிடமிருந்து அதிகாரம் பெற்றுள்ளாரென

நம்புவதற்கிடமுண்டு என ஆணையாளர் தலைமையதிபதிக்குத் தோன்றுமிடத்தும், அறிவித்தலில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலருக்குச் செலுத்தத் தவறிய தீர்வையின் தொகையை விஞ்சாத அத்தகைய எவையேனும் பணங்களைச் செலுத்துமாறு அத்தகைய ஆளைத் தேவைப்படுத்தும் எழுத்திலான அறிவித்தலொன்றை (அதன் பிரதியொன்று தவறுபவருக்கு அஞ்சலில் அனுப்பப்படுதல் வேண்டும்) ஆணையாளர் தலைமையதிபதி அவ்வாளுக்கு வழங்கலாம். அவ்வறிவித்தலானது, அத்தகைய அறிவித்தல் கிடைக்கப்பெறும் தேதியில் அவரிடமுள்ள அல்லது அவரிடமிருந்து வருமதியாகவுள்ள அல்லது அத்தகைய அறிவித்தல் கிடைக்கப்பெற்ற தேதியின் பின்னர் மூன்று மாத காலப்பகுதிக்குள்ளாக எக்காலத்திலேனும் அவருக்குக் கிடைத்துள்ள, அல்லது அவரிடமிருந்து வருமதியாகியுள்ள அல்லது அவரால் செலுத்தப்படவுள்ள அத்தகைய எல்லாப் பணங்களுக்கும் ஏற்புடையதாதல் வேண்டும்.

(2) இப்பிரிவைப் பின்பற்றி ஏதேனும் கொடுப்பனவைச் செய்துள்ள எவரேனும் ஆள், தவறுபவரினதும் சம்பந்தப்பட்ட வேறு எல்லா ஆட்களினதும் அதிகாரத்தின் கீழ் செயலாற்றியுள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், எழுத்திலான ஏதேனும் சட்டத்தின், ஒப்பந்தத்தின் அல்லது உடன்படிக்கையின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், அத்தகைய கொடுப்பனவு தொடர்பாக எல்லாக் குடியியல் அல்லது குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளுக்கு எதிராகவும் இத்தால் நட்டோத்தரவாதம் அளிக்கவும்படுகின்றார்.

(3) ஒராம் உட்பிரிவின் கீழ் அறிவித்தல் கொடுக்கப்பட்டு, அவ்வுட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட பணங்கள் அவருக்குக் கிடைக்காத காரணத்தினால் அல்லது அத்தகைய பணங்கள் எதுவும் அவ்வுட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட அக்காலப் பகுதிக்குள்ளாக அவரிடமிருந்து வருமதியாகாத காரணத்தினால் அவ்வறிவித்தலுக்கு இணங்கியொழுக இயலாதிருக்கும் ஆளெவரும் அது முடிவடைந்த பின்னர் பதினான்கு நாட்களுக்குள்ளாக அந்நிகழ்வுபற்றி ஆணையாளர் தலைமையதிபதிக்குத் தெரிவித்து எழுத்திலான அறிவித்தல் கொடுத்தல் வேண்டும்.

(4) ஒராம் உட்பிரிவின் கீழ் எந்த ஆளுக்கு அறிவித்தலொன்று வழங்கப்பட்டதோ அந்த ஆள் அதற்கு இணங்கியொழுக இயலாதவராக இருப்பதுடன், (3)ஆம் உட்பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு ஆணையாளர் தலைமையதிபதிக்கு அறிவித்தல் கொடுக்கவும் தவறியுள்ளவிடத்து, அல்லது அத்தகைய ஆள் அவ்வறித்தல் தொடர்புறுத்தும் தீர்வையை அல்லது அதன் ஏதேனும் பாகத்தைச் தெலுத்தக்கூடியவராயிருந்தும், (1)ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள காலப்பகுதி முடிவடைந்ததன் பின்னர் பதினான்கு நாட்களுக்குள், ஆணையாளர் தலைமையதிபதியால் கொடுக்கப்பட்ட அறிவித்தலினால் தேவைப்படுத்தப்பட்டவாறு அத்தகைய தீர்வையை அல்லது அதன் ஏதேனும் பாகத்தைச் செலுத்தியில்லாதவிடத்தும், அத்தகைய ஆள் தனியாள் ஒருவராக விருப்பின் அத்தகைய தனியாள், அல்லது அத்தகைய ஆள், கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படா கம்பெனியொன்றாக அல்லது ஆட்கள் குழுவொன்றாக இருப்

பின் அத்தகைய கம்பெனியின் அல்லது குழுவின் செயலாளர், முகாமையாளர் அல்லது வேறு பிரதான அலுவலர் அவ்வாளினால் செலுத்தப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட தீர்வை முழுவதற்கும் தாமே பொறுப்புடையவராதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய தீர்வை, விடயத்துக்கு ஏற்றவாறு, அத்தகைய தனியாளிடமிருந்து, செயலாளரிடமிருந்து, முகாமையாளரிடமிருந்து அல்லது வேறு பிரதான அலுவலரிடமிருந்து, இச்சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட எல்லா வழிமுறைகளாலும் அறவிடவும்படலாம்.

(5) இப்பிரிவின் நோக்கங்களுக்காக "தவறுபவர்" என்னுஞ் சொல்லமைப்பு செலுத்தத் தவறிய ஆளொருவரின் முகவரையும் உள்ளடக்குவதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், இப்பிரிவின் ஏற்பாடுகள், எவரேனும் ஆள் உயிருடனிருந்திருப்பின் அவரால் செலுத்தப்படற்பாலதாக இருந்திருக்கக் கூடிய, செலுத்தத் தவறிய தீர்வையின் ஏதேனும் விடயத்தில் ஏற்புடையதாதலும் அத்துடன் அத்தகைய ஏதேனும் விடயத்தில் அவ்வேற்பாடுகளினது ஏற்புடைமையின் நோக்கங்களுக்கென (1) ஆம் உட்பிரிவில் "தவறுபவர்" என்னும் சொல்லமைப்பு—

(அ) இறந்த ஆளொருவரின் மரணசாதன நிறைவேற்றுநர் அல்லது மரணச் சொத்து நிருவாகி; அல்லது

(ஆ) இறந்த ஆளொருவரின் ஆதனத்தை உடைமையில் எடுக்கின்ற அல்லது அவ்வாதனத்தில் தலையிடுகின்ற எவரேனும் ஆள்; அல்லது

(இ) இறந்த ஆளொருவரது மரணச்சொத்து தொடர்பாக மரண சாதன தத்துவப்பத்திரம் அல்லது மரணச்சொத்து நிருவாகத் தத்துவப்பத்திரம் வழங்குவதற்காக அல்லது மீள இலச்சினையிடப் பெறுவதற்காக ஒரு மாவட்ட நீதிமன்றத்திற்கு விண்ணப்பித்திருக்கின்ற அல்லது விண்ணப்பிப்பதற்கு உரித்துடைய எவரேனும் ஆள்,

எனப் பொருளாகும்.

51. (1) எவரேனும் ஆள், அவரால் செலுத்தப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட தீர்வையின் தொகையைச் செலுத்தாமல் இலங்கையை விட்டுச் செல்ல இருக்கின்றார் அல்லது செல்லக்கூடிய சாத்தியம் உள்ளது என ஆணையாளர் தலைமையதிபதி அபிப்பிராயப்படுகின்றவிடத்து, அவர் அத்தகைய தொகையும் அத்தகைய ஆளின் பெயரும் பற்றிய விபரங்களடங்கிய சான்றிதழொன்றை நீதிவானொருவருக்கு வழங்கலாம். நீதிவான், அதனைப் பெற்றுக்கொண்டதன் பேரில், அத்தகைய ஆள் அத்தொகையைச் செலுத்தாமல் அல்லது அதன் கொடுப்பனவுக்கு ஆணையாளர் தலைமையதிபதி திருப்தியுறும்வகையில் பிணைப் பொறுப்பு வழங்காமல் இலங்கையை விட்டுச்செல்வதைத் தடைசெய்யுமாறு பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியைப் பணித்தல் வேண்டும்.

(2) ஆணையாளர் தலைமையதிபதியானவர், அவரது சான்றிதழை நீதிவானுக்கு வழங்கும் நேரத்தில் அதனைப் பற்றிய அறிவிப்பொன்றை, நேரடியாகச் சேர்ப்

பிப்பதன் மூலம் அல்லது அஞ்சலில் அனுப்பப்படும் பதிவுத் தபால்மூலம் அல்லது தந்திமூலம் 'அத்தகைய ஆளுக்கு வழங்குதல் வேண்டும்; ஆனால் அத்தகைய அறிவிப்பு எதுவும் அத்தகைய ஆளுக்குக் கிடைக்கப் பெறுமையானது இச்சட்டத்தின் கீழான நடவடிக்கைகளை செல்லுபடியற்றனவாக்குதல் ஆகாது.

(3) தொகை செலுத்தப்பட்டுள்ளதென அல்லது பிணைப்பொறுப்புக்கொடுத்துதவப்பட்டுள்ளதென அல்லது அத்தொகை பொலிசு நிலையமொன்றிக்குப் பொறுப்பாயுள்ள பொலிசு அலுவலரொருவருக்குச் செலுத்தப்பட்டுள்ளதெனக் கூறுகின்றதும் ஆணையாளர் தலைமையதிபதியினால் கையொப்பமிடப்பட்டதுமான சான்றிதலொன்றை முன்வைத்தானது, அத்தகைய ஆளை இலங்கையை விட்டுச் செல்ல அனுமதிப்பதற்குப் போதுமான அதிகாரமாதல் வேண்டும். ஏதேனும் தீர்வைத் தொகை எந்தப் பொலிசு அலுவலருக்குச் செலுத்தப்பட்டதோ அந்தப் பொலிசு அலுவலர் எவரும் அத்தகைய தொகையை உடனடியாக ஆணையாளர் தலைமையதிபதிக்குச் செலுத்துதல் வேண்டும்.

52, இவ்வத்தியாயத்தின் ஏற்பாடுகளுள் எவற்றினதும் ஏற்புடைமையானது இச்சட்டத்தின் கீழ் எவரேனும் ஆளிடமிருந்து வருமதியான தீர்வை முழுவதினதும் அல்லது அதன் ஏதேனும் பகுதியினதும் கொடுப்பனவை உறுதிப்படுத்துவதற்கு தவறிவிட்டது அல்லது தவறும் சாத்தியம் கொண்டுள்ளது என ஆணையாளர் தலைமையதிபதி அபிப்பிராயப்படுமிடத்து, 49 ஆம் பிரிவின் கீழ் நீதிவானொருவரால் கட்டளையொன்று ஆக்கப்பட்டுப் பயனுறுத்தப்பட்டுள்ளதென்பது எவ்வாறிருப்பினும், செலுத்தப்படாது எஞ்சியிருக்கும் ஏதேனும் பணத்தொகையை இவ்வத்தியாயத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வேறு ஏதேனும் அறவீட்டு வழிமுறைகளில் அறவிட முற்படுதல் ஆணையாளர் தலைமையதிபதிக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

53. ஆணையாளர் தலைமையதிபதியானவர், எவரேனும் ஆளுக்கு எழுத்தில் வழங்கப்படும் அறிவித்தலின் மூலம், அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட காலத்திற்குள்ளாக. அத்தகைய ஆளிடமிருந்து அல்லது வேறு எவரேனும் ஆளிடமிருந்து வருமதியாகவுள்ள ஏதேனும் தீர்வையை அறவிடும் நோக்கங்களுக்கு ஆணையாளர் தலைமையதிபதி தேவைப்படுத்தக் கூடியதான அத்தகைய தகவலைக் கொடுத்துதவுமாறு அவ்வாளைத் தேவைப்படுத்தலாம்.

## அத்தியாயம் XV

## முத்திரைகளுக்கான விடுபாடுகளும், முத்திரைத் தீர்வையின் மீளக்கொடுப்பனவும்

54. (1) ஆணையாளர் தலைமையதிபதியானவர், (2) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட காலத்துக்குள் அவருக்கு எழுத்தில் செய்யப்படும் விண்ணப்பமொன்றின் மீதும், நிகழ்வுகளைப் பற்றித் திருப்தியுறுவதன் மீதும், பின்வரும் சந்தர்ப்பங்களில், பயன்படுத்தப்படாத அல்லது பழுதாக்கப்பட்ட முத்திரைகளுக்கு விடுபாடொன்றை வழங்கலாம்—

(அ) முத்திரையொன்று எந்த நோக்கத்துக்குப் பயன்படுத்தப்படுவதற்கென முன்னப்பட்டதோ அந்த நோக்கத்திற்கு உகந்ததல்லாதவகையில் தவறுதலாக அல்லது உள்நோக்கமின்றிப் பழுதாக்கப்பட்டுள்ளவிடத்து;

(ஆ) பூரணமற்ற அல்லது எழுதி நிறைவேற்றப்பட்டில்லாத அல்லது வறிதாக்கப்பட்ட அல்லது தவறுதல் ஒன்றின் காரணமாக முன்னப்பட்ட நோக்கத்திற்கு உகந்ததல்லாத சாதனமொன்றுக்கு முத்திரை ஒன்று ஒட்டப்பட்டுள்ளவிடத்து; அல்லது

(இ) சாதனமொன்றுக்கு தவறுதலாக அல்லது உள்நோக்கம் இல்லாமல் பிழையான விவரணத்தை அல்லது பெறுமதியைக்கொண்ட முத்திரையொன்று ஒட்டப்பட்டிருந்து, அதனையடுத்து முறைப்படி முத்திரையொட்டப்பட்ட சாதனமொன்றினால் மாற்றீடு செய்யப்பட்டுள்ள விடத்து; அல்லது

(ஈ) எத்தன்மையானதுமான ஏதேனும் முறையில் பயன்படுத்தப்பட்டிராத ஒரு மாற்றுண்டியலுக்கு, காசோலைக்கு அல்லது வாக்குறுதிப் பத்திரத்திற்கு முத்திரையொன்று பயன்படுத்தப்பட்டுள்ளவிடத்து

(2) ஓராம் உட்பிரிவின் கீழான விடுபாட்டுக்கான விண்ணப்பம் பயன்படுத்தப்படாத அல்லது பழுதாக்கப்பட்ட முத்திரைகள் கொள்வனவு செய்யப்பட்ட தேதியிலிருந்து ஓராண்டிற்குள் செய்யப்படுதல் வேண்டும்.

(3) ஆணையாளர் தலைமையதிபதி, (1)ஆம் உட்பிரிவின்கீழ் விடுபாடொன்றிற்கான விண்ணப்பமொன்றின்மீது, ஒன்றில் விண்ணப்பக்காரருக்கு அதே விவரணத்தையும் பெறுமதியையும் கொண்ட வேறு முத்திரைகளை அன்றேல் அம்முத்திரைகளின் பெறுமதியைப் பணத்தில் கொடுக்கலாம்; அத்துடன் அவர் முத்திரைகளின் பெறுமதியைப் பணத்தில் கொடுக்குமிடத்து ஒவ்வொரு ரூபாவுக்கும் அல்லது ஒரு ரூபாவின் பின்னத்திற்கும் ஐந்து சதத்தைக் கழித்தல்வேண்டும்.

55. ஆளெவரும் அவரால் தக்கவாறு செலுத்தப்படற்பாலதான தொகையைவிட மிகையாக ஏதேனும் முத்திரைத் தீர்வையை அல்லது குற்றவிறுப்பைச் செலுத்தியுள்ளாரென இசைவிணக்கம் மூலமோ வேறுவகையிலோ செய்யப்பட்டதான ஏதேனும் முத்திரைத் தீர்வையின் அல்லது குற்றவிறுப்பின் கொடுப்பனவுத் தேதியிலிருந்து ஓராண்டிற்குள் எழுத்தில் முறைப்படி செய்யப்பட்ட உரிமைக்கோரிக்கையினால் ஆணையாளர் தலைமையதிபதி திருப்தியுறும் வகையில் எண்பிக்கப்படுமாயின், அத்தகைய ஆள் அவ்வாறு மிகையாகச் செலுத்தப்பட்ட தொகையை மீளப்பெறுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்;

ஆயின், இப்பிரிவிலுள்ள எதுவும், வேறேதேனும் பிரிவில் குறித்துரைக்கப் பட்டுள்ள மேன்முறையீட்டிற்கான அல்லது மீளக்கொடுப்பனவுக்கான ஏதேனும் காலவரையறையை நீடிப்பதற்கு அல்லது குறைப்பதற்கு அல்லது வேறுவகையில் செல்லுபடியற்றதாகவுள்ள ஏதேனும் ஆட்சேபனையை அல்லது மேன்முறை

யீட்டைச் செல்லுபடியுள்ளதாக்குவதற்கு அல்லது இறுதியானதும் முடிவானதுமான ஏதேனும் விடயத்தை மீளாய்வு செய்வதற்கான அதிகாரமளிப்பதற்கு தொழிற்படுத்தப்படுதலாகாது.

## அத்தியாயம் XVI
## தவறுகளும் தண்டங்களும்

56. (1) சாட்சிக்காரரொருவராக அல்லாது வேறுவகையில், ஏதேனும் மாற்றுண்டியலை, காசோலையை அல்லது வாக்குறுதிப் பத்திரத்தை, அதற்கு உரியமுறையில் முத்திரையிடாமல் வரைகின்ற, ஆக்குகின்ற, வழங்குகின்ற, புறக்குறிப்பிடுகின்ற, கைமாற்றுகின்ற அல்லது கையொப்பமிடுகின்ற ஆளெவரும், அல்லது ஏற்றுக்கொள்ளலுக்கென அல்லது மீளக் கொடுப்பனவுக்கென அதனைச் சமர்ப்பிக்கின்ற அல்லது ஏற்றுக்கொள்ளுகின்ற, செலுத்துகின்ற அல்லது அதற்கான கொடுப்பனவைப் பெறுகின்ற அல்லது ஏதேனும் முறையில் உரிபெயர்த்தளிக்கின்ற; அல்லது

(2) தீர்வை விதிக்கப்படற்பாலதான ஏதேனும் சாதனத்தை, அதற்கு உரியமுறையில் முத்திரையிடாமல், சாட்சிக்காரரொருவராகவல்லாது வேறுவகையில் எழுதி நிறைவேற்றுகின்ற; அல்லது

(3) ஒட்டு முத்திரையொன்றை 7ஆம் பிரிவினுல் விதித்துரைக்கப்பட்ட முறையில் பொறித்தழிக்கத் தவறுகின்ற; அல்லது.

(4) இருபத்துமூன்றும் பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணுக, பற்றுச் சீட்டொன்றைக் கொடுக்கத் தவறுகின்ற அல்லது அசட்டை செய்கின்ற: அல்லது

(5) உரியமுறையில் முத்திரையிடப்படாத ஏதேனும் பதிலியின்கீழ் வாக்களிக்கின்ற அல்லது வாக்களிக்க எத்தனிக்கின்ற.

ஆளெவரும், இச்சட்டத்தின்கீழ் தவறென்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவானெருவர் முன்னர், சுருக்கமுறை விளக்கத்தின்பின் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் ஐந்நூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

57. கம்பெனியொன்று, பங்குச் சான்றிதழொன்றை அல்லது எழுத்தாணையொன்றை உரியமுறையில் முத்திரையிடாமல் வழங்குகின்றவிடத்து அக்கம்பெனியும் அத்தகைய பங்குச் சான்றிதழ் அல்லது எழுத்தாணை வழங்கப்பட்ட நேரத்தில், கம்பெனியின் முகாமைப் பணிப்பாளராக அல்லது செயலாளராக அல்லது வேறு பிரதான அலுவலராக இருந்த ஒவ்வோராளும், இச்சட்டத்தின் கீழ் தவறென்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவானெருவர் முன்னர், சுருக்கமுறை விளக்கத்தின் பின் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் ஐயாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கு அல்லது ஆறு மாதங்

களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

58. இருபத்திரண்டாம் பிரிவினால் தம்மீது சுமத்தப்பட்ட ஏதேனும் தேவைப்பாட்டிற்கு மனதறிய இணங்கியொழுகத் தவறுகின்ற பிரசித்த நொத்தாரிசு எவரும் இச்சட்டத்தின் கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவானொருவர் முன்னர் சுருங்கமுறை விளக்கத்தின் பின் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன் மேல், எந்தச் சாதனம் தொடர்பில் தவறு புரியப்பட்டுள்ளதோ அந்தச் சாதனத்திற்குச் செலுத்தப்படற்பாலதான முத்திரைத் தீர்வையை விஞ்சாதவொரு குற்றப்பணத்திற்கும், ஐயாயிரம் ரூபாவிற்கும் அல்லது ஆறு மாதங்களுக்களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு இருவகையிலொரு வகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகை குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்

59. (அ) ஏதேனும் சாதனத்தில் தரப்படவேண்டுமென 22 (1) ஆம் பிரிவினால் தேவைப்படுத்தப்பட்ட எல்லா நிகழ்வுகளும் சூழ்நிலைகளும் முழுமையாகத் தரப்படாமல், அரசை மோசடிசெய்யும் முன்னத்துடன் அத்தகைய சாதனத்தை வரைகின்ற, அத்தாட்சிப் படுத்துகின்ற, அல்லது எழுதி நிறைவேற்றுகின்ற.

(ஆ) தாம் எழுதிநிறைவேற்றிய, மெய்யென்றுறுதிப்படுத்திய அல்லது அத்தாட்சிப் படுத்திய ஏதேனும் சாதனத்தின்மீது முத்திரைத்தீர்வையின் கொப்பனவுக்கான ஏதேனும் பணத்தொகையைப் பெற்றுக் கொண்டு அப்பணத்தை முத்திரைத் தீர்வையின் கொடுப்பனவுக்குப் பயன்படுத்தாமல் அதனையோ, அதன் ஏதேனும் பாகத்தையோ தகாதமுறையில் பிடித்துவைத்திருக்கின்ற அல்லது தடுத்துவைத்திருக்கின்ற அல்லது

(இ) ஏதேனும் சாதனத்தை எழுதிநிறைவேற்றுகையில், மெய்யென்றுறுதிப்படுத்துகையில் அல்லது அத்தாட்சிப்படுத்துகையில் உண்மையல்லாத அல்லது முன்னர் பயன்படுத்தப்பட்ட ஏதேனும் முத்திரையை ஒட்டுகின்ற அல்லது பொறித்தழிக்கின்ற; அல்லது

(ஈ) இச்சட்டத்தின்கீழ் ஏதேனும் தீர்வை அல்லது குற்றவிறுப்பு அரசுக்குக் கிடைக்காமற் செய்வதற்கென கணிக்கப்பட்ட வேறு ஏதேனும் செயலைப் புரிகின்ற: அல்லது

(உ) தம்மீது 27 (2) ஆம் பிரிவின் கீழ் ஆணையாளர் தலைமையதிபதியினால் சுமத்தப்பட்ட ஏதேனும் தேவைப்பாட்டிற்கு இணங்கியொழுகத் தவறுகின்ற;

(ஊ) ஆணையாளர் தலைமையதிபதிக்கு 27 (4)ஆம்பிரிவினால்அளிக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகிக்கையில் ஆணையாளர் தலைமையதிபதியை எதிர்க்கின்ற அல்லது அவருக்கு முட்டுக்கட்டையிடுகின்ற.

ஆளெவரும் இச்சட்டத்தின் கீழ் தவறென்றுக்குள் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவானெருவர் முன்னர் சுருக்கமுறை விளக்கத்தின் பின் குற்றத் தீரப்பளிக்கப்படுவதன்மேல்—

(i) உட்பிரிவு (ஆ) என்பதன் கீழான தவறென்றின் விடயத்தில், அத்தகைய ஆளினல் பிடித்துவைக்கப்பட்ட அல்லது தடுத்துவைக்கப்பட்ட முத்திரைத் தீர்வையின் தொகைக்குச் சமமான பணத் தொகையொன்றும், ஐயாயிரம் ரூபாவை விஞ்சாத தொகையொன்றும் அடங்கிய குற்றப் பணமொன்றுக்கு;

(ii) உட்பிரிவு (இ) என்பதன் கீழான தவறென்றின் விடயத்தில், அத்தகைய ஆளினல் ஒட்டப்பட்ட அல்லது பொறித்தழிக்கப்பட்ட முத்திரைத் தொகையின் பத்து மடங்கிற்கு சமமான பணத் தொகையொன்றும், ஐயாயிரம் ரூபாவை விஞ்சாத தொகையொன்றும் அடங்கிய குற்றப் பணமொன்றுக்கு;

(iii) உட்பிரிவு (அ), அல்லது (ஈ) அல்லது (உ) அல்லது (ஊ) என்பதன்கீழான தவறென்றின் விடயத்தில், ஐயாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப் பணத்திற்கு ;

அல்லது ஒவ்வொரு விடயத்திலும் ஆறு மாதங்களை விஞ்சாதவொரு காலப் பகுதிக்கு இருவகையிலொருவகையான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதல் வேண்டும்.

இவ்வத்தியாயத்தின் கீழான ஏதேனும் தவறு தொடர்பில் எவரேனும் ஆளுக்கெதிராக குற்றவழக்கொன்று தொடருதலானது, அல்லது அத்தகைய ஏதேனும் தவறு தொடர்பில் எவரேனும் ஆளின் மீது குற்றவிறுப்பொன்றை, குற்றப்பணமொன்றை அல்லது மறியற்றண்டனையை விதித்தலானது, இச்சட்டத்தின்கீழ் அத்தகைய ஆளினல் உறப்பட்டுள்ள அல்லது உறப்படக் கூடிய ஏதேனும் முத்திரைத் தீர்வையை அல்லது குற்றவிறுப்பைச் செலுத்தவேண்டிய ஏதேனும் பொறுப்பிலிருந்து அவரை விடுத்தலாகாது.

61. இச்சட்டத்தின் கீழான ஏதேனும் தவறு தொடர்பில் குற்றவழக்கெதுவும் ஆணையாளர் தலைமையதிபதியின் சம்மதமின்றித் தொடரப்படுதலாகாது.

62. ஆணையாளர் தலைமையதிபதியானவர், தவறு புரியப்பட்ட சூழ்நிலைகளைக் கருத்திற்கொண்டு, இச்சட்டத்தின் கீழான தவறு எதனையும் இணங்கித் தீர்க்கலாம் என்பதுடன், தீர்ப்பிற்கு முன்னர் அதன் கீழான எவையேனும் நடவடிக்கைகளை நிறுத்திவைக்கலாம் அல்லது இணக்கித் தீர்க்கலாம்.

## அத்தியாயம் XVII

## நிருவாகம்

63. (1) ஆணையாளர் தலைமையதிபதி இச்சட்டத்தின் நிருவாகத்துக்குப் பொறுப்பாவிருத்தல் வேண்டும்.

*(2)* இச்சட்டத்தினுல் ஆணையாளர் தலைமையதிபதிக்கு அளிக்கப்பட்ட அல்லது அவர்மீது சுமத்தப்பட்ட அல்லது அவருக்குக் குறித்தொதுக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியைப் பிரயோகிப்பதற்கு, புரிவதற்கு அல்லது நிறைவேற்றுவதற்கு ஆணையாளர் தலைமையதிபதி, வரி மதிப்பீட்டாளரொருவருக்கு அதிகாரமளிக்கலாம்.

*(3)* இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டினுல் ஆணையாளர் தலைமையதிபதிக்கு அளிக்கப்பட்ட அல்லது அவர்மீது சுமத்தப்பட்ட அல்லது அவருக்குக் குறித்தொதுக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியைப் பிரயோகிக்கின்ற, புரிகின்ற அல்லது நிறைவேற்றுகின்ற வரிமதிப்பீட்டாளர் ஒருவர், முரணுனது எண்பிக்கப்படும்வரை எல்லா நோக்கங்களுக்கும் அத்தத்துவத்தை, கடமையை அல்லது பணியைப் பிரயோகிப்பதற்கு, புரிவதற்கு, அல்லது நிறைவேற்றுவதற்கு அதிகாரமளிக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) இச்சட்டத்தினுல் வரிமதிப்பீட்டாளர் ஒருவருக்கு அளிக்கப்பட்ட அவர்மீது சுமத்தப்பட்ட அல்லது அவருக்குக் குறித்தொதுக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியை உண்ணுட்டரசிறை ஆணையாளரொருவர் அல்லது உண்ணுட்டரசிறைப் பிரதி ஆணையாளரொருவர் பிரயோகிக்கலாம். புரியலாம் அல்லது நிறைவேற்றலாம்.

## அத்தியாயம் XVIII
## பொது

*64.* *(1)* இச்சட்டத்தின் கீழ் ஆணையாளர் தலைமையதிபதியால் அல்லது வரிமதிப்பீட்டாளர் ஒருவரினுல் வழங்கப்படவேண்டிய அறிவித்தல் ஒவ்வொன்றும் விடயத்திற்கேற்றவாறு, ஆணையாளர் தலைமையதிபதியின் அல்லது வரிமதிப்பீட்டாளரின் பெயரைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அதன்மீது ஆணையாளர் தலைமையதிபதியின் அல்லது வரிமதிப்பீட்டாளரின் பெயர் உரியமுறையில் அச்சிடப்பட்டிருப்பின் அல்லது ஒப்பமிடப்பட்டிருப்பின் அத்தகைய அறிவித்தல் ஒவ்வொன்றும் செல்லுபடியுடையனவாதலும் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் பயன் கொண்டு வழங்கப்படும் அறிவித்தல் ஒவ்வொன்றும் ஆளொருவருக்கு நேரடியாக அல்லது கடைசியாக அறியப்பட்ட அவரது வதிவிடத்திற்காவது அல்லது அவர் தொழில் கொண்டு நடாத்துகின்ற அல்லது கொண்டு நடாத்திய ஏதேனும் இடத்திற்காவது ஒப்படைப்பதன் மூலம் அல்லது அஞ்சலில் அனுப்புவதன் மூலம் சேர்ப்பிக்கப்படலாம்.

*(3)* அஞ்சலில் அனுப்பப்பட்ட அறிவித்தல் எதுவும் சாதாரண நெறியில் அஞ்சல் மூலம் அது எந்தநாளில் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்குமோ அந்த நாளை அடுத்துவரும் நாளன்று சேர்ப்பிக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) அஞ்சல்மூலம் சேர்ப்பிக்கப்பட்டதை எண்பிக்கையில், அறிவித்தலை உள்ளடக்கிய கடிதம் உரியமுறையில் முகவரியிடப்பட்டு அஞ்சலிலிடப்பட்டதென் பதனை எண்பிப்பது போதுமானதாதல் வேண்டும்,

(5) இச்சட்டத்தின் நோக்கங்களுக்கென கொடுக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட ஏதேனும் அறிவித்தலின் மீது அச்சிடப்பட்டிருப்பதும் அல்லது ஒப்பமிடப்பட்டிருப்பதும் அல்லது ஏதேனும் சான்றிதழ்மீது ஒப்பமிடப்பட்டிருப்பதும் அதனைக் கொடுப்பதற்கு அல்லது வழங்குவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட ஆளின் பெயராகக் கொள்ளப்பட்டதுமான பெயர் ஒவ்வொன்றும் நீதிமுறைக் கவனத்துக்குட்பட்டதாதல் வேண்டும்.

(6) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கியிருப்பதாகக் கொள்ளப்பட்ட அறிவித்தல் சான்றிதழ் அல்லது வேறு நடவடிக்கை எதுவும் பொருளிலும் பயனிலும் அது இச்சட்டத்திற்கு அமைவானதாக அல்லது இச்சட்டத்தின் முன்னத்துக்கும் கருத்துக்கும் இணங்கியதாக இருப்பின் அத்துடன் அத்தகைய அறிவித்தல் அல்லது சான்றிதழ் எந்த ஆளுக்குக் கொடுக்கப்படுகின்றதோ அல்லது கொடுக்கப்பட வேண்டுமென முன்னப்பட்டதோ அந்த ஆள் அல்லது அதனால் பாதிக்கப்பட்ட ஆள், பொது முன்னத்துக்கும் உய்த்துணரலுக்கும் இணங்க அதில் பதவிப் பெயர் குறிப்பிட்டிருப்பின் படிவம் இல்லையென்ற காரணத்திற்காக நீக்கப்படுதல் அல்லது வறிதானதாக அல்லது வறிதாக்கப்படற்பாலது எனக் கருதப்படுதல் ஆகாது, அல்லது அதனகத்துள்ள தவறொன்றின், குறைபாடொன்றின் அல்லது ஏதேனும் விட்டுவிடுகையின் காரணமாகப் பாதிக்கப்படுதல் ஆகாது.

(7) ஆறும் உட்பிரிவின் பொதுமைக்கும் பங்கமின்றி, ஓர் அறிவித்தலானது விதிக்கப்படுவதற்கு முன்னப்பட்ட ஆளிடம் உரியமுறையில் சேர்ப்பிக்கப்பட்டிருப்பின் தொகை விதிக்கப்படற்பாலதான ஆளின் பெயர் அல்லது குடும்பப் பெயர் தொடர்பாக அதனகத்துள்ள தவறொன்றின் காரணத்தினால் அவ்வறிவித்தலில் குறை காணப்படுதலோ அல்லது அது பாதிக்கப்படுதலோ ஆகாது.

65. இச்சட்டத்தின் கீழ் எவரேனும் ஆளின்மீது சுமத்தப்படவுள்ள ஏதேனும் குற்றவிறுப்புத் தொகை தொடர்பில் ஆணையாளர் தலைமையதிபதிக்கு அல்லது வரி மதிப்பீட்டாளர் ஒருவருக்கு ஏதேனும் தற்றுணிபு அளிக்கப்பட்டுள்ளவிடத்து அக்குற்றவிறுப்பு உறப்பட்ட எல்லாச்சூழ்நிலைகளையும் கவனத்திற்கெடுத்த தன் பின்னர், விடயத்திற்கேற்றவாறு ஆணையாளர் தலைமையதிபதியினால் அல்லது வரிமதிப்பீட்டாளரால் அத்தகைய தற்றுணிபு பிரயோகிக்கப்படுதல் வேண்டும்.

66. (1) சாதனமொன்றின் தொடர்பில் எவரேனும் ஆளினால் ஏதேனும் முத்திரைத் தீர்வை அல்லது குற்றவிறுப்பு செலுத்தப்பட்டிருந்து அத்துடன் உடன்படிக்கையின் மூலம் அல்லது இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அல்லது வேறு ஏதேனும் சட்டவாக்கத்தின்கீழ் வேறோர் ஆள் அத்தகைய சாதனம் தொடர்பில் முத்திரைத் தீர்வை செலுத்துவதற்காளாயிருந்

திருப்பாராயின், முதலிற் குறிப்பிடப்பட்ட ஆள், அவ்விதம் செலுத்தப்பட்ட தீர்வைத் தொகையை அல்லது குற்றப்பணத்தை அத்தகைய வேறு ஆளிடமிருந்து மீட்டுப் பெறுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(2) அத்தகைய மீட்டுப்பெறுதலின் நோக்கங்களுக்கென, அச்சாதனம் தொடர்பிலான முத்திரைத் தீர்வை, சான்றிதழில் குறித்துரைக்கப்பட்ட ஆளினுல் செலுத்தப்பட்டுள்ளதென ஆணையாளர் தலைமையதிபதியின் கைப்பட வழங்கப்பட்ட சான்றிதழொன்று அதன்கண் குறித்துரைக்கப்பட்ட கருமங்கள் பற்றிய முடிவான சாற்றுதல் வேண்டும்.

67. (1) அமைச்சரானவர், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளையின் மூலம், கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட விவரணத்திலான முத்திரைகள் கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட சாதனங்களில் முத்திரையிடுவதற்கெனப் பயன்படுத்தப்படுதல் வேண்டுமெனத் தேவைப்படுத்தலாம் என்பதுடன், அத்தகைய சாதனங்களின் மீது முத்திரைத் தீர்வையின் கொடுப்பனவுக்கென அந்த விவரணத்திலான முத்திரைகள் அல்லாத வேறு முத்திரைகளைப் பயன்படுத்துவது ஆளெவருக்கும் சட்ட முறையானதாதல் ஆகாது.

(2) முத்திரைக் கட்டளைச் சட்டத்தின் 6ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்டதும் இச்சட்டம் தொடங்கும் தேதியன்று வலுவிலுள்ளதுமான விதி ஒவ்வொன்றும் (1)ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்ருகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) ஏதேனும் நாட்டின் தொடர்பில் இலங்கை அரசாங்கத்தினுல் அல்லது அதன் சார்பில், அல்லது அதற்குச் சாதகமாக எழுதி நிறைவேற்றப்படும் ஏதேனும் சாதனத்தின் விடயத்தில், அந்த நாட்டில் முத்திரைத் தீர்வையெதுவும் விதிக்கப்படற்பாலதல்ல என அமைச்சரானவர் திருப்திப்படுவதன்பேரில், 15ஆம் பிரிவின் 13ஆம் பந்தியில் அளிக்கப்படும் விலக்களிப்பு, அந்த நாட்டின் அரசாங்கத்தினுல் அல்லது அதன் சார்பில் அல்லது அதற்குச் சாதகமாக எழுதி நிறைவேற்றப்படும் ஒத்த சாதனமொன்றிற்கு நிற்புடையதாதல் வேண்டும் என அமைச்சர் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளையினுல் வெளிப்படுத்தலாம்.

68. (இருநூற்றுநாற்பத்தேழாம் அத்தியாயமான) முத்திரைச் கட்டளைச்சட்டமானது, நியமித்த தேதியன்று அல்லது அதற்குப்பின்னர் எழுதி நிறைவேற்றப்படும் எவையேனும் சாதனங்களுக்கு ஏற்புடையதாதல் ஆகாது.

69. (1) அமைச்சரானவர், பின்வரும் கருமங்கள் எல்லாவற்றினதும் தொடர்பில் அல்லது அவற்றுள் எவையேனும் தொடர்பில் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்:-

(அ) விதித்துரைக்கப்பட வேண்டுமென இச்சட்டத்தால் தேவைப்படுத்தப்பட்ட அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் கருமம்;

(ஆ) எந்தச் சாதனங்கள் தொடர்பில் முத்திரைத் தீர்வையானது பொறித்திட்ட முத்திரைகளின் வழியாகச் செலுத்தப்படற்பாலதாகலாமோ அந்தச் சாதனங்கள்.

(2) இப்பிரிவின்கீழ் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும், அது கசெற்றில் வெளியிடப்படும் தேதியன்று அல்லது ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக் கூடிய வாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதல்வேண்டும்.

(3) இப்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் கசெற்றில் வெளியிடப்பட்டபின்னர் வசதியானளவு விரைவாக அங்கீகாரத்துக்கெனப் பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத அத்தகைய ஏதேனும் ஒழுங்குவிதி அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து,ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி ஒழிக்கப்பட்டு விட்டதாகக் கருதப்படுதல் வேண்டும். ஒழுங்குவிதியொன்று ஒழிக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்பட்ட தேதி பற்றிய அறிவிப்பு கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

70. (1) (நூற்று இருபத்தாறும் அத்தியாயமான) கூட்டுறவு மொத்த விற்பனைத் தாபனச் சட்டத்தின் 39ஆம் பிரிவு, அப்பிரிவின் (அ) என்னும் பந்தியை நீக்கஞ் செய்வதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

(2) 1972ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க, கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 35ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(அ) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியை நீக்கஞ் செய்வதன் மூலமும்; அத்துடன்

(ஆ) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கஞ் செய்வதன் மூலமும்

(3) 1961ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க, மக்கள் வங்கிச் சட்டத்தின் 41ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்படுகின்றது.

71, இச்சட்டத்தில், சந்தருப்பம் வேறுவிதமாகத் தேவைப்படுத்தினாலன்றி—

''ஒட்டு முத்திரை'' என்பது, ஒட்டக்கூடியதும் அது தொடர்பில் 67 (1) ஆம் கீழான கட்டளையொன்று வலுவிலிருக்கின்றதுமான முத்திரை என்று பொருள்படும் ;

''அங்கீகரிக்கப்பட்ட நாணய முகவராண்மை'' என்பது, ஈட்டுச் சட்டத்தின் 3ஆம் பிரிவில் வரைவிலக்கணம் கூறப்பட்டவாறான அங்கீகரிக்கப்பட்ட நாணய முகவராண்மை ஒன்று என்று பொருள்படும்:

“வரி மதிப்பீட்டாளர்'' என்பது, 1979ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் நோக்கங்களுக்கென நியமிக்கப்பட்ட உண்ணாட்டரசிறை வரிமதிப்பீட்டாளர் ஒருவர் என்று பொருள்படும் என்பதுடன் அச்சட்டத்தின் நோக்கங்களுக்கென நியமிக்கப்பட்ட உண்ணாட்டரசிறை சிரேட்ட வரிமதிப்பீட்டாளர் ஒருவரையும் உள்ளடக்கும்;

''அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி'' என்பது—

(1) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக ஆளொருவரின் சார்பில் செயலாற்ற வென அவ்வாளினுல் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்டவரும்-

(அ) ஏதேனும் விடயத்தில் —

(i) இலங்கை வரைவுபெற்ற கணக்காளர் நிறுவகத்தின் உறுப் பினர் ஒருவராக இருக்கின்றவரும்;

(ii) ஆணையாளர் தலைமையதிபதியினுல் அங்கீகரிக்கப்பட்ட கணக்காளர் ஒருவராக இருக்கின்றவரும்;

(iii) சட்டத்தரணி ஒருவராக இருக்கின்றவரும், அல்லது

(iv) அவ்வாளினுல் கிரமமாகத் தொழிலுக்கமர்த்தப்பட்ட ஊழியர் ஒருவராக இருக்கின்றவரும்

(ஆ) தனியாள் ஒருவரின் விடயத்தில், உறவினர் ஒருவராக இருக் கின்றவரும்;

(இ) கம்பெனியொன்றின் விடயத்தில், அக்கம்பெனியின் பணிப்பாள ரொருவராக அல்லது செயலாளராக இருக்கின்றவரும்;

(ஈ) பங்காண்மையொன்றின் விடயத்தில், அப்பங்காண்மையின் பங் காளர் ஒருவராக இருக்கின்றவரும்;

(உ) ஆட்கள் குழு ஒன்றின் விடயத்தில், அக்குழுவின் உறுப்பின ரொருவராக இருக்கின்றவரும்,

ஆன எவரேனும் தனியாள் என்று; அல்லது

(2) கம்பெனிகள் (கணக்காய்வாளர்கள்) ஒழுங்குவிதிகளின்கீழ் ஒரு கணக்காய் வாளராகப் பதிவுசெய்யப்பட்ட தனியாள் ஒருவராகவும் ஆணை யாளர் தலைமைதிபதியினுல் அங்கீகரிக்கப்பட்டவராகவும், அதிகார மளிக்கும் பத்திரத்தில் குறித்துரைக்கப்பட்டவாறுன அத்தகைய கரு மங்கள் தொடர்பில் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக ஆளொருவர் சார்பில் செயலாற்றவென அவ்வாளினுல்காலத்துக்குக்காலம் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்டவராகவும் இருக்கின்ற, எவரேனும் தனியாள் என்று பொருள்படும்.

''வங்கித்தொழில் நிறுவனம்'' என்பது, பணச் சட்டத்தில் உள்ளவாறுன அதே பொருளைக் கொண்டிருக்கும்;

''மாற்றுண்டியல்'' என்பது, மாற்றுண்டியல்கள் கட்டளைச் சட்டத்தினுல் வரைவிலக்கணம் கூறப்பட்டுள்ளவாறுன மாற்றுண்டியலொன்று அல் லது வேறு எவரேனும் ஆளினுல் ஏதேனும் பணத்தொகையின் கொடுப்பனவுக்கு அல்லது ஏதேனும் பணத்தொகைக்கென வேறு எவ ரேனும் ஆளின் மீது வரைவதற்கு எவரேனும் ஆளுக்கு (வேறு ஏதேனும் ஆவணத்தில் அவரது பெயர் குறிப்பிடப்பட்டதாயி னுஞ்சரி அல்லாவிடினுஞ்சரி) உரித்தளிக்கின்ற அல்லது உரித்தளிப்

பதாகக் கொள்ளப்படுகின்ற அந்த ஏதேனும் ஆவனம் எனப் பொருள் படும்;

''கோரப்பட்டவுடன் செலுத்தப்படற்பாலதான மாற்றுண்டியல்'' என்பது:-

(அ) ஒரு மாற்றுண்டியல் மூலம் அல்லது வாக்குறுதிப் பத்திரம் மூலம் ஏதேனும் பணத்தொகையின் கொடுப்பனவிற்கான அல்லது ஏதேனும் பணத்தொகையைத் தீர்ப்பதற்கு ஏதேனும் மாற்றுண்டியலை அல்லது வாக்குறுதிப் பத்திரத்தை ஒப்படைப்பதற்கான அல்லது கிடைக்கக் கூடிய அல்லது கிடைக்கக்கூடியதல்லாத ஏதேனும் பணத்தொகையின் கொடுப்பனவுக்கான அல்லது புரியப்படக்கூடியதல்லாத அல்லது நிகழக் கூடியதல்லாத ஏதேனும் நிபந்தனையின் அல்லது எதிர்பாராத சம்பவத்தின் மீதான கட்டளையொன்றையும், அத்துடன்

(ஆ) வாரந்தோறும் அல்லது மாதம்தோறும் அல்லது வேறு ஏதேனும் குறிப்பிடப்பட்ட காலங்களில் ஏதேனும் பணத்தொகையின் கொடுப்பனவுக்கான கட்டளையொன்றையும்,

உள்ளடக்கும்;

''ஏற்று பொருட்பட்டியல்'' என்பது, ''நேரடி ஏற்று பொருட்பட்டியல்'' ஒன்றையும் உள்ளடக்கும்; ஆனால் கப்பலின் துணைத் தலைவரின் பற்றுச்சீட்டை உள்ளடக்கமாட்டாது;

''தரகரின் குறிப்பு'' என்பது, ஏதேனும் பொருட்களை, கையிருப்பை, பங்கை, தொகுதிக் கடனை அல்லது சந்தைப்படுத்தற்பாலதான பிணைப் பொறுப்பை, தரகர் ஒருவரின் அல்லது முகவர் ஒருவரினது முதல்வரது கணக்கில் விற்பனை செய்வது அல்லது கொள்வனவு செய்வது பற்றி அவருக்கு அறிவுறித்தி (அத்தகைய முதல்வர், முதல்வரொருவருக்குத் தரகராக அல்லது முகவராகச் செயலாற்றுகின்றவிடத்தன்றி) அத்தகைய தரகரால் அல்லது முகவரால் அவரது முதல்வருக்கு அனுப்படும் குறிப்பு என்று பொருள்படும்;

''விதிக்கப்படற்பாலது'' என்பது, இச்சட்டம் தொடங்கிய தேதிக்குப் பின்னர் எழுதி நிறைவேற்றப்பட்ட அல்லது முதன் முதலாக எழுதி நிறைவேற்றப்பட்ட சாதனமொன்றின் தொடர்பில் இச்சட்டத்தின் கீழ் முத்திரைத் தீர்வை விதிக்கப்படற்பாலது என்று பொருள்படும்;

''காசோலை'' என்பது குறித்துரைக்கப்பட்ட வங்கியொன்றில் வரையப்பட்டதும், கோரப்பட்டதன்மீதல்லாது வேறுவகையில்செலுத்தப்படற்பாலது என எடுத்தியம்பாததுமான ஒரு மாற்றுண்டியல்என்று பொருள்படும்;

''ஆணையாளர் தலைமையதிபதி'' என்பது, 1979ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் நோக்கங்களுக்கென நியமிக்கப்பட்ட

உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதி என்று பொருள்படும் என்பதுடன், அச்சட்டத்தின் நோக்கங்களுக்கென நியமிக்கப்பட்டவரும், பொதுவாகவாயினுஞ்சரி, குறித்துரைக்கப்பட்ட ஒரு நோக்கத்துக்காகவாயினுஞ்சரி ஆணையாளர் தலைமையதிபதியினுல் அவர் சார்பில் செயலாற்றவென அதிகாரமளிக்கப்பட்டவருமான உண்ணாட்டரசிறை ஆணையாளர் ஒருவரையும் அல்லது உண்ணாட்டரசிறைப் பிரதி ஆணையாளர் ஒருவரையும் உள்ளடக்கும்;

''கம்பெனி'' என்பது, இலங்கையில் அல்லது வேறிடத்தில் வலுவிலிருக்கும் ஏதேனும் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது பதிவுசெய்யப்பட்ட ஏதேனும் கம்பெனி என்று பொருள்படும் என்பதுடன், பகிரங்கக் கூட்டுத்தாபனம் ஒன்றையும் உள்ளடக்கும்;

''உரித்துமாற்றம்'' என்பது, விற்பனையின் மீதான உரித்துமாற்றத்தையும் அத்துடன் எந்தச் சாதனத்தின்மூலம் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் அல்லது ஏதேனும் ஆதனத்திலுள்ள அக்கறை எதுவும் கைமாற்றப்படுகின்றதோ அந்த ஆதனம் ஒவ்வொன்றையும் உள்ளடக்கும்;

''புரிவெட்டி'' என்பது, சாதனமொன்றின் தொடர்பில் ஏதேனும் முத்திரைத் தீர்வை அல்லது குற்றவிறுப்பு செலுத்தப்பட்டுள்ளது என்ற நிகழ்வை அல்லது சாதனம் உரியமுறையில் முத்திரையிடப்பட்டுள்ளது என்ற நிகழ்வை அல்லது முத்திரைத்தீர்வை எதுவும் விதிக்கப்படற்பாலதல்ல என்னும் நிகழ்வை எடுத்தியம்புவதற்கென அல்லது குறித்துக்காட்டுவதற்கென ஆணையாளர் தலைமையதிபதியின் பணிப்பின்கீழ் பயன்படுத்தப்படும் ஏதேனும் தகட்டினத்தை, ஆயுதத்தை, கருவியை அல்லது அதன் ஒரு பாகத்தை உள்ளடக்கும்;

''ஆவணம்'' என்பது ஏதேனும் நீதிமன்றத்தில் சட்ட நடவடிக்கைகள் தொடர்பில் ஒரு சட்டத்தரணியின் நியமனத்தை, பிராதை, மறுமொழியை, பதிலுரையை அல்லது வேறு வழக்குரையை, மனுவை, விண்ணப்பத்தை, சத்தியக் கடுதாசியை, நியமனத்தை, அழைப்புக் கட்டளையை, தீர்ப்பை, தீர்வையை, ஏதேனும் விவரணத்திலான கட்டளையை, நடுத்தீர்ப்பை, ஆணையை, எழுத்தாணையை, பொருட்பதிவேட்டை, கணக்கை, விதிப்பாணையை, முறியை அல்லது பிணைமுறியை உள்ளடக்கும்;

''உரியமுறையில் முத்திரையிடப்பட்டது'' என்பது, சாதனம் ஒன்றின் தொடர்பில் அச்சாதனம் தகுந்த தொகைக்குக் குறையாத ஒட்டு முத்திரையொன்றை அல்லது பொறித்திட்ட முத்திரையொன்றைக் கொண்டுள்ளது எனவும், அத்தகைய முத்திரை, ஒட்டு முத்திரையொன்ருகவிருக்குமிடத்து, இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க அத்தகை முத்திரை ஒட்டப்பட்டுப் பொறித்தழிக்கப்பட்டுள்ளது எனவும் பொருள்படும்;

"எழுதி நிறைவேற்றப்பட்டது" என்பதும், "எழுதி நிறைவேற்றுகை" என்பதும்,சாதனமொன்றின் தொடர்பில் பயன்படுத்தப்படுமிடத்து முறையே "ஒப்பமிடப்பட்டது" என்றும் "ஒப்பம்" என்றும் பொருள்படும்;

"நன்கொடை" என்பது, அசைவுள்ள அல்லது அசைவற்ற ஏதேனும் ஆதனம் பணமாகவோ பணத்தின் பெறுமதியாகவோ பிரதிபயன் எதுவுமின்றித் தன்னிச்சையாக ஓராளிடமிருந்து இன்னொருவருக்குக் கைமாற்றப்படுதல் என்று பொருள்படும்;

"பொறித்திட்ட முத்திரை" என்பது, பத்து ரூபாவை விஞ்சாத முத்திரைத் தீர்வையொன்று விதிக்கப்படற்பாலதான ஏதேனும் சாதனத்தின் தொடர்பில் புரிவெட்டியொன்றின் வழியாகப் பொறித்திட்ட முத்திரைகள் என்று பொருள்படும் என்பதுடன், அஞ்சல் அலுவலகத் தலைமையதிபதியால் வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரம் ஒன்றின் கீழ் பயன்படுத்தப்படும் அஞ்சல் பெயரச்சுப் பொறியொன்றின் வழியாக பொறித்திட்ட முத்திரைகளையும் உள்ளடக்கும்;

"சாதனம்" என்பது, எந்த ஆவணத்தினால் ஏதேனும் உரிமை அல்லது பொறுப்பு உருவாக்கப்படுகின்றதோ கைமாற்றப்படுகின்றதோ வரையறுக்கப்படுகின்றதோ, நீடிக்கப்படுகின்றதோ, அழிக்கப்படுகின்றதோ அல்லது பதியப்படுகின்றதோ அல்லது அவ்வாறு செய்யப்பட்டதாகக் கொள்ளப்படுகின்றதோ அந்த ஆவணம் ஒவ்வொன்றையும்உள்ளடக்கும்,
"சந்தைப்படுத்தற்பாலதான பிணைப்பொறுப்பு" என்பது, ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட பங்குத் தொகுதிச் சந்தையில் விற்பனை செய்யப்பட இயலுமானதான பிணைப் பொறுப்பொன்றென்று பொருள்படும்;

"பணம்" என்பது இலங்கை நாணயத்திலாயினுஞ் சரி, அந்நிய நாணயத்திலாயினுஞ்சரி, எடுத்தியம்பப்பட்ட எல்லாப் பணத் தொகைகளையும் உள்ளடக்கும்;

"காப்புறுதிப் பூட்கை" என்பது—

(அ) ஆளொருவர் எந்தச் சாதனத்தின் மூலமாக கட்டுப்பணமொன்றின் பிரதிபயனாக, அறியாத அல்லது எதிர்பாராத சம்பவமொன்றிலிருந்து எழும் இழப்பிற்கு, சேதத்திற்கு அல்லது பொறுப்புக்கு எதிராக வேறொருவருக்கு, நட்டோத்தரவாதமளிக்கவென ஈடுபடுத்தப்படுகின்றாரோ அந்தச் சாதனம் எதனையும்;

(ஆ) ஆயுட்காலப் பூட்கையொன்றையும், விபத்துக்கெதிராக அல்லது நோய்க்கெதிராக ,ஆளெவரையும் காப்புறுதி செய்கின்ற ஏதேனும் பூட்கையையும் அல்லது அத்துடன் ஏதேனும் தனிப்பட்ட காப்புறுதியையும்; அத்துடன்

(இ) வலுவில் வைத்திருக்கும் நோக்கத்துக்கென, எந்தத் தீக் காப்புறுதிப் பூட்கையின் தொடர்பில், பூட்கையானது ஆறு மாதங்களுக்கும் அதிகமான காலப்பகுதிக்கு ஆரம்பத்தில் அளிக்கப்பட்டிருந்திருப்பின் விதிக்கப்படற்பாலதாக இருந்திருக்கக் கூடிய முத்திரைத் தீர்வை ஏற்கனவே செலுத்தப்பட்டில்லாதிருக்கின்றதோ அந்தப் பூட்கையொன்றின் புதுப்பித்தலையும் அத்துடன், அதன் முந்திய புதுப்பித்தல் எதுவுமிருப்பின் அதனையும் சான்றுபடுத்தும் ஏதேனும் எழுத்தாவணத்தையும் உள்ளடக்கும்;

''அற்றோணித் தத்துவம்'' என்பது, ஏதேனும் சாதனத்தை எழுதி நிறைவேற்றும் ஆளுக்குப் பதிலாகவும் அவ்வாளின் பெயரிலும் செயலாற்றுவதற்கென குறித்துரைக்கப்பட்ட ஆளொருவருக்குத் தத்துவமளிக்கும் ஏதேனும் சாதனத்தை உள்ளடக்கும்;

''வாக்குறுதிப் பத்திரம்'' என்பது, மாற்றுண்டியல்கள் கட்டளைச் சட்டத்தில் வரைவிலக்கணம் கூறப்பட்டவாறான ஒரு வாக்குறுதிப் பத்திரம் என்று பொருள்படும்; அத்துடன் உளதாயிருக்கக்கூடிய அல்லது உளதாயிருக்கக் கூடியதல்லாத ஏதேனும் குறிப்பிட்ட நிதியிலிருந்து, அல்லது புரியப்படக்கூடிய அல்லது புரியப்படக்கூடியதல்லாத அல்லது நிகழக்கூடிய அல்லது நிகழக்கூடியதல்லாத ஏதேனும் நிபந்தனையின் மீது அல்லது எதிர்பாராத சம்பவத்தின் மீது ஏதேனும் பணத்தொகையின் கொடுப்பனவை வழங்குவதற்கு உறுதியளிக்கும் பத்திரமொன்றையும் உள்ளடக்கும்.

''ஆதனம்'' என்பது, அசைவுள்ளதும் அத்துடன் அசைவற்றதுமான ஆதனம், என்று பொருள்படும்; அத்துடன் ஆதனத்திற்குரிய உரிமையொன்றையும் அல்லது அதிலுள்ள ஏதேனும் அக்கறையையும் உள்ளடக்கும்;

''பகிரங்க கூட்டுத்தாபனம்'' என்பது கம்பனிகள் கட்டளைச் சட்டம் அல்லது 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டம் தவிர்ந்த வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டுள்ளதும் அல்லது தாபிக்கப்படுவதும், கொடையென்ற வகையில், கடன் என்ற வகையில் அல்லது வேறுவகையில் அரசாங்கத்தினால் முழுமையாகவோ பகுதியளவிலோ உதவப்பட்ட மூலதனத்தை அல்லது நிதியங்களைக் கொண்டதுமான ஏதேனும் கூட்டுத்தாபனம் சபை அல்லது வேறு குழு என்று பொருள்படும்;

''பற்றுச்சீட்டு'' என்பது—

(அ) ஏதேனும் பணம், அல்லது ஏதேனும் மாற்றுண்டியல், காசோலை அல்லது வாக்குறுதிப் பத்திரம் கிடைக்கப்பெற்றமை பற்றி ஒப்புக் கொள்ளப்படுகின்ற; அல்லது

(ஆ) தனிசொன்றைத் தீர்க்கும் வகையில் வேறு ஏதேனும் அசைவுள்ள ஆதனம் கிடைக்கப்பெற்றுள்ளமை பற்றி ஒப்புக்கொள்ளப்படுகின்ற; அல்லது

(இ) ஏதேனும் தனிசு அல்லது கோரிக்கை அல்லது தனிசொன்றின் அல்லது கோரிக்கையொன்றின் ஏதேனும் பாகம் தீர்க்கப்பட்டிருப்பதாக அல்லது பொறுப்பு விடுவிக்கப்பட்டிருப்பதாக ஒப்புக் கொள்ளப்படுகின்ற; அல்லது

(ஈ) ஏதேனும் ஒப்புக்கோடல் அது ஆளெவரினதும் பெயருடன் ஒப்பமிடப்பட்டிருப்பினுஞ் சரி, ஒப்பமிடப்பட்டிராவிடினுஞ் சரி, அத்தகைய ஒப்புக்கோடலைக் குறிக்கின்ற அல்லது தெரிவிக்கின்ற,

ஏதேனும் பத்திரத்தை, விபரக்குறிப்பை அல்லது எழுத்தாவணத்தை உள்ளடக்கும்;

''பங்குச் சான்றிதழ்'' என்பது, ஏதேனும் கூட்டிணைக்கப்பட்ட கம்பெனியில் அல்லது கூட்டிணைக்கப்பட்ட கம்பெனியின் அல்லது வேறு கூட்டிணைக்கப்பட்ட குழுவில் அல்லது குழுவின் எவையேனும் பங்குகளுக்கு பங்குத் தொகுதி சான்றிதழுக்கு, பங்குத் தொகுதிக்கு அல்லது தொகுதிக் கடன் தொக்குக்கு ஆயினுஞ்சரி, அல்லது அத்தகைய ஏதேனும் கம்பெனியில் அல்லது கம்பெனியின் அல்லது குழுவில் அல்லது குழுவின் பங்குகளுக்கு, பங்குத்தொகுதிச் சான்றிதழுக்கு, பங்குத் தொகுதிக்கு அல்லது தொகுதிக் கடன் தொகுதிக்கு உரிமையாளராக வருவதற்காயினுஞ்சரி, சான்றிதழை வைத்திருப்பவரின் அல்லது வேறு எவரேனும் ஆளின் உரிமைக்கு அல்லது உரித்துக்குச் சான்றளிக்கும் ஒரு சான்றிதழ் அல்லது வேறு ஆவணம் என்று பொருள்படும்;

''பெறுமதி'' என்பது —

(அ) நன்கொடையாக வழங்கப்படும் அசைவற்ற ஆதனம் அல்லாத வேறு ஏதேனும் ஆதனம் தொடர்பிலும், ஏதேனும் தேதி தொடர்பிலும் வரிமதிப்பீட்டாளரின் அபிப்பிராயத்தின்படி அந்தத் தேதியில் அவ்வாதனம் கட்டுப்பாடற்ற சந்தையில் என்ன விலையைப் பெற்றிருக்கக் கூடுமோ அந்த விலை என்று பொருள்படும்,

(ஆ) 1977 மார்ச்சு 31ஆந் தேதியன்று அல்லது அதற்கு முன் கொடையளிப்பவரால் கொள்ளப்பட்ட அசைவற்ற ஆதனமாயிருக்கின்ற நன்கொடையாக வழங்கப்பட்ட ஏதேனும் அசைவற்ற ஆதனம் தொடர்பில் —

(i) வரிமதிப்பீட்டாளரின் அபிப்பிராயப்படி, அவ்வாதனம் 1972 மார்ச்சு 31ஆம் தேதியன்று கட்டுப்பாடற்ற சந்தையில் விற்

கப்பட்டிருப்பின், 1977 மார்ச்சு 31 ஆம் தேதிக்கு பின்னரும்அத்தகைய ஆதனம் எந்தச் சாதனத்தின் மூலம் நன்கொடையாக வழங்கப்பட்டதோ அந்தச்சாதனத்தின் தேதிக்குமுன்னரும் அத்தகைய ஆதனத்திற்கு சீர்திருத்தங்கள், மாற்றங்கள், சேர்ப்புக்கள் எவையேனும் செய்யப்பட்டிருப்பின் அவற்றின் செலவுத் தொகைக்குச் சமமான ஒரு தொகையால் அதிகரிக்கப்பட்டதாக என்ன விலையைப் பெற்றிருக்கக் கூடுமோ அந்த விலையில்; அல்லது

(ii) எந்தச் சாதனத்தின் மூலம் அத்தகைய ஆதனம் நன்கொடையாக வழங்கப்பட்டதோ அந்தச் சாதனத்தின் தேதியன்று அவ்வாதனம் கட்டுப்பாடற்ற சந்தையில் விற்கப்பட்டிருப்பின் அது என்ன விலையை பெற்றிருக்கக் கூடும் என மதிப்பீட்டாளர் அபிப்பிராயப்படுகின்றாரோ அந்த விலையில்

எது குறைவாய் இருக்கின்றதோ அது என்று பொருள்படும்;

(இ) 1977 மார்ச் 31 ஆம் தேதிக்குப் பின்னர் கொடையளிப்பவரால் கொள்ளப்பட்ட அசையற்ற ஆதனமாயிருக்கின்ற, நன்கொடையாக வழங்கப்பட்ட ஏதேனும் அசையற்ற ஆதனத்தின் தொடர்பில்—

(i) வரிமதிபீட்டாளரின் அபிப்பிராயப்படி, அத்தகைய ஆதனம் கொடையளிப்பவரால் கொள்ளப்பட்ட தேதியன்று கட்டுப்பாடற்ற சந்தையில் விற்கப்பட்டிருப்பின், அவ்வாதனம் கொடையளிப்பவரால் கொள்ளப்பட்ட தேதிக்குப் பின்னரும், அத்தகைய ஆதனம் எந்தச் சாதனத்தின் மூலம் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளதோ அந்தச் சாதனத்தின் தேதிக்கு முன்னரும் அத்தகைய ஆதனத்திற்குச் சீர்திருத்தங்கள், மாற்றங்கள், சேர்ப்புகள் எவையேனும் செய்யப்பட்டிருப்பின் அவற்றின் செலவுத் தொகைக்குச் சமமான ஒரு தொகையால் அதிகரிக்கப்பட்டதாக என்ன விலையைப் பெற்றிருக்கக்கூடுமோ அந்த விலையில்; அல்லது

(ii) எந்தச் சாதனத்தின் மூலம் அத்தகைய ஆதனம் நன்கொடையாக வழங்கப்பட்டதோ அந்தச் சாதனத்தின் தேதியன்றுஅவ்வாதனம் கட்டுப்பாடற்ற சந்தையில் விற்கப்பட்டிருப்பின் அது என்ன விலையைப் பெற்றிருக்க கூடுமென வரிமதிப்பீட்டாளர் அபிப்பிராயப்படுகின்றாரோ அந்த விலையில்,

எது குறைவாக இருக்கின்றதோ அது என்று பொருள்படும்;

''எழுதுக'' என்பது, அதன் இலக்கண வேறுபாடுகளுடன் ஒத்த சொல்லமைப்புக்களுடனும், சொற்களை அல்லது இலக்கங்களை ஒரு பொருளின் மீது என்னென்ன முறையில் எடுத்தியம்ப முடியுமோ அம்முறை ஒவ்வொன்றையும் உள்ளடக்கும்.